தமிழ்

ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள்

10

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்

ஆங்கிலோ – இந்தியப் பள்ளிகள்

(Anglo - Indian Schools)

தமிழ்ப் பாடநூல்

பத்தாம் வகுப்பு

மனிதத்தன்மையற்ற செயல்
தீண்டாமை : ஒரு பாவச்செயல்
ஒரு பெருங்குற்றம்

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
சென்னை

© தமிழ்நாட்டு அரசு
முதல் பதிப்பு—1983

ஆசிரியர்கள்:

புலவர் எஸ். எம். சேவியர்,
தமிழாசிரியர்,
தூய மரியன்னை மேல் நிலைப் பள்ளி,
சென்னை-600 001

புலவர் ல. சண்முகசுந்தரம்,
துணைத் தலைமையாசிரியர்,
ஐ.சி.ஐ. அரசு மேல் நிலைப் பள்ளி,
தென்காசி -627 811

விலை: ரூ. 5.00

மேலாய்வாளர்:
புலவர் தணிகை உலகநாதன்,
ஓய்வுபெற்ற தமிழாசிரியர்,
இராசாசி நகர், வில்லிவாக்கம்,
சென்னை-600 049

இந்நூல் இந்திய அரசு சலுகை விலையில் வழங்கிய 60 ஜி.எஸ்.எம் தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

அச்சிட்டோர்:
மெய்ப்பொருள் அச்சகம், சென்னை-600 023

தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா.

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா.

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா.

தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா.

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்

நாட்டுப்பண்—பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும் மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச்செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!

தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் - பொருளாதார குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்கு எழில் ஒழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநல் திருநாடும்;
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

—'மனோன்மணீயம்' பெ. சுந்தரம் பிள்ளை

பொருளடக்கம்

செய்யுட்பகுதி

		பக்கம்
I. வாழ்த்து		
1. திருவருட்பா	....	1
2. சீறாப்புராணம்	...	1
II. அறவுரை		
1. திருக்குறள்	...	4
2. இனியவை நாற்பது	....	8
III. தொடர்நிலைச் செய்யுள்		
1. சிலப்பதிகாரம்	...	10
2. கம்பராமாயணம்	...	14
3. பெரிய புராணம்	....	19
4. இரட்சணிய யாத்திரிகம்	...	25
IV. பல்சுவைப் பாடல்கள்		
1. புறநானூறு	...	29
2. கலிங்கத்துப் பரணி	...	29
3. முக்கூடற்பள்ளு	....	30
4. பாண்டியன் பரிசு	...	30

மனப்பாடப் பகுதிகள்

1. திருவருட்பா	4
2. சீறாப்புராணம்	4
3. திருக்குறள் (1—10)	20
4. இனியவை நாற்பது (1—4)	16
5. சிலப்பதிகாரம் (1—14)	14
6. கம்பராமாயணம் (7, 8)	8
7. பெரிய புராணம் (6)	4
8. இரட்சணிய யாத்திரிகம் (4, 5)	8
9. புறநானூறு (3)	4
10. கலிங்கத்துப் பரணி (1, 2)	8
11. முக்கூடற் பள்ளு (1, 2)	8
12. பாண்டியன் பரிசு	4
	102

உரைநடைப் பகுதி

			பக்கம்
1.	உலகப் பேரேடு — டாக்டர் மு. வரதராசனார்	....	36
2.	அறிஞர் அண்ணா — திரு. அ. மறைமலையான்	....	41
3.	நல்ல மரமும் நச்சு மரமும் — டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை	....	47
4.	புதுமை கண்டவர் — திரு. எஸ். எம். சேவியர்	...	53
5.	ஆங்கிலப் புலவரும் அருந்தமிழ்க் கவிஞரும் — திரு. வி. கணபதி	....	57
6.	இதுதான் தொலைக்காட்சி நிலையம் — திரு. வெ. நல்லதம்பி	...	63
7.	விளையாட்டுக் கலை — திரு. ல. சண்முகசுந்தரம்	....	69
8.	மஞ்சள் மாளிகை — திரு. மணவை ப. கிரன்	....	75
9.	தொல்காப்பிய அறிவியல் — திரு. மீ. ப. சோமு	...	80
10.	வள்ளுவரும் நாமும் — இரசிகமணி டி. கே. சிதம்பரநாதர்	....	85
11.	தேசிய ஒருமைப்பாடு — திரு. தா. அழகுவேலனார்	...	89
12.	தூது நடந்த மூதாட்டி —திரு. தணிகை உலகநாதன்	....	94

பழம் அழுகுவதுபோல், மலர் கசங்கி மணத்தை இழந்த பிறகு கெட்ட வாடை கொள்வதுபோல், பல தத்துவங்களும் ஏற்பாடுகளும் காலச்சிறையில் கிடந்து கிடந்து கெடுவதும் பல கேடுகளை உற்பத்தி செய்வதும் இயற்கை நிகழ்ச்சி.' இதனை உணர மறுப்பது உலகை அறியாதோர் போக்கு.

—அறிஞர் அண்ணா

செய்யுட்பகுதி

1. வாழ்த்து

1. திருவருட்பா

இன்பப் பெருக்கே! அருட்கடலே!
இறையே! அழியா இரும்பொருளே!
அன்பர்க் (கு) அருளும் பெருங்கருணை
அரசே! உணர்வால் ஆம்பயனே!
வன்பர்க்(கு) அரிதாம் பரஞ்சோதி
வடிவே! வடிவேல் மணியே! எம்
துன்பத் திடரைப் பொடியாக்கி,
சுகம்தந் தருளப் பணியாயே.

—இராமலிங்க அடிகளார்

2. சீறாப்புராணம்

சிறந்தமெய்ப் பொருளை அழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமும் உணர்ந்து,
துறந்தவர் இதயா சனத்திருந் தவனைத்
தொடர்இன்ப துன்பமற் றவனைப்
பிறந்தபல் உயிரின் மனத்தள(வு) உறைந்து
பிறப்பிறப்(பு) என்றிலா தவனை,
மறந்தவர் சுவர்க்கப் பதியையும் மறந்து,
மண்ணினில் மதிமறந் தவரே.

—உமறுப்புலவர்

குறிப்புரை

(1) திருவருட்பா: திரு + அருள் + பா. இறைவன் திருவருளால் பாடப்பட்ட பாடல்கள் அடங்கிய நூல் என்பது

பொருள். இறைவனது திருவருளைப் பெறுவதற்காகப் பாடப் பட்ட பாடல்கள் அடங்கிய நூல் என்றும் பொருள் கொள்ளலாம்.

திருவருட்பாவின் ஆசிரியர் இராமலிங்க அடிகளார். இவர் சிதம்பரத்தை அடுத்த மருதூரில் பிறந்தவர். இவர் தந்தையார் இராமையாப் பிள்ளை; தாயார் சின்னம்மையார். இவர் கருணீகர் மரபைச் சார்ந்தவர். இவரது காலம் கி. பி. 1823-1874.

இவர் சமரச சன்மார்க்க நெறி தழைக்கவும் சீவகாருணிய ஒழுக்கம் பரவவும் அரும்பணிகள் ஆற்றினார்.

அருஞ்சொற்பொருள்

பெருக்கே—வெள்ளமே, இரும்பொருளே—பெரிய பொருளே வன்பர்—கொடியவர், வடிவேல்—கூரியவேல், துன்பத்திடர்—துன்பமாகிய திட்டு. இன்பப் பெருக்கு, அருட்கடல், துன்பத் திடர்—உருவகங்கள், பெருங்கருணை—பண்புத்தொகை.

குறிப்புரை

(2) சீறாப்புராணம்: 'சீறத்' என்னும் அரபுச்சொல் சீறா என மருவியது; வாழ்க்கை வரலாறு என்பது பொருள். நபிநாயகத்தின் வாழ்க்கை வரலாறு கூறும் நூலாகையால் இதற்கு இப் பெயர் வந்தது.

இதன் ஆசிரியர் உமறுப்புலவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எட்டையபுரத்தில் வாழ்ந்தவர். இவர்தம் தந்தையார் சேகு முதலியார். இவர் கடிகைமுத்துப்புலவரின் மாணாக்கர்; வள்ளல் சீதக்காதியின் அமைச்சராகிய அப்துல் காசீம் என்பவரால் ஆதரிக்கப்பட்டார். இவரது காலம் கி.பி.17 ஆம் நூற்றாண்டு.

அருஞ்சொற்பொருள்

மெய்ப்பொருள்—உண்மைப் பொருள், துறந்தவர் — ஆசைகளை நீக்கிய ஞானிகள், இதயாசனம்—மனமாகிய இருக்கை (இதயம்+ஆசனம்), இன்ப துன்பம்— (உம்மைத்தொகை), மனத்தளவு உறைந்து—எண்ணத்தின்படியே தங்கி (யார் யார் எப்படி எப்படி நினைக்கிறார்களோ அவரவர் உணர்ச்சியில் அப்படி அப்படித் தோன்றி, சுவர்க்கப்பதி—வீட்டு உலகம், மோட்சம்

பயிற்சி

I. விடை எழுதுக:

(1) இராமலிங்க அடிகளார் இறைவனின் தன்மைகளை எங்ஙனம் எடுத்துக் கூறியுள்ளார்?

(2) 'வன்பர்க்கரிதாம் பரஞ்சோதி வடிவே'—இதன் கருத்து யாது?

(3) உமறுப்புலவர் இறைவனின் தன்மைகளைக் குறித்துக் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(4) 'மறந்தவர் சுவர்க்கப் பதியையும் மறந்து மண்ணினில் மதிமறந் தவரே?' என்பதன் கருத்து யாது?

(5) உமறுப்புலவர், இராமலிங்க அடிகளார்—குறிப்புவரைக.

II. எளிய தமிழில் பொருள் தருக:

பெருக்கு =	துறந்தவர் =
வன்பர் =	இதயம் =
திடர் =	உறைதல் =
பணி =	மதி =

III. (அ) பிரித்து எழுதுக:

அருட்கடல்,	இதயாசனம்,
அரிதாம்,	பிறப்பிறப்பு.

(ஆ) சேர்த்து எழுதுக:

பொடி + ஆக்கி =	அழிவு + இலா =
தந்து + அருள =	பெருமை + கருணை =

(இ) எதிர்ச்சொல் தருக:

சுகம் ×	சிறந்த ×
அன்பர் ×	துன்பம் ×
சுவர்க்கம் ×	பிறப்பு ×

II. அறவுரை

1. திருக்குறள்

அன்புடைமை

அன்போ(டு) இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்(கு)
என்போ(டு) இயைந்த தொடர்பு. 1

இனியவை கூறல்

அல்லவை தேய அறம்பெருகும்; நல்லவை
நாடி இனிய சொலின். 2

அடக்கமுடைமை

அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். 3

பயனில சொல்லாமை

பயனில பல்லார்முன் சொல்லல், நயனில
நட்டார்கண் செய்தலின் தீது. 4

அருளுடைமை

பொருளற்றார் பூப்பர் ஒருகால்; அருளற்றார்
அற்றார்மற்(று) ஆதல் அரிது. 5

வாய்மை

புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும். 6

அறிவுடைமை

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். 7

சுற்றம் தழால்

சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன். 8

இடுக்கண் அழியாமை

வெள்ளத்து அனைய இடும்பை, அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும். 9

5

சான்றாண்மை

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)
ஆழி எனப்படு வார். 10

—திருவள்ளுவர்

குறிப்புரை

திரு — மேன்மை: குறள் — குறள்வெண்பாக்களால் ஆகிய நூல், மேன்மை பொருந்திய குறள்வெண்பாக்களால் ஆகிய நூலாகையால் இதற்கு இப்பெயர் வந்தது.

திருக்குறள் எல்லாச் சமயத்தாருக்கும் பல்வேறு மொழியாளருக்கும் பொதுவான நீதிகளைக்கூறுவதால், 'உலகப் பொதுமறை' எனப் போற்றப்படுகிறது. இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. தனிச்சிறப்புடைய இவ்வறநூல் உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

திருக்குறள் 3 பால்களையும் 133 அதிகாரங்களையும் அதிகாரத்துக்குப் பத்துப் பாடலாக 1330 குறட்பாக்களையும் கொண்டுள்ளது.

திருக்குறளை இயற்றியவர் தெய்வப்புலமைத் திருவள்ளுவர். இவர் சென்னையில் உள்ள மயிலாப்பூரில் பிறந்தார் என்று சிலர் கூறுவர்; இவர் ஊர் மதுரை என்றும் சிலர் கூறுவர். திருவள்ளுவரின் காலம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது.

அருஞ்சொற்பொருள்

1. அன்புடைமை — மனைவி, மக்கள், நண்பர், உறவினர் முதலிய தொடர்புடையாரிடத்துக் கொள்ளும் பற்று. வழக்கு என்ப — முறைமை என்று கூறுவர், இயைந்த — பொருந்திய, ஆர் உயிர் — அருமையான உயிர், என்பு — எலும்பு, இங்கு எலும்பாலாகிய உடம்பை உணர்த்துகிறது.

2. இனியவை கூறல் — நல்ல சொற்களை இனிமையாகக் கூறுதல், அல்லவை — பாவச்செயல்கள், இனிய சொலின் — இனிமையாகப் பேசினால்.

3. அடக்கமுடைமை — ஒருவன் தன் மனம், மொழி, மெய் என்னும் மூன்றையும் தீயவழியில் செல்லாமல் அடக்கிக் காத்தல், அமரருள் — தேவர்களுள் ஒருவனாக, உய்க்கும் — செலுத்தும்

இருள்— துன்பமாகிய இருள் நிறைந்த இடம், நரகம் என்றும் கூறுவர். அறியாமை என்னும் இருள் நிறைந்த கீழ்மக்கள் கூட்டத்தில் தள்ளிவிடும் என்றும் பொருள் கூறலாம். ஆர் — நிறைந்த.

4. பயனில சொல்லாமை— தமக்கும் பிறர்க்கும் சிறிதும் பயன் விளையாத சொற்களைப் பேசாமை, பயனில - பயனில்லாத சொற்களை, பல்லார்முன் – அறிவிற் சிறந்த பெரியோர் முன்பு, நயன் இல - நன்மை அல்லாத செயல்களை, நட்டார் கண்— நண்பர்களிடத்தில், கண் – ஏழாம் வேற்றுமை உருபு.

5. அருளுடைமை— எல்லா உயிர்களிடத்தும் செலுத்தும் கருணை, பூப்பர்— பொலிவர், பொருள் ஈட்டுவர். அருள் அற்றார் அற்றார்—அருளை இழந்தவர் எல்லாவற்றையும் இழந்தவரே, ஒருகால் - ஒருசமயம். இச்செய்யுள் சொற்பொருட் பின்வரு நிலையணி.

6. வாய்மை— உண்மையினது தன்மை (மெய்ம்மை), புறம் — உடம்பும் உடம்பின் புறத்தே தெரியும் கை, கால் முதலிய உறுப்புகளும், அகம்—மனம்.

7. அறிவுடைமை— கல்வி கேள்விகளினால் ஆகிய அறிவோடு உண்மையான அறிவைப் பெறுதல், என்னுடையரேனும்— எல்லா நலன்களும் உடையவராக இருப்பினும், எல்லாம்— நிலம் நீர், ஏவலாளர், பொன், பதவி முதலிய செல்வங்கள்.

8. சுற்றம் தழால்— சுற்றத்தினரை ஆதரித்தல், தழால் —தழுவல் (ஆதரித்தல்), பெற்றதால் என்பது பெற்றத்தால் என விரித்தல் விகாரமாயிற்று.

9. இடுக்கண் அழியாமை— துன்பம் வந்தபோது மனம் வருந்தாதிருத்தல், அனைய — போன்ற, இடும்பை— துன்பம், உள்ளத்தின் உள்ள—உள்ளத்தில் அவை வந்த தன்மையினைச் சிறிது நினைத்துப் பார்க்க, கெடும் — நீங்கிவிடும்.

10. சான்றாண்மை —நற்குணங்களால் நிறைந்து விளங்கும் தன்மை, ஊழிபெயரினும்— காலமும் விதியும் மாறுபட்டாலும், ஆழி எனப்படுவார் —கரை போன்றவர், (சால்புடைமையாகிய கடலுக்குக் கரைபோன்ற நல்லவர்கள்), தாம் பெயரார் — தம் நிலையிலிருந்து தடுமாறமாட்டார்கள்.

பயிற்சி

I. விடை எழுதுக:

(1) அன்பின் இயல்பை வள்ளுவர் எவ்வாறு விளக்குகிறார்?
(2) இனியவை கூறுவதால் ஏற்படும் நன்மை யாது?
(3) அடக்கத்தால் வரும் நன்மை யாது? அடங்காமையால் வரும் தீமை யாது?
(4) நண்பர்க்குக் கேடு செய்வதைவிடக் கொடியது எது?
(5) பொருளற்றார்க்கும் அருளற்றார்க்கும் உள்ள வேறுபாட்டை விளக்குக.
(6) வாய்மையைக் குறித்து வள்ளுவர் கூறுவது யாது?
(7) அறிவுடைமைபற்றிக்குறள் கூறும் கருத்தினை விளக்குக.
(8) செல்வம் பெற்றதன் பயன் யாது?
(9) 'அறிவுடையான் உள்ளத்தின் உள்ளக் கெடும்'— எது?
(10) சான்றோரின் தன்மை யாது?

II. எளிய தமிழில் பொருள் தருக:

இயைந்த =	அகம் =	என்பு =
இடும்பை =	ஊழி =	நாடி =
நயன் =	தழால் =	வாய்மை =
ஆழி =		

III. (அ) பிரித்து எழுதுக:

வழக்கென்ப, அறிவுடையார், நயனில, ஆருயிர், பொருளற்றார்.

(ஆ) சேர்த்து எழுதுக:

அன்போடு + இயைந்த = பயன் + இல =
புறம் + தூய்மை = என் + உடையர் =

(இ) எதிர்ச்சொல் தருக:

அடக்கம் ×	அல்லவை ×
புறம் ×	தீது ×

IV. பின்வரும் குறட்பாக்களுக்குத் திரண்ட கருத்துத் தருக:

(1) பொருளற்றார் பூப்பர் ஒருகால்; அருளற்றார்
அற்றார் மற்(று)ஆதல் அரிது.

(2) ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)
ஆழி எனப்படு வார்.

2. இனியவை நாற்பது

அதர்சென்று வாழாமை ஆற்ற இனிதே;
குதர்சென்று கொள்ளாத கூர்மை இனிதே;
உயிர்சென்று தாம்படினும் உண்ணார்கைத்(து)உண்ணாப்
பெருமைபோல் பீடுடைய(து) இல். 1

கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே;
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்இனிதே;
எட்டுணை யானும் இரவாது தான்ஈதல்
எத்துணையும் ஆற்ற இனிது. 2

ஆற்றானை ஆற்றென்(று) அலையாமை முன்இனிதே;
கூற்றம் வரவுஉண்மை சிந்தித்து வாழ்வு இனிதே;
ஆக்கம் அழியினும் அல்லவை கூறாத
தேர்ச்சியில் தேர்(வு) இனியது இல். 3

நன்றிப் பயன்தூக்கி வாழ்தல் இனிதே;
மன்றக் கொடும்பாடு உரையாத மாண்(பு) இனிதே;
அன்றறிவார் யாரென்(று) அடைக்கலம் வெளவாத
நன்றியின் நன்(கு) இனியது இல். 4

—பூதஞ்சேந்தனார்

குறிப்புரை

வாழ்க்கையில் இன்பம் பயப்பவை இவை இவை எனச் சுட்டிக் காட்டும் நூலாகையால் இதற்கு இப்பெயர் வந்தது. இது நாற்பது பாடல்களால் ஆகிய நூல். இந்நூலும் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று.

இனியவை நாற்பது இயற்றியவர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார் என்பவர். இவரது காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்பர்.

அருஞ்சொற்பொருள்

1. அதர்சென்று—மனம் போன வழிகளில் சென்று, குதர்—தவறான வழி, கூர்மை—அறிவுக் கூர்மை; பீடு—பெருமை, உண்ணார் கைத்து—உண்ணத்தகாதவர் கையில் உள்ள உணவு, ஆற்ற—மிக மிக.

2. முன்—முன்னிலையில், மிக்காரை—அறிவினால் பெரியவர்களை, எட்டுணையானும்—(எள்+துணையானும்) எள்ளின் அளவு கூட, இரவாது—யாசிக்காமல், எத்துணையும்—எல்லா வகையிலும்.

3. ஆற்றானை—ஒரு செயலைச் செய்து முடிக்கும் ஆற்றல் இல்லாதவனை, கூற்றம்—எமன் (மரணம்), ஆக்கம்—செல்வம் அல்லவை—பொய்யானவற்றை, தேர்ச்சி—தெளிவு.

4. நன்றிப் பயன் தூக்கி—ஒருவர் செய்த உதவியின் பயனை நினைந்து (நன்றி மறவாமல்), மன்றம்—நீதிமன்றம், கொடும்பாடு—முறையற்ற வழக்கு, அன்று அறிவார்—அடைக்கலம் வைத்து அன்று அறிந்தவர், யார் என்று—ஒருவரும் இல்லை என்று நினைத்து, வெளவாத—அபகரித்துக்கொள்ளாத, நன்றி—நியாயம், நேர்மை.

பயிற்சி

I. விடை எழுதுக:

(1) 'பெருமைபோல் பீடுடையது இல்'—பெருமை எது?

(2) 'எத்துணையும் ஆற்ற இனிது' என்று இனியவை நாற்பது எதனைக் குறிப்பிடுகிறது?

(3) பூதஞ்சேந்தனார், 'தேர்வு இனியது இல்' என எதனைக் குறிப்பிடுகிறார்?

(4) இனியவை நாற்பது அடைக்கலப் பொருள்பற்றிக் கூறுவது யாது?

II. எளிய தமிழில் பொருள் கூறுக:

அதர், இரவாது, ஆக்கம், வெளவாத.

III. (அ) பிரித்து எழுதுக:

பீடுடையது, அன்றறிவார், எட்டுணையானும் யாரென்று.

(ஆ) சேர்த்து எழுதுக:

ஆற்று + என்று =   முன் + இனிது =
மாண்பு + இனிது =   தேர்வு + இனியது =

௨

III. தொடர்நிலைச்செய்யுள்

1 சிலப்பதிகாரம்

வழக்குரை காதை

கதைச்சுருக்கம்

கோவலன் கண்ணகியுடன் அவளது காற்சிலம்பை விற்க மதுரை மாநகர் சென்றான். அங்கு அவன் அரண்மனைக் காவலரால் கள்வன் எனக் கொலை செய்யப்பட்டான். கணவனை இழந்த கண்ணகி கண்ணீரும் கம்பலையுமாய்ப் பாண்டியனின் அரண்மனை வாயிலை அடைந்தாள். காவலன் அவளை அழைத்துச்சென்று பாண்டியன் முன்னே நிறுத்தினான்.

கண்ணகியின் தோற்றத்தையும் துயரத்தையும் கண்ட பாண்டியன், "கண்ணீரும் கம்பலையுமாய் வந்து நிற்கும் பெண்ணே! நீயார்?" என்று கேட்டான், கண்ணகி, "என் காற்சிலம்பை விற்க வந்து, நின்னால் கொல்விக்கப்பட்ட கோவலனின் மனைவி நான். என் பெயர் கண்ணகி," என்றாள்.

பாண்டியன் கண்ணகியை நோக்கி, "பெண்ணே! நின் கணவன் கள்வன். கள்வனைக் கொல்லுதல் கடுங்கோலன்று; அரச நீதியே," என்றான். கண்ணகி. "வேந்தே! என் கணவன் கள்வன் அல்லன். என் சிலம்பில் உள்ள கற்கள் மாணிக்கப்பரல்கள்," என்றாள். பாண்டியன் திகைத்தான்; "என் மனைவி கோப் பெருந்தேவியின் சிலம்பில் உள்ளவை முத்துப்பரல்கள்," என்றான்; கோவலனிடமிருந்து கைப்பற்றப்பட்ட சிலம்பைக் கொண்டுவரக் காவலனுக்குக் கட்டளையிட்டான். கண்ணகி அந்தச் சிலம்பை வாங்கித் தரையில் ஓங்கி எறிந்தாள். அந்தச் சிலம்பில் இருந்த மாணிக்கப்பரல்கள் அரசனின் முகத்தில் தெறித்தன.

மாணிக்கப் பரல்களைக் கண்ட பாண்டியன், "யானோ அரசன்! யானே கள்வன்! என் ஆயுள் கெடுக!," என்று கூறிக் கீழே விழுந்து இறந்தான். மன்னன் இறந்ததைக் கண்ட கோப்பெருந்தேவியும் அவனுடன் உயிர் துறந்தாள்.

"நீ யார்?" என்ற பாண்டியனிடம் கண்ணகி கூறுதல்

"தேரா மன்னா! செப்புவ துடையேன்:
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்

புள்ளுறு புன்கண் தீர்த்தோ னன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்றன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே; அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி,
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா! நின்னகர்ப் புகுந்திங்(கு)
என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி, நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி;
கண்ணகி யென்பதென் பெயரே,'' என,

அரசன் உண்மை தெளிதல்

"பெண்ணணங்கே!
கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று;
வெள்வேற் கொற்றங் காண்,'' என, ஒள்ளிழை,
"நற்றிறம் படராக் கொற்கை வேந்தே!
என்காற் சிலம்பு மணியுடை யரியே'', எனத்
"தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி!
யாமுடைச் சிலம்பு முத்துடை யரியே,''
'தருகெ'னத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி யணிமணிக் காற்சிலம்பு உடைப்ப,
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே;

மன்னனின் மாண்பு

மணிகண்டு,
தாழ்ந்த குடையன்; தளர்ந்தசெங் கோலன்;
....
யானோ வரசன்! யானே கள்வன்!
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதற் பிழைத்தது! கெடுகவென் ஆயுள்!'' என
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே; தென்னவன்

கோப்பெருந்தேவியின் கற்பு மாண்பு

கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்
"கணவனை யிழந்தோர்க்குக் காட்டுவ தில்,'' என்
றிணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி.

—இளங்கோவடிகள்

குறிப்புரை

சிலம்பு + அதிகாரம் — சிலப்பதிகாரம்: கண்ணகியின் சிலம்பால் அதிகரித்த கதையைச் சொல்வதால் இந்நூல் சிலப் பதிகாரம் எனப் பெயர் பெற்றது. இஃது ஐம்பெருங்காப்பியங் களுள் ஒன்று. இயல், இசை, நாடகம் என்னும் முத்துறைகளும் விரவிவரத் தொடுக்கப்பட்ட நூலாகையால் இதற்கு 'முத்தமிழ்க் காப்பியம்' என ஒரு பெயரும் உண்டு.

சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள். இவர் தம் பெற்றோர் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், நற்சோணை. இவர் சேரன் செங்குட்டுவனுடைய தம்பி. இவர்தம் அண்ணனுக் காக இளமையில் துறவு பூண்டமையால் இளங்கோவடிகள் எனப்பட்டார். இவரது காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு.

அருஞ்சொற்பொருள்

1—14 அடிகள்: தேரா – (உண்மையை)ஆராய்ந்தறியமாட்டாத என் அறு – இகழ்ச்சி அற்ற, புள் உறு—ஒரு புறாவுக்கு உண்டான, புன்கண்—துன்பம், தீர்த்தோன்—போக்கியவன் (சிபி மன்னன்), ஆவின்—பசுவினது, கடைமணி – கண்ணின் கருமணிக் கடையி லிருந்து, அரும்பெறல் புதல்வன் — பெறுவதற்கு அருமையான மைந்தன் (வீதிவிடங்கன்), ஆழி – தேர்ச்சக்கரம், மடித்தோன் — கொல்வித்தவன் (மனுநீதிச் சோழன்— வினையாலணையும் பெயர்) ஏசா—குற்றமற்ற, இசை – புகழ், துரப்ப – செலுத்து தலால், பகர்தல் வேண்டி —விற்பதற்காக, கடைமணி— மணியினது கடை (முன்பின்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை).

15—௨௨ அடிகள்: பெண் அணங்கே – தெய்வப்பெண்போன்ற வளே, கோறல் — (கொல் + தல்) — கொல்லுதல், (முதனிலை திரிந்த தொழிற்பெயர்), வெள்வேல் கொற்றம் — அரசநீதியே ஆகும், இழை—அணி, ஒள்ளிழை – ஒளி பொருந்திய அணிகளை அணிந்த கண்ணகி (பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன் மொழித்தொகை), நற்றிறம் படரா - நல்ல நெறியிற் செல் லாத, (நன்மை + திறம் — பண்புத்தொகை), தேமொழி— கண்ணகி (உவமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை), யாமுடை — எம்முடைய, வாய்முதல் – முகத்தினிடத்து அணி மணி கால் சிலம்பு — அழகிய மாணிக்கப் பரல்களை உள் வைத்துச் செய்யப்பட்ட சிலம்பு, பரல் – பருக்கைக்கல்.

23—31 அடிகள்: மன்பதை — குடிமக்களை, தென்புலம்— (தெற்கு+புலம்) தென்னாடாகிய பாண்டி நாட்டின், காவல்— ஆட்சி (தொழிலாகு பெயர்), என் முதல் பிழைத்தது - என்னை முதலாகக் கொண்டு தவறியது, என் ஆயுள் கெடுக - என் வாழ்நாள் ஒழிவதாக (நான் இறப்பேனாக), மயங்கி — அறிவு கலங்கி.

பயிற்சி

I. சுருக்கமாக விடை எழுதுக:

(1) 'நீ யார்?' என்று கேட்ட பாண்டியனிடம் கண்ணகி கூறிய விடை யாது?

(2) தன் கணவன் கள்வன் அல்லன் என்பதைக் கண்ணகி எவ்வாறு விளக்கினாள்?

(3) தான் செய்தது தவறு என்பதை உணர்ந்த பாண்டியன் யாது செய்தான்?

(4) கோப்பெருந்தேவியின் கற்பு மாண்பினை விளக்கி எழுதுக.

II. (அ) 'கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று'

(1) இங்ஙனம் கூறியவன் யார்?

(2) கள்வன் என்று யாரைக் குறிப்பிட்டான்?

(3) கடுங்கோல் என்பது எதனைக் குறிக்கும்?

(ஆ) 'தேரா மன்னா! செப்புவது உடையேன்'

(1) இது யார் கூற்று?

(2) யாரிடம் கூறப்பட்டது?

(3) தேரா மன்னன் என்றது எவ்வாறு பொருந்தும்?

III. (அ) பிரித்து எழுதுக:

நற்றிறம், தென்புலம், புகுந்திங்கு, பெருங்குடி

(ஆ) எதிர்ச்சொல் எழுதுக:

கடுங்கோல் × வீழ்ந்தனள் ×

தருக × நன்மொழி ×

2. கம்பராமாயணம்

கைகேயி சூழ்வினைப் படலம்

கதைச்சுருக்கம்

அயோத்தியில் இராமனின் முடிசூட்டு விழாவுக்குரிய ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. இராமன், தந்தை தசரதரைக் காணப் புறப்பட்டான். தந்தை தசரதர் சிற்றன்னை கைகேயியின்அரண்மனையில்இருப்பதை அறிந்துஅங்குத்தேரேறிச் சென்றான். இராமன் தேரேறி வரும் கோலத்தைக் கண்டு அயோத்தி மக்கள் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தார்கள். இராமன் கைகேயியின் அரண்மனையை அடைந்தான். கைகேயி இராமனை நோக்கி, "இராமா! உன் தந்தை உனக்கிட்ட கட்டளை ஒன்றுளது," என்றாள். உடனே இராமன், "அன்னையே! தந்தையிட்ட கட்டளையைத் தாயாகிய உம்மிடம் கேட்பது என்னுடைய பெரும் பேறாகும்," என்றான்.

கைகேயி, "நாட்டைப் பரதனே ஆள வேண்டும் எனவும் நீ, பதினான்கு ஆண்டுகள் காடு செல்ல வேண்டும் எனவும் உன் தந்தை உனக்குக் கட்டளைஇட்டுள்ளார்," என்றாள்.

இராமனுடைய முகத்தில் எந்த மாற்றமும் நிகழவில்லை. உணர்ச்சியிலும் மாற்றம் ஏற்படவில்லை. கைகேயியின் திருவடிகளில் விழுந்து வணங்கிய இராமன், "தாயே! தம்பி பரதன் பெற்ற செல்வம் யான் பெற்றதே ஆகும். கட்டளையை ஏற்றேன்; கானகம் செல்கின்றேன்; விடை தந்தருள வேண்டும்," என்று வேண்டினான்.

[தேரேறிவரும் இராமனைக் கண்ட மக்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். "இராமனுடைய ஆட்சியில் நல்லனவே நடக்கும்; மக்கள் ஆட்சியே மலரும்," என்று மகிழ்ந்தார்கள்.]

பாவமும் அருந்துயரும் வேர்பறியும் என்பார்;
பூவலயம் இன்றுதனி அன்று, பொது என்பார்;
தேவர்பகை உள்ளனஇவ் வள்ளல்தெறும் என்பார்;
ஏவல்செயும் மன்னர்தவம் யாவதுகொல் என்பார். (1)

[அயோத்தி மக்கள் இவ்வாறு மகிழ, இராமனுடைய தேர் தசரதர் தங்கி இருக்கும் கைகேயியின் அரண்மனையில் வந்து நின்றது.]

ஆண்டிளைய ராய்இளைய கூற, அடல் வீரன்
தூண்டுபுர விப்பொருவில் சுந்தர மணித்தேர்
நீண்டகொடி மாடம்நிறை வீதிநிறை யப்போய்,
பூண்டபுகழ் மன்னன் உறை கோயில்புக லோடும், (2)

[தேர் வந்து நின்றது. அரண்மனையின் உள்ளிருந்து கைகேயி வந்தாள். இராமன் அவளை வணங்கினான்.]

வந்தவள் தன்னைச் சென்னி
மண்ணுற வணங்கி, வாசச்
சிந்துரப் பவளச் செவ்வாய்
செங்கையில் புதைத்து, மற்றைச்
சுந்தரத் தடக்கைத் தானை
மடக்குறத் துவண்டு நின்றான்,
அந்திவந்(து) அடைந்த தாயைக்
கண்டஆன் கன்றின் அன்னான். (3)

[வணங்கிய மைந்தன் இராமனிடம் கைகேயி கூறுதல்]

நின்றவன் தன்னை நோக்கி
இரும்பினால் இயைந்த நெஞ்சின்
கொன்றுழல் கூற்றம் என்னும்
பெயர்இன்றிக் கொடுமை பூண்டாள்,
"இன்றெனக்(கு) உணர்த்த லாவ(து)
ஏயதே என்னின் ஆகும்.
ஒன்றுனக்(கு) உந்தை மைந்த,
உரைப்பதோர் உரையுண்(டு)" என்றாள். (4)

["தந்தையின் கட்டளையைத் தாயிடம் கேட்பது என் தவப்பேறு," என்றான் இராமன்.]

"எந்தையே ஏவ, நீரே
உரைசெய, இயைவ(து) உண்டேல்,
உய்ந்தனன் அடியேன்; என்னில்
பிறந்தவர் உளரோ வாழி!
வந்ததென் தவத்தின் ஆய
வருபயன்; மற்றொன் றுண்டோ?
தந்தையும் தாயும் நீரே;
தலைநின்றேன் பணிமின்," என்றான். (5)

கைகேயி இட்ட கட்டளை

"ஆழிசூழ் உலகம் எல்லாம்
பரதனே ஆள நீபோய்த்
தாழிரும் சடைகள் தாங்கித்
தாங்கரும் தவமேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப்
புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண்(டு) ஆண்டில் வாஎன்(று)
இயம்பினன் அரசன்," என்றாள். (6)

இராமனின் மகிழ்ச்சி

"இப்பொழு(து) எம்ம னோரால்
இயம்புதற்(கு) எளிதோ? யாரும்
செப்பரும் குணத்தி ராமன்
திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்பவ்
வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு(து) அலர்ந்த செந்தா
மரையினை வென்ற தம்மா!" (7)

விடை அருள வேண்டினான் இராமன்

"மன்னவன் பணிஅன் றாகில்
நும்பணி மறுப்ப னோ; என்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்ற தன்றோ?
என்இனி உறுதி அப்பால்,
இப்பணி தலைமேற் கொண்டேன்;
மின்னொளிர் கானம் இன்றே
ஏகின்றேன்; விடையும் கொண்டேன்." (8)

—கம்பர்

குறிப்புரை

'மகாகவி' என்றும் 'உலக மகாகவி' என்றும் சிறப்புப் பெற்றவர் கம்பர். கம்பரால் பாடப்பட்ட இராமாயணம் கம்ப ராமாயணம். கம்பரது இராமாயணம் எனவும் பொருள் கொள்ளலாம்.

கம்பர் சோழவள நட்டில் தேரந்தூரில் கி. பி. 9 ஆம் நூற்றாண்டில் பிறந்து வாழ்ந்தவர். கம்பரை ஆதரித்தவர் சடையப்ப வள்ளல். 'கல்வியிற் பெரியவர் கம்பர்', 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்னும் பழமொழிகள் கம்பரின் பெரும்புலமையை விளக்கும்.

அருஞ்சொற்பொருள்

1. பூவலயம் – உலகம், இன்று தனி அன்று – இதுவரை தனி உடைமையாக இருந்தது; இனி அப்படி அன்று, பொது என்பார் — பொதுவுடைமை ஆகிவிடும் என்றார்கள், இவ்வள்ளல் – இராமன், தெறும் — அழிப்பான், ஏவல் செயும் மன்னர் — சிற்றரசர்.

2. தூண்டு புரவி — விரைவாகப் பாய்ந்தோடும் குதிரை, கோயில் — அரண்மனை.

3. தானை — ஆடை, ஆன் கன்று —பசுவின் கன்று.

4. கூற்றம் - எமன், இயைந்த – பொருந்திய, உழல் - திரியும், உந்தை –(உன் + தந்தை) மரூஉமொழி, ஏயதே – பொருந்தியதே.

5 எந்தை – (என் + தந்தை) மரூஉமொழி, ஏவ—கட்டளையிட, உய்ந்தனன்—ஈடேறினேன் (புண்ணியம் செய்தேன்) தலை நின்றேன் — கட்டுப்பட்டு நிற்கிறேன், பணிமின் — கட்டளை இடுங்கள்.

6. ஆழிசூழ்—கடலால் சூழப்பட்ட, தாழ் இரும் சடைகள் — தொங்கும் பெரிய சடைகள், பூழி—புழுதி, வெங்கானம்—(வெம்மை + கானம்) ,கொடிய காடு, புண்ணியத்துறைகள் ஆடி—புண்ணியத்தைத் தரக்கூடிய நீர்த்துறைகளில் நீராடி, ஏழிரண்டாண்டு—இரண்டு ஏழாண்டுகள்(பதினான்கு ஆண்டுகள்).

7. இயம்புதற்கு எளிதோ—எடுத்துக் கூறுவதற்கு எளிதோ? (எளிதன்று), செப்ப அரும் - எடுத்து விளக்க இயலாத, செவ்வி—அழகு, அலர்ந்த—மலர்ந்த, அம்மா!—வியப்பிடைச்சொல்.

8. மன்னவன் பணி அன்று ஆகில்—தசரத மன்னனின் கட்டளையாக இல்லை எனினும், பின்னவன்—தம்பி, மின் ஒளிர் கானம் – மின்னலைப் போல வெயில் வீசும் காடு ஏகின்றேன் – போகின்றேன்.

பயிற்சி

I. விடை எழுதுக:

(1) இராமன் முடிசூடியபின் என்னென்ன நிகழும் என மக்கள் நம்பினார்கள்?

(2) இராமனின் வருகையைக் கண்ட கைகேயி அவன் முன் எவ்வாறு தோன்றினாள்?

(3) இராமன் கைகேயியிடம் அன்பும் பணிவும் உடையவன் என்பதை எவ்வாறு அறியலாம்?

(4) 'தந்தையின் கட்டளை ஒன்றுண்டு' என்று கூறிய கைகேயியிடம் இராமன் கூறியது யாது?

(5) தசரதனின் கட்டளையாகக் கைகேயி இராமனிடம் கூறியவை யாவை?

(6) கைகேயி கூறிய கட்டளையைக் கேட்ட இராமனின் மகிழ்ச்சியைக் கம்பர் எங்ஙனம் எடுத்துக் கூறியுள்ளார்?

(7) இராமன் கைகேயியிடம் விடை பெறும்போது கூறியது யாது?

II. (அ) 'தேவர் பகை உள்ளனஇவ் வள்ளல்தெறும்'

(1) இதனைக் கூறியவர் யார்?
(2) எப்போது கூறினர்?
(3) வள்ளல் என்பது யாரைக் குறிக்கும்?

(ஆ) 'எந்தையே ஏவ நீரே
உரைசெய இயைவ துண்டேல்
உய்ந்தனன் அடியேன்'

(1) எந்தை என்பது யாரைக் குறிக்கும்?
(2) நீர் என்பது யாரைக் குறிக்கும்?
(3) 'உய்ந்தனன் அடியேன்' எனக் கூறக் காரணம்யாது?

(இ) 'பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ?

(1) பின்னவன் யார்?
(2) அவன் பெற்ற செல்வம் யாது?
(3) இதனால் அறியப்படும் நீதி யாது?

III. 'இப்பொழு(து) எம்மனோரால்' எனத் தொடங்கும் பாட்லின் திரண்ட கருத்தைத் தருக.

IV. எளிய தமிழில் பொருள் தருக:

தெறும் =   கானம் =
செவ்வி =   உய்ந்தனன் =

V. (அ) எதிர்ப்பால் தருக:

வீரன் X   மகன் X
அரசன் X   தாய் X

(ஆ) வினைப்பகுதி தருக:

நின்றார்,   ஏகின்றேன்,
இயம்பினன்,   கொண்டேன்.

(இ) தொழிற்பெயர் தருக:

செய்,   வெல்,
பறி,   வா.

3. பெரிய புராணம்

பூசலார் நாயனார் புராணம்

கதைச்சுருக்கம்

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தொண்டை நாட்டை இராசசிங்கன் என்னும் பல்லவ மன்னன் ஆண்டு வந்தான். பல்லவ வேந்தன் காஞ்சிபுரத்தில் சிவபெருமானுக்கு வானளாவிய கோயில் ஒன்று கட்டினான்.

தான் கட்டிமுடித்த திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நாளைக் குறிப்பிட்டு அன்று கோயிலில் எழுந்தருளித் தன்னை யும் உலகையும் அருள்பாலித்துக் காக்க வேண்டும் என்று மன்னன் இறைவனை வேண்டினான்.

மன்னனுடைய கனவில் தோன்றிய சிவபெருமான், "அரசனே! திருநின்றஊரில் நம் அடியவனாகிய பூசலார் கட்டிய கோயிலில் குடமுழுக்கு விழா நாளை நடைபெறுகிறது. நாம் அங்கு எழுந்தருளுகிறோம். வேறொரு நாளில் உன் கோயிலுக்குக் குடமுழுக்கு விழா நடத்துக," என்றார்.

மன்னன் திடுக்கிட்டு விழித்தெழுந்தான். சென்னையை அடுத்த திருநின்ற ஊர் சென்றான். அங்குள்ளவரைக் கேட்டதில் பூசலார் கோயில் கட்டவில்லை என்பதைத் தெரிந்து கொண்டான்.

உண்மை உணர்ச்சியோடு கோயிலைக் கட்டும் திருப்பணியினையே பூசலார் நினைத்துக் கொண்டிருந்தார். அவருடைய நினைப்பே இறைவனுக்கு உகந்த கோயிலாகிவிட்டது

அரசன் பூசலாரிடம், "நீர் கட்டிய கோயில் எங்குள்ளது?" என்று கேட்டான். பூசலார் திகைத்தார். பிறகு மன்னனிடம் நடந்ததைச் சொல்லி விளக்கினார்.

மன்னன் பூசலாரின் திருவடிகளில் விழுந்து வணங்கினான். மதிலும் மண்டபங்களும் வானளாவிய கோபுரமும் கூடிய கற்கோயிலைவிட அடியார்களின் உண்மையான உணர்ச்சியால் கட்டப்படும் மனக்கோயிலே சிறந்தது' என்பதை உணர்ந்தான்.

[மன்னன் தான் கட்டி முடித்த கோயிலுக்குக் குடமுழுக்கு விழா எடுக்க எண்ணினான். இறைவன் அவனது கனவில் தோன்றினார்.]

காடவர் கோமான் கச்சி
கற்றளி எடுத்து முற்ற
மாடெலாம் சிவனுக் காகப்
பெருஞ்செல்வம் வகுத்தல் செய்வான்
நாடமால் அறியா தாரைத்
தாபிக்கும் அந்நாள் முன்நாள்
ஏடலர் கொன்றை வேய்ந்தார்
இரவிடைக் கனவில் எய்தி, (1)

[கனவில் தோன்றிய இறைவன் வேறொரு நாளில் குடமுழுக்கு நடத்துமாறு மன்னனுக்கு உணர்த்தினார்.]

'நின்றஊர்ப் பூசல் அன்பன்
நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீ(டு) ஆல யத்து
நாளைநாம் புகுவோம் நீ இங்(கு)
ஒன்றிய செயலை நாளை
ஒழிந்துபின் கொள்வாய்' என்று
கொன்றைவார் சடையார் தொண்டர்
கோயில் கொண்(டு) அருளப்போந்தார். (2)

[வியப்புற்ற மன்னன் திருநின்ற ஊர் சென்றான். ஊர் மக்களிடம் 'பூசலார் கட்டிய கோயில் எங்குளது?' எனக்

கேட்டான். ஊரார், 'அப்படி ஒன்றும் இல்லையே' என்றனர். பின் அவர்களிடம் பூசலார் இல்லத்தினைக் கேட்டறிந்து அங்குச் சென்றான்.]

அப்பதி அணைந்து, 'பூசல்
அன்பர்இங்(கு) அமைத்த கோயில்
எப்புடையது?' என்(று) அங்கண்
எய்தினார் தம்மைக் கேட்க,
'செப்பிய பூசல் கோயில்
செய்த(து)ஒன் றில்லை,' என்றார்;
மெய்ப்பெரு மறையோர் எல்லாம்
வருகஎன்(று) உரைத்தான் வேந்தன். (3)

[மன்னன் பூசலாரை அடைதல்]

பூசுரர் எல்லாம் வந்து
புரவலன் தன்னைக் காண,
'மாசிலாப் பூச லார்தாம்
யார்?' என மறையோர் எல்லாம்
ஆசில்வே தியன்இவ் வூரான்
என்றவர் அழைக்க ஓட்டான்
ஈசனார் அன்பர் தம்பால்
எய்தினான் வெய்ய வேலான். (4)

['தாங்கள் கட்டிய கோயிலைக் காண வந்தேன்,' என்றான்.]

தொண்டரைச் சென்று கண்ட
மன்னவன் தொழுது 'நீர்இங்(கு)
எண்திசை யோரும் ஏத்த
எடுத்தஆ லயம்தான் யாதிங்(கு).
அண்டர்நா யகரைத் தாபித்(து)
அருளும்நாள் இன்றென்(று) உம்மைக்
கண்டடி பணிய வந்தேன்
கண்நுதல் அருள்பெற்(று),' என்றான். (5)

[பூசலார் திகைத்தார்; நிகழ்ந்ததை விளக்கினார்.]

மன்னவன் உரைப்பக் கேட்ட
அன்பர்தாம் மருண்டு நோக்கி,
'என்னைஓர் பொருளாக் கொண்டே
எம்பிரான் அருள்செய் தாரேல்,

மூன்வரு நிதிஇ லாமை
 மனத்தினால் முயன்ற கோயில்
இன்னதாம்,' என்று சிந்தித்(து)
 எடுத்தவா(று) எடுத்துச் சொன்னார். (6)

[மன்னன் மிகவும் வியப்படைந்தான்.]

அரசனும் அதனைக் கேட்டங்(கு)
 அதிசயம் எய்தி, 'என்னே!
புரைஅறு சிந்தை அன்பர்
 பெருமை!' என் றவரைப் போற்றி
விரைசெறி மாலை தாழ
 நிலமிசை வீழ்ந்து தாழ்ந்து
முரசெறி தானை யோடு
 மீண்டுதன் மூதூர் புக்கான். (7)

[பூசலார் மனத்தால் கட்டிய கோயிலில் இறைவன் எழுந்தருளினார். எழுந்தருளிய இறைவனை நாளும் பொழுதும் மறவாமல் வழிபட்டு வந்தார் பூசலார்.]

அன்பரும் அமைத்த சிந்தை
 ஆலயத்(து) அரனார் தம்மை
நன்பெரும் பொழுது சாரத்
 தாபித்து நலத்தி னோடும்
பின்பூபூ சனைகள் எல்லாம்
 பெருமையில் பலநாள் பேணிப்
பொன்புனை மன்றுள் ஆடும்
 பொற்கழல் நீழல் புக்கார். (8)

—சேக்கிழார்

குறிப்புரை

பெருமை பொருந்திய பெரியார்களைப் பற்றிய வரலாற்றைக் கூறும் நூல் பெரிய புராணம். புராணம் — பழைய வரலாறு. 'பெருமை பொருந்திய புராணம்' எனவும் கூறலாம். இந்நூலுக்கு ஆசிரியர் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம்.

இந்நூல் செயற்கரிய செய்த சிவனடியார் அறுபத்து மூவருடைய வரலாற்றை விளக்குகிறது.

இதன் ஆசிரியர் சேக்கிழார். இவர் தொண்டை நாட்டின் குன்றத்தூரில் பிறந்தவர்.

இவரது காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு. இவர் அநபாய சோழமன்னனின் அமைச்சராய் இருந்தார்.

சேக்கிழாரின் இயற்பெயர் அருண்மொழித் தேவர். சிவனடியார் வரலாற்றை அழகிய கவிகளில் பாடிய பின்னர் இவர் 'தொண்டர்சீர் பரவுவார்' என்னும் சிறப்புப்பெயரால் பாராட்டப் பட்டார்.

பெரியபுராணம் ஏறக்குறைய 4000 செய்யுளோடு கூடியது. இந்நூல் தமிழக வரலாற்றை விளக்கும் சிறந்த வரலாற்று நூலாகவும் மதிக்கப்படுகிறது.

அருஞ்சொற்பொருள்

1. காடவர் கோமான் — பல்லவ மன்னன், கற்றளி — (கல் + தளி) கல்லால் கட்டப்பட்ட கோயில், நாடமால் அறியாதார் — சிவபெருமான் 'மால் நாட அறியாதார்' என மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும். ஏடு — இதழ்.

2. ஒன்றிய செயலை — நீ ஏற்பாடு செய்த குடமுழுக்கு விழாவை, நாளை ஒழிந்து — நாளைக்குச் செய்யாமல் ஒதுக்கி விட்டு.

3. எப்புடையது — எங்கு உள்ளது? புடை — பக்கம், செய்தது — கட்டியது.

4. மறையோர் — அந்தணர், மாசு, ஆசு என்னும் இரண்டு சொற்களும் குற்றம் எனப் பொருள்படும்.

5. கண்ணுதல் — சிவபெருமான், (நெற்றிக்கண் கொண்ட பெருமான்), நுதல் — நெற்றி.

6. மருண்டு — வியப்புற்று.

7. புரைஅறு — குற்றம் இல்லாத, விரைசெறி மாலை — மணங்கமழும் பூமாலை, விரை — மணம், மூதூர் — (முதுமை + ஊர்) பழமையான ஊர்.

8. பொன்புனை மன்று — பொன்னம்பலம், பொற்கழல் — பொன் + கழல்.

பயிற்சி

I. விடை எழுதுக:

(1) இறைவன் பல்லவ மன்னனின் கனவில் தோன்றிக் கூறியது யாது?

(2) திருநின்றவூர் மக்களை நோக்கி மன்னன் வினவியது யாது? அதற்கு அவர்கள் கூறிய விடை யாது?

(3) அரசன் பூசலாரை நோக்கி என்ன கூறினான்?

(4) பூசலார் மனக்கோயில் அமைத்த விதம்பற்றி மன்னனிடம் கூறியது யாது?

(5) பூசலார் கட்டிய மனக்கோயிலைப்பற்றிக் கேள்விப் பட்ட மன்னன் யாது செய்தான்?

II. எளிய தமிழில் பொருள் தருக:

புடை =	விரை =
ஆசு =	மன்று =
நுதல் =	கழல் =

III. (அ) பிரித்து எழுதுக:

பெருஞ்செல்வம்,	இன்றென்று,
ஏடலர்,	இன்னதாம்,
மாசிலா,	கேட்டங்கு.

(ஆ) சேர்த்து எழுதுக:

கொண்டு + அருள =	முதுமை + ஊர் =
வருக + என்று =	பெருமை + பொழுது =
கண்டு + அடி =	பொன் + கழல் =

(இ) எதிர்ச்சொல் தருக:

அறியாதார் ×	பெருமை ×
அந்நாள் ×	தாழ்ந்து ×
வருக ×	ஒன்றிய ×

(ஈ) பன்மை தருக:

அன்பன்,	நான்,
கோயில்,	திசை,
மன்னவன்,	பூசனை.

(உ) வினைப்பகுதி தருக:

எய்தினான், சொன்னார்,
வருக, புக்கான்.

4. இரட்சணிய யாத்திரிகம்

இரட்சணிய சரிதப் படலம்

[சிலுவைப் பாடு]

கதைச்சுருக்கம்

அருட்செல்வராகிய இயேசுநாதரைச் செருசலம் நகரத்துத் தெருவழியாக யூதர்களும் போர் வீரர்களும் கொலைக் களத்துக்கு இழுத்துச் சென்றார்கள். இயேசுநாதர் சிலுவையைச் சுமந்து தள்ளாடித் தள்ளாடி நடந்து போனார். அருள்கொழிக்கும் அவருடைய முகம், வாடி வதங்குவதைக் கண்ட பெண்களும் குழந்தைகளும் பெரியவர்களும் வருந்தினார்கள்.

சிலுவையைச் சுமந்துவந்த இயேசுநாதரைக் கொலைக்களத்தில் சிலுவையில் வைத்து அறைந்தார்கள். அவருடைய வலப்புறத்தும் இடப்புறத்தும் திருடர்களை நிறுத்திவைத்துத் தண்டித்தார்கள்.

இவ்வளவு கொடுமைகளைப் பிறர் தமக்குச் செய்தும் இயேசு பெருமான் அவர்கள்மீது வருத்தம் கொள்ளவில்லை. அப்பொழுதும் இறைவனை நோக்கி, 'எந்தையே! இவர்கள் அறியாமல் தவறு செய்கிறார்கள். இவர்களுடைய பிழையை மன்னிப்பீராக,' என வேண்டினார்.

நகர மாந்தரின் துயரம்

'செந்தா மரைபோல் திகழும் திருவதனம்
அந்தோ வதங்கி அழகுகுடி போய'தென்பார்;
நந்தாக் கருணை நறாத்துளிக்கும் கண்மலர்கள்
சிந்தா குலம்பொதிந்து தேசிழந்து விட்ட'தென்பார். (1)

பெண்டிர்எலாம் அழுதரற்றப் பிள்ளைகள்எ லாம்கதறக்
கண்டுகேட் டவர்இரங்கிக் கசிந்துருகிக் கருத்தழிய
மண்டுதுயர் எனும்தீயால் வயிறெரியக் கடிநகரம்
பண்டெரிவீழ்ந்(து)அழிசோதோம் பதிபோலப் பதைத்தேங்க, (2)

கொலைக்களம் கொண்டு சேர்த்தல்

இப்பரிசு பெரும்துக்கக் குறிமல்கி எவ்வுயிரும்
செப்பரிய துயருழப்பச் செருசலையைப் புறம்போக்கி
ஒப்பரிய முதுமூலத்(து) ஒருபொருளைக் கொண்டுய்த்தார்
மைப்படுவன் மனக்கொலைஞர் வதைபுரிவான் கொலைக்
களத்தில். (3)

இயேசுநாதரைக் குருசில் அறைதல்

மற்றிரண்டு திருடரையும் வலப்புறத்தும் இடப்புறத்தும்
செற்றமொடு குருசேற்றிக் கொலைமாக்கள் செயல்ஒழியச்
சொற்றமறைத் திருவசனம் துலக்கமுறச் சுருதிமுதல்
குற்றவா ளிகளோடு நடுநின்றார் குருசுமிசை.

அருள் வள்ளல் வாக்கு

தன்னரிய திருமேனி சதைப்புண்டு, தவிப்பெய்தி,
பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்(து) எந்தாய்!
இன்னதென அறிகில்லார் தாம்செய்வ(து) இவர் பிழையை
மன்னியும்,' என்(று) எழிற்கனிவாய் மலர்ந்தார்நம் அருள்
வள்ளல். (5)

—எச். ஏ. கிருட்டினப்பிள்ளை

குறிப்புரை

இரட்சணிய யாத்திரிகம்: இஃது ஆத்தும ஈடேற்றத்தை விரும்பியவர் மேற்கொண்ட யாத்திரையை விளக்கும் நூல்; தமிழ் மொழியில் இயற்றப்பட்ட கிறித்தவக் காப்பியம். இக்காப்பியம் 'ஜான் பன்யன்' என்னும் ஆங்கிலக் கவிஞர் இயற்றிய 'பில்கிரிம்ஸ் பிராகிரஸ்' (Pilgrims Progress) என்னும் நூலைத் தழுவி இயற்றப் பட்டது. ஆதலால், இது வழிநூலாகும்.

கிருட்டினப்பிள்ளை: இக்காப்பியத்தை இயற்றிய இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இரெட்டியா பட்டி என்னும் ஊரில் சங்கரநாராயணப்பிள்ளைக்கும்தெய்வநாயகியம்மாளுக்கும் மைந்தராகத் தோன்றினார். இளமையில் வைணவராக இருந்த இவர், பின்னர்க் கிறித்தவ சமயத்தைச் சேர்ந்தார்; ஹென்றி ஆல்பர்ட்டு கிருட்டினப்பிள்ளை எனப் பெயர் வைத்துக் கொண்டார். இவரது காலம் கி.பி. 1827-1900.

அருஞ்சொற்பொருள்

1. திருவதனம் — அழகிய முகம், குடிபோயது — நீங்கியது — கருணை நறா — அருளாகிய தேன் (உருவகம்), கண்மலர்கள் கண்களாகிய மலர்கள் (உருவகம்), சிந்தாகுலம் – மனத்துயரம் பொதிந்து — நிறைந்து, தேசு — ஒளி.

2. மண்டுதுயர் — மிக்க துன்பம், கடிநகரம் — காவல் மிகுந்த நகரம் (உரிச்சொற்றொடர்), பண்டு — முன்காலத்தில் சோதோம் பதி — இறைவனின் சினத்துக்கு இலக்காகி அழிந்த ஒரு நகரம்.

3. இப்பரிசு — இவ்விதமாக, மல்கி — நிறையப் பெற்று செப்ப அரிய — சொல்ல இயலாத, உழப்ப — வருந்தவும், மைதப் படு —குற்றம் பொருந்திய,— செருசலை—செருசலம்நகர், முது மூலத்து — பழமையான முதற்பொருளாகிய, ஒரு பொருளை — ஒப்பற்ற இயேசுநாதரை, வதை — கொலை, புரிவான் — செய் வதற்காக ('வான்' ஈற்று எதிர்கால வினையெச்சம்).

4. செற்றமொடு — கோபத்தோடு, குருசு — சிலுவை சொற்ற — கூறிய, மறை வசனம்: (1) பகைவரை நேசி (2)தீமை செய்தவர்க்கும் நன்மை செய் (3) வைதவரை வாழ்த்து (4) கொள் கை வேற்றுமை காரணமாகத் துன்புறுத்துபவர், பொய்க்குற்றம் சாட்டுபவர் ஆகியவர்களுக்காகக் கடவுளை வணங்கு (5)மக்கள் செய்யும் குற்றங்களை மன்னித்துவிடு முதலியவை. இவை ஒலிவ மலையில் இயேசுநாதர் கூறிய அறிவுரைகள் (Sermon on the Mount Glive: New Testament), துலக்கமுற — விளக்கமுறும்படி

சதைப்புண்டு— சிதைக்கப்பெற்று, பன்னரிய — சொல்ல இயலாத, கனிவாய் – கொவ்வைக் கனிபோன்ற வாய்(உவமைத் தொகை), மலர்ந்தார் — சொல்லி அருளினார்.

பயிற்சி

I. விடை எழுதுக:

(1) சிலுவையைச் சுமந்துவரும் இயேசுநாதரைக் கண்ட மக்கள் வருந்திக் கூறியன யாவை?

(2) செருசலம் நகரம் சோதோம் பதிபோன்ற நிலையை அடைந்தது ஏன்?

(3) இயேசுநாதரைக் கொலைஞர் குருசில் அறைந்தது பற்றி எழுதுக.

(4) சிலுவையில் அறையப்பட்ட இயேசுநாதர் இறைவனிடம் வேண்டியது யாது?

II. (அ) எளிய தமிழில் பொருள் தருக:

வதனம் =	மல்கி =	பன்னரிய =
சிந்தாகுலம் =	நறா =	செற்றம் =

(ஆ) பிரித்து எழுதுக:

தேசிழந்து,	குருசேற்றி,	துக்கக்குறி,
கசிந்துருகி,	கொண்டுய்த்தார்,	தவிப்பெய்தி

(இ) சேர்த்து எழுதுக:

மற்று + இரண்டு =	கதற + கண்டு =
செயல் + ஒழிய =	துயர் + உழப்ப =

III. (அ) பன்மை தருக:

பரிசு,	பொருள்,	குற்றவாளி,
பெண்,	திருடன்,	கொலைஞன்.

(ஆ) எதிர்ப்பால் தருக:

ஆடவர் × திருடன் ×

(இ) வினைப்பகுதி தருக:

நின்றார், அழுதார், வருந்தினார்.

(ஈ) தொழிற்பெயர் தருக:

உய்த்தார், அழிந்தார், மலர்ந்தார்.

IV. "இன்னதென அறிகில்லார் தாம் செய்வது"

(1) இவ்வாறு கூறியவர் யார்?
(2) யாரை நோக்கிக் கூறினார்?
(3) 'தாம்' என்பது எவரைக் குறிக்கும்?

V. திரண்ட கருத்துத் தருக:

'நந்தாக் கருணை நறாத் துளிக்கும் கண்மலர்கள்
சிந்தா குலம்பொதிந்து தேசிழந்து விட்ட' தென்பார்.

IV. பல்சுவைப் பாடல்கள்

1. புறநானூறு

கொடை வளம்

மழைக்கணம் சேக்கும் மாமலைக் கிழவன்
வழைப்பூங் கண்ணி வாய்வாள் அண்டிரன்
குன்றம் பாடின கொல்லோ !
களிறுமிக உடையஇக் கவின்பெறு காடே (1)

திணை: பாடாண் துறை: இயன்மொழி

வானளாவிய புகழ்

திண்தேர் இரவலர்க்(கு) ஈத்த தண்தார்
அண்டிரன் வரூஉம் என்ன ஒண்டொடி
வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுள்
போர்ப்புறு முரசம் கறங்க,
ஆர்ப்பெழுந் தன்றால் விசும்பி னான. (2)

திணை: பொதுவியல் துறை: கையறு நிலை

அறம் ஒரு கடமை

இம்மைச் செய்தது மறுமைக்(கு) ஆமெனும்
அறவிலை வணிகன் ஆய்அலன்; பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப்பட் டன்றவன் கைவண் மையே. (3)

திணை: பாடாண் துறை: இயன்மொழி

— முடமோசியார்

2. கலிங்கத்துப் பரணி

களத்தில் வீழ்ந்த வீரர் நிலை

விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண
மேன்மேலும் முகமலரும் மேலோர் போலப்
பருந்தினமும் கழுகினமும் தாமே உண்ணப்
பதுமமுகம் மலர்ந்தாரைப் பாரீர் பாரீர். (1)

மனைவியின் புலம்பல்

'பொருதடக்கை வாளெங்கே ? மணிமார் பெங்கே ?
போர்முகத்தில் எவர்வரினும் புறங்கொ டாத
பருவயிரத் தோளெங்கே? எங்கே?' என்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின் ! காண்மின். (2)

— சயங்கொண்டார்

3. முக்கூடற்பள்ளு

முக்கூடல் நகர்வளம்

சோதி மாமணி வீதி நெருக்கும் ;
சுரும்பு பாடி இரும்பும் உருக்கும் ;
சாதி நால்வளம் நீதி பெருக்கும் ;
தடத்து வாளை குடத்தை நெருக்கும் ;
போதில் மேய்ந்திள மேதி செருக்கும் ;
புனம்எல் லாம்தண் மலர்விண்(டு) இருக்கும் ;
ஆதி நாயகர் செண்டலங் காரர்
அழகர் முக்கூடல் ஊர்எங்கள் ஊரே. (1)

மருதூர் நகர்வளம்

தத்தும் பாய்புனல் முத்தம் அடைக்கும் ;
சாலி வாய்க்கன்னல் ஆலை உடைக்கும் ;
கத்தும் பேரிகைச் சத்தம் புடைக்கும்;
கலிப்பு வேலை ஒலிப்பைத் துடைக்கும் ;
நித்தம் சாறுயர் சித்ரம் படைக்கும் ;
நிதியெல் லாம்தன் பதியிற் கிடைக்கும் ;
மத்தம் சூடும் மதோன்மத்த ரான
மருதீ சர்வாழ் மரு(து) எங்கள் ஊரே. (2)

— என்னயினாப் புலவர்

4. பாண்டியன் பரிசு

வேலன் தன் கடமையை எடுத்துரைத்தல்

'எனைஈன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனம்ஈன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கு மென்றால்
செத்தொழியும் நாள்எனக்குத் திருநா ளாகும் !

பனையளவு நலமேனும் தன்ன லதனைப்
பார்ப்பானோ, மக்களிலே பதடி ஆவான்.
உனையொன்று வேண்டுகிறேன் ; என்னால்ஆவ(து)
உண்டென்றால் அதற்கென்றன் உயிருண் டென்றான்

—பாரதிதாசன்

குறிப்புரை

1. புறநானூறு ; புறப்பொருள்பற்றிய நானூறு செய்யுட்களைக் கொண்ட நூலாகையால் இதற்கு இப்பெயர் வந்தது இஃது எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று. தமிழகத்தின் மூவேந்தர்கள், குறுநிலமன்னர்கள், வள்ளல்கள் ஆகியவர்களைப் பற்றிப் புறநானூறு பல செய்திகளைத் தெரிவிக்கிறது. பல்வேறு சூழ்நிலைகளில் புலவர் பலர் பாடிய பாடல்கள் இத்தொகை நூலில் அடங்கியுள்ளன.

வேள் ஆய் ஆண்டிரன், கடையெழுவள்ளல்களுள் ஒருவன்; புலவர்கள் பாடிய பாடல்களைக் கேட்டுப் பொன்னும் பொருளும் அள்ளி அள்ளி வழங்கியவன்; யானை, குதிரை, தேர் முதலியவற்றைப் பரிசாகக் கொடுத்தவன்; இசைவாணர்களையும் நடனத்தில் வல்லவர்களையும் ஆதரித்தவன்.

ஆய் அண்டிரனைப்பற்றிச் சங்கப் புலவர் பலர் பலபடப் பாராட்டிப் பாடியுள்ளனர். அவருள் உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரும் ஒருவர். இவர் அண்டிரனுடைய கொடை வளத்தையும் மனவளத்தையும் உணர்ச்சி ததும்பப் பாடியுள்ளார், உறையூரையடுத்த ஏணிச்சேரி என்னும் ஊரைச் சார்ந்தவராகையால் மக்கள் இவரை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என அழைத்தனர்.

பாடாண் திணை : (பாடு + ஆண் + திணை) பாடப்படும் ஆண்மகனின் ஒழுக்கம், கொடை, வீரம் முதலிய நற்பண்புகளைப் பாராட்டிக் கூறுவது.

பொதுவியல் : வெட்சி முதலிய புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவான செய்திகளும் முன்னர் விளக்கப்படாத செய்திகளும் கூறும் இயல்.

இயன்மொழி : தலைவனின் இயல்பைச் சிறப்பித்துப் புகழ்வது.,

கையறு நிலை : தலைவனேனும் தலைவியேனும் இறந்தமைக்குச் செயலற்று மிகவருந்திக் கூறுவது. கையறுதல்— செயலற்று இருத்தல்.

அருஞ்சொற்பொருள்

1. மழைக்கணம் — மேகக் கூட்டம், வழைப் பூ கண்ணி — புன்னைப் பூமாலை, குன்றம் — மலை, களிறு — ஆண் யானை, கவின் — அழகு.

2. ஈத்த — கொடுத்த, ஈந்த — ஈத்த, வருஉம் என்ன — வந்துவிட்டான் என்று (உயிரளபெடை). வச்சிரத் தடக்கை நெடியோன் கோயில் — வச்சிராயுதத்தையுடைய இந்திரனுடைய தலைநகரில் (அரண்மனையில்), விசும்பின் - வானுலகில், ஆர்ப்பு எழுந்தன்று — ஆரவாரம் ஏற்பட்டது.

3. இம்மைச் செய்தது — இப்பிறப்பில் செய்த தருமம், மறுமைக்கு ஆம் எனும் — இறந்தபின் மறுபிறவியில் உதவும் என்னும், அறவிலை வணிகன் — தருமத்தை விலைபேசும் வணிகன், சான்றோர் சென்ற நெறி — நல்லோர் மேற்கொள்ளும் அறவழி, அவன் கைவண்மை ஆங்குப்பட்டன்று — அண்டிரனது அறச் செயலும் அப்படி ஒரு கடமையின்பாற்பட்டதே; வணிக நோக்கன்று.

குறிப்புரை

2. கலிங்கத்துப்பரணி : சோழன் குலோத்துங்கனின் தளபதி கருணாகரத் தொண்டைமான் தலைமையில் சோழர் படை கலிங்க நாட்டின்மேல் போர் தொடுத்து வெற்றிபெற்ற செய்தியைக் கூறும் நூல். இந்நூல் அவ்வீரப் போரை அழகுபடச் சித்திரிக்கிறது.

இதன் ஆசிரியர் சயங்கொண்டார். சயங்கொண்டார், தஞ்சை மாவட்டத்தில் உள்ள தீபங்குடியில் தோன்றியவர்; கவிச்சக்கரவர்த்தி என்னும் சிறப்புப்பெயர் பெற்றவர்; 'பரணிக்கோர் சயங்கொண்டான்' எனப் பாராட்டப்படுபவர்; கி.பி. 11ஆம் நூற்றாண்டினர்.

அருஞ்சொற்பொருள்

1. மேலோர் — சான்றோர் இனம் — கூட்டம், பதுமமுகம் — தாமரைமலர் போன்ற முகம், கடம் — மதநீர், தடங்குருதிமிசை — மிக்க இரத்தத்தின் நடுவே, காந்தர் — கணவர், அமளி — படுக்கை.

2. பொரு தடக்கை — போர் செய்யும் பெரிய கை, மணி மார்பு — அழகிய மார்பு, பருவயிரத்தோள் — பருத்த வயிரம் போன்று உறுதியான தோள்.

குறிப்புரை

3. முக்கூடற்பள்ளு: மருதநிலத்து மக்களாகிய உழவர் வாழ்க்கையைச் சிறப்பித்துப் பாடுவது 'பள்ளு' என்னும் சிற்றிலக்கியம். முக்கூடல் என்னும் ஊர் திருநெல்வேலிக்குக் கிழக்கே உள்ளது. இங்கே சிற்றாறு, பொருநையாறு, உப்பாறு என்னும் மூன்று ஆறுகள் கூடுவதால் இவ்வூர் இப்பெயர் பெற்றது. கதைத் தலைவனாகிய உழவனுக்கு இருமனைவியர் உண்டு இருவரும் தத்தம் ஊர்வளத்தைப்பற்றிப் பேசும் பாடல்கள் இங்கு இடம் பெற்றுள்ளன.

முக்கூடற்பள்ளு ஆசிரியர் என்னயினாப் புலவர். இவர் முத்துப்புலவர், நாச்சிமுத்துக் கவுண்டர் என்னும் தமிழறிஞர்களிடம் கல்வி பயின்றவர். இவரது காலம் கி.பி.17ஆம் நூற்றாண்டு

அருஞ்சொற்பொருள்

1. சுரும்பு — வண்டு, நால்வளம் — நிலவளம், நீர்வளம், குடிவளம், கோன்வளம் ஆகிய நாட்டு நலத்துக்குரிய நால்வகை வளங்கள், தடம் — நீர்நிலை, போது — அரும்பு, மேதி — எருமை, புனம் — வயல், விண்டு விரிந்து, செண்டலங்காரர் — திருமால்

2. முத்தம் — முத்துகள், சாலி வாய் — நெல் வயலிடம். கன்னல் — கரும்பு, புடைக்கும் — பேரொலி செய்யும், கலிப்பு — எழுச்சி (ஆரவாரம்), வேலை ஒலிப்பைத் துடைக்கும் — கடலின் முழக்கத்தையே அடக்கிவிடும், மத்தம் சூடும்—ஊமத்தை மலரைச் சூடும், மதோன் மத்தர் — சிவபெருமான், (மத + உன் மத்தர்), சிவபெருமானுக்குப் பித்தன் என்னும் ஒரு பெயரும் உண்டு. அதனால் உன்மத்தர் என்னும் சொல் இருபொருள்படக் கூறப்பட்டது சிலேடை.

குறிப்புரை

4. பாண்டியன் பரிசு: வேலன் என்னும் வீரன் பல துன்பங்களுக்கு ஆளாகியும் உற்றது ணைவர்களின் கூட்டுறவினால் பாண்டியன் பரிசைப் பெற்ற செய்தியைக் கூறும் காவியமாகையால் இது பாண்டியன் பரிசு எனப் பெயர் பெற்றது.

சேயாற்று வெள்ளத்தில் சிக்கிய அன்னத்தையும் நீலியையும் காப்பாற்றிய வேலனுக்கு அன்னம் நன்றி கூறினாள். வேலன் தன் கடமையை எடுத்துரைத்தான்.

இதன் ஆசிரியர் பாரதிதாசனார். இவர், 1891-ல் புதுவை மாநிலத்தில் பிறந்தார். இயற்பெயர் கனகசுப்புரத்தினம். பாரதியாரோடு நெருங்கிப்பழகியதால் தம் பெயரைப் பாரதி தாசன் என மாற்றிக்கொண்டார். புரட்சிக்கருத்துகளைப் பாடிய தால் 'புரட்சிக்கவிஞர்' என வழங்கப்படுகிறார். இவர் 1964-ல் மறைந்தார்.

அருஞ்சொற்பொருள்

எனை — என்னை, திருநாள் — நல்ல நாள், பனையளவு — மிகுந்த அளவு, தினை, பனை — சிறுமை பெருமையைக் காட்டும் அளவைப் பெயர்கள், பதடி — பதர், உனை — உன்னை.

பயிற்சி

I. விடை எழுதுக:

(1) ஆய் அண்டிரனின் கொடைத்திறத்தைப்பற்றி முட மோசியார் கூறுவது யாது ?

(2) வள்ளல் அண்டிரனின் வானளாவிய புகழ் எத்தகை யது ? விளக்குக.

(3) அண்டிரன் ஈகையை ஒரு கடமையாகக் கொண்டவன் என்பதை எங்ஙனம் அறியலாம் ?

(4) போர்க்களத்தில் வீழ்ந்த வீரர்களின் நிலையைக் குறித்துக் கலிங்கத்துப்பரணி கூறுவது யாது ?

(5) முக்கூடல் நகர்வளம்பற்றி மூத்த பள்ளிகூறுவது யாது ?

(6) இளைய பள்ளி மருதூர்வளம் பற்றி என்ன கூறினாள் ?

(7) வேலன் அன்னத்திடம் தன் கடமைகளாகக் கூறியன யாவை ?

II. (அ) பிரித்து எழுதுக:

தண்டார், நெருங்கியுண்ண, முக்கூடல்,
அறவினை, வாளெங்கே ? செத்தொழியும்.

(ஆ) சேர்த்து எழுதுக:

விண்டு + இருக்கும் = உனை + ஒன்று =

மருது + ஈசர் = அதற்கு + என்றன் =

III. திரண்ட கருத்துத் தருக:

(1) 'இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும்
அறவிலை வணிகன் ஆய்அலன்.'

(2) 'கத்தும் பேரிகைச் சத்தம் புடைக்கும்;
கலிப்பு வேலை ஒலிப்பைத் துடைக்கும்.'

IV. 'பருவயிரத் தோளெங்கே ? எங்கே ?' என்று பயிரவியைக் கேட்பாளைக் காண்மின்! காண்மின்'

(1) இவ்வடிகள் எந்த இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன ?

(2) இவ்வாறு கேட்டவர் யார்?

(3) இதனால் அறியப்படும் உண்மை யாது?

உரைநடைப்பகுதி

1. உலகப் பேரேடு

(டாக்டர் மு. வரதராசனார்)

உலகம் யாரைப் புகழ்கிறது ? புத்தர், காந்தியடிகள் போன்ற அறவோரைப் புகழ்கிறது; அசோகன், கரிகாலன் போன்ற ஆட்சித் தலைவரைப் புகழ்கிறது; திருவள்ளுவர், ஷேக்ஸ்பியர் போன்ற அறிஞரைப் புகழ்கிறது. அவர்களின் உடல் மறைந்து பற்பல நூற்றாண்டுகள் ஆன பிறகும் அவர்களின் பெருவாழ்வு நீங்காதவாறு உலகம் புகழ்ந்துகொண்டே வருகிறது. அந்தப் பெருமக்கள் நிலையான புகழ்வேண்டும் என்று விரும்பியதும் இல்லை ஆனாலும் உலகமோ அவர்களை விடாமல் புகழ்ந்துகொண்டே வருகிறது.

புகழ் பெறவேண்டும் என்ற ஆசை பலர்க்கும் உள்ளது. தம் உடலோடு தம் வாழ்வும் மறைந்து மறக்கப்படலாகாது என்ற எண்ணம் எப்படியோ மக்கள் உள்ளத்தில் இயற்கையாக அமைந்து கிடக்கிறது.

செல்வாக்கு உள்ள சிலர் இந்த ஆசையால் புகழ்தேடப் பெருமுயற்சி செய்வதும் உண்டு. தம்முடைய புகழைப் பரப்புமாறு பலர்க்குப் பணம் தந்து தூண்டுவதும் தம்மைப் புகழ்வோர்க்குச் சிறப்புகள் செய்து போற்றுவதும் அவர்கள் இயல்புகள். விளம்பரக் கருவியாக இக்காலத்தில் உள்ள செய்தித்தாள்களையும் சிலர் புகழ் தேடும் முயற்சிக்குப் பயன்படுத்துகிறார்கள்.

செய்தித்தாள், பதவிப் பெருமை முதலியவற்றால் ஏமாறும் மக்கள் அவர்களின் புகழை உண்மையாகவே நம்புவதும் உண்டு. ஆனால், வலிந்து தேடிப் பெறுகின்ற இத்தகைய புகழைப் புகழ் என்ற சொல்லால் குறிப்பதைவிட விளம்பரம் என்ற பெயராலேயே குறிப்பிடலாம். ஏனெனில், இந்த விளம்பரம் இவர்களின் காலத்திற்குப் பிறகு நிற்பது இல்லை. இவர்களின் உடலோடு இவர்கள் பாடுபட்டுத் தேடிய விளம்பரமும் மறைந்து போகின்றது. இவ்வாறு மறைந்து போவது உண்மைப் புகழ் ஆகாது. ஒருவருடைய வாழ்வு முடிந்த பிறகும் முடியாமல் எஞ்சி நிற்பது தான் உண்மையான புகழ் ஆகும்.

பலர் முயன்று தேடியும் அவர்களுக்கு எட்டாமல் நிற்பதாகிய புகழ், புத்தர் போன்ற ஒரு சிலர்க்கு மட்டும் காலவெள்ளத்தையும் கடந்து நிலைத்து நிற்பது ஏன் ? உலகம் அவர்களை விடாமல், மறவாமல் புகழ்ந்துகொண்டே இருப்பது ஏன்?

உலகம், வரவுசெலவுக் கணக்குப் பார்க்கிறது. ஒருவர் உலகத்தில் பிறக்கும்போது, கொண்டு வந்தது இல்லை. இறக்கும் போது கொண்டு போவது இல்லை. இடைநடுவே வாழும் இந்த வாழ்வில் அந்த ஒருவர் உலகத்தினிடமிருந்து எவ்வளவோ பெற்றுக்கொள்கிறார்; உலகத்திற்கும் எவ்வளவோ தருகிறார் அவர் உலகத்திடம் பெற்ற உணவு, உடை முதலிய எல்லாம் உலகத்தின் கணக்கில் (அதன் பேரேட்டில்) செலவு வைக்கப்படும். உலகத்திற்கு அவர் தந்த உழைப்பு, உதவி முதலிய எல்லாம் அந்தக் கணக்கில் வரவு வைக்கப்படும். உழைக்காமல் வாழும் சோம்பேறிகளின் கணக்கு அந்தப் பேரேட்டில் வரவைவிடச் செலவு மிகுந்ததாக இருக்கும். உலகக்கணக்கில் அவர்கள் கடனாளிகள். உழைத்து வயிறு வளர்க்கும் பலருடைய கணக்கு அவ்வாறு இராது. அவர்கள் உழைத்ததற்கு ஏற்ற கூலி பெற்று உண்டு, உறங்கி, மாய்ந்து போகிறார்கள். அவர்களின் வரவு செலவுக் கணக்குச் சரியாகிவிடுகிறது. அந்தக் கடனாளிகளையும் சரியாளிகளையும் உலகம் மறந்துவிடுகிறது. ஆனால், ஒரு சிலருடைய கணக்கு உலகப் பேரேட்டில் செலவைவிட வரவு மிகுந்ததாக இருக்கிறது. அத்தகைய கொடையாளிகளை உலகம் என்றும் மறவாமல் போற்றுகிறது. இந்தப் போற்றுதலே புகழ் என்று கூறப்படுவதாகும்.

புத்தரும் அசோகரும் திருவள்ளுவரும் நம்மைப் போலவே உண்டார்கள்; உடுத்தார்கள். அவர்களின் வயிறும் நம் வயிற்றின் அளவு உள்ளதே. சாதாரண மனிதன் ஒரு சின்ன வீட்டின் மூலையில் படுத்து உறங்கினான். அசோகன் பெரிய அரண்மனையில் உயர்ந்த பஞ்சணையில் படுத்து உறங்கினான். ஆயினும், படுத்து உறங்குவதற்காக உலகம் கொடுத்த இடம் ஒரே அளவு உள்ளதேயாகும். ஆகவே, உலகக் கணக்கில் இருவருடைய பற்றும் ஒரே அளவாக இருக்கக் காணலாம்.

ஆனால், சாதாரண மனிதனுடைய வரவு செலவுக் கணக்கு அவனுடைய மரணத்தன்று தீர்ந்து போவதுபோல், புத்தர், அசோகர், திருவள்ளுவர் முதலானவர்களுடைய கணக்குத் தீர்ந்து போவது இல்லை. உலகப் பேரேட்டில் புத்தருடைய கணக்கில் அவரால் வந்த வரவு வளர்ந்துகொண்டே இருக்கிறது. அவருடைய அறநெறியாலும் அறிவுரைகளாலும் உலகத்திற்கு

இன்னும் பயன் விளைந்துகொண்டே இருக்கிறது. அசோக ருடைய ஆட்சித் தூய்மையாலும், அறநெறி பரப்புதலாலும் உலகம் இன்னும் நல்ல பயன்பெற்றுவருகிறது திருவள்ளுவருடைய திருக்குறளால் இத்தனை நூற்றாண்டுகளாகப் பலர் பயன் அடைந்ததுபோலவே வருங்காலத்திலும் பல தலைமுறையினர் பயன் அடையப் போகிறார்கள். ஆகவே, உலகம் உணவு, உடை, இடம் முதலிய வகையில் சிறிது கொடுத்து, அவர்களிடமிருந்து பெரும்பயன் பெற்றுக்கொண்டிருக்கிறது. உலகம் கடனாளியாக, அவர்கள் கொடையாளியாக விளங்குகின்றார்கள். செலவைவிட வரவு பலமடங்கு மிகுதலால் உலகப் பேரேட்டில் அவர்களின் கணக்குத் தீராமல் புகழ் வளர்கிறது. விளம்பரம் இப்படிப் பட்டது அன்று.

உண்மையாகவே உலகத்திற்கு மிகுதியாகக் கொடுக்கும் பெருமக்களுள் இரு சாரார் உண்டு. அரசியலால் புகழ் பெறுவோர் ஒரு சாரார்; கலையாலும் அறத்தாலும் புகழ் பெறுவோர் மற்றொரு சாரார்.

அரசியலைச் சார்ந்தவர்களின் புகழ் நாளடைவில் குறைந்து போகிறது. கலையையும், அறத்தையும் சார்ந்தவர்களின் புகழ் நாள் செல்லச் செல்லத்தான் வளர்கிறது. காரணம் என்ன? அரசியலில் ஆரவாரம் உண்டு. கலையிலும் அறத்திலும் அமைதியே உண்டு. ஆரவாரத்தோடு கலந்த சிறு புகழும் பெரிதாகத் தோன்றுகிறது. வேடிக்கை வாணத்தின் ஒலிபோல் தொடக்கத்தில் பேரொளி காட்டி மெல்ல மங்கிப்போகிறது. கலைஞரின் புகழும் அறவோரின் புகழும் வானத்தின் வடக்கில் நிலவும் துருவமீன்போல் சிறிய ஒளியுடன் தோன்றிய போதிலும் என்றும் நின்று நிலவுகின்றன. எத்தனையோ அரசியல் தலைவர்கள் அவரவர் காலத்தில் உலகம் மயங்கக்கூடிய அளவுக்குப் பெரும் புகழ் பெற்று விளங்கினார்கள். அலெக்சாண்டர், சந்திரகுப்தன், நெப்போலியன், கிளைவ் முதலானவர்களின் பெயர்களை அவர்கள் வாழ்ந்த காலத்தில் உலகம் எல்லாம் அறியும். ஆனால், இன்று சில ஏடுகள்மட்டுமே அறியும். திருவள்ளுவர், பாரதியார் முதலான பெருமக்களின் பெயர்களை அன்று அவர்கள் எழுதிய ஏடுகள்மட்டும் அறிந்திருந்தன. இன்று பலரும் அறிந்து போற்றுகிறார்கள். உலகப் பேரேடு தன் வரவுசெலவுக் கணக்கில் ஆரவாரத்திற்கு இடம் தருவது இல்லை. அமைதிக்கு இடையே உண்மைக் கணக்கை உணர்த்திவிடுகிறது.

அரசியலைச் சார்ந்தவர்களிலும் அறவோராய் வாழ்ந்து உலகத்திற்கு மிகுதியாய்க் கொடுத்தவர்கள் உண்டு. அவர்களில் எடுத்துக்காட்டானவர் அசோகர். அரசியலைச் சார்ந்தவர்களி லும் கலைஞராய் விளங்கி உலகத்திற்கு மிகுதியாகக் கொடுத்த வர்கள் உண்டு. பல்லவ மன்னன் மாமல்லன் என்னும் நரசிம்ம வர்மன் எடுத்துக்காட்டாகக் குறிக்கத் தகுந்தவன். அவன் தந்த கலைச் செல்வம் மாமல்லபுரம் உலகத்தின் பேரேட்டில் புகழ் பெற்றுத் தந்துள்ளது. காதலிக்காகக் கசிந்து கண்ணீர் விட்ட ஷாஜகானின் பெரும் புகழுக்குக் காரணம் வாண வேடிக்கை போன்ற அவனுடைய அரசியல் அன்று; வடமீன் போன்ற கலைத் தொண்டேயாகும். யமுனை ஆற்றங்கரையில் அமைதிக்கு வடிவு தந்தாற்போல் விளங்கும் வெள்ளைக்கல் கட்டட மாகிய தாஜ்மகால், இல்லையேல் ஷாஜகானுடைய பெயர் இவ்வளவு புகழ் பெற்றிராது. ஆகவே, நிலையான புகழ்பெற வேண்டுமானால் அறத்துறையாலோ, கலைத்துறையாலோ உலகப் பேரேட்டில் இடம் பெற்றால்தான் முடியும் என்பது தெளிவாகிறது.

அருஞ்சொற்பொருள்

அறவோர் — நல்ல வழியில் நடப்பவர், எஞ்சி நிற்பது — மிகுந்து நிற்பது, பேரேடு—பெரும்கணக்கு ஏடு, உறங்குவதற்காக— தூங்குவதற்காக, இரு சாரார் — இரண்டு பிரிவினர், வடமீன் — துருவ நட்சத்திரம்.

பயிற்சி

சுருக்கமான விடை எழுதுக:

(1) உலகம் யார் யாரைப் புகழ்ந்து கொண்டிருக்கிறது ? ஏன் ?

(2) செல்வாக்குள்ள சிலரின் தவறான செயலை ஆசிரியர் எங்ஙனம் எடுத்துக் கூறியுள்ளார் ?

(3) விளம்பரத்தின் விளைவு குறித்து ஆசிரியர் கூறுவது யாது ?

(4) உலகக் கணக்கில் அசோகர், சாதாரண மனிதன் ஆகிய இருவருடைய பற்றும் ஒரே அளவாக அமைவது எப்படி ?

(5) அரசியலார் புகழுக்கும் அறவோரின் புகழுக்கும் உள்ள வேறுபாட்டை விளக்குக.

(6) அரசியலைச் சார்ந்தவர்களிலும் அறவோராய்க் கலைஞராய் வாழ்ந்து உலகத்துக்கு உதவியவர் யாவர்? எங்ஙனம் உதவினர்?

(7) நிலையான புகழ் பெறுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

II. பின்வருவனவற்றுக்குப் பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக:

(1) உலகப் பேரேட்டில் இடம்பெறும் மூவகையினரின் இயல்பை விளக்கி எழுதுக.

(2) உலகப் பேரேட்டில் யார்யாருடைய கணக்குத் தீராமல் புகழ் வளர்கிறது? சான்று கூறி விளக்குக.

III. பிரித்து எழுதுக:

பெருவாழ்வு,	பேரேடு,
காலவெள்ளம்,	அறநெறி.

IV. சேர்த்து எழுதுக:

வரும் + காலம் =	அவர் + அவர் =
பெருமை + பயன் =	உண்மை + கணக்கு =

V. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

நிலையான, இயற்கையாக, பாடுபட்டு, எஞ்சிநிற்பது, தலைமுறையினர்.

2. அறிஞர் அண்ணா

(அ. மறைமலையான்)

இடைநிலைத் (இண்டர்மீடியேட்) தேர்வில் முதல்வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தும் மேற்கொண்டு படிப்பைத்தொடரஇயலாத சூழ்நிலையில் சிக்குண்டார் பேரறிஞர் அண்ணா. பள்ளம்விழுந்து விட்ட அவரது குடும்பப் பொருளாதாரம் அவர் உள்ளத்தைக் குடைந்தெடுத்தது.

அப்போது பச்சையப்பன் கல்லூரித் தலைவராகத் திரு. சின்னத்தம்பி அவர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார். கல்லூரி 'இண்டர்' தேர்வில் முதல்வகுப்பில் தேர்ச்சியுற்றதைப் போன்றே வருங்காலத்தில் அரசியல் தேர்விலும் அண்ணா முதல் வகுப்பில் வெற்றி பெற்றுவிடுவார் என்று அவர் கணித்து விட்டார் போலும். எனவேதான், அதற்குரிய வலிமை வாய்ந்த பின்னணியை அமைத்துக்கொடுக்க விழைந்தவராய், அண்ணாவை பி. ஏ. ஆனர்ஸ் வகுப்பில் சேர்ந்து பயிலுமாறு கேட்டுக் கொண்டாராம்.

ஆனால், அண்ணாவோ, குடும்பநிலையை மனத்திற்கொண்டு தம் இயலாமையை எடுத்துச் சொல்லியிருக்கிறார். கல்லூரித் தலைவரோ அவருடைய கூற்றை ஏற்றுக்கொள்பவராக இல்லை. அண்ணாவைத் தனியே அழைத்து,

"நம்மைச் சேர்ந்தவர்களில், உன்னைப்போல் நன்றாகப் படித்துத் தேர்வில் நிறைந்த எண்கள் பெற்று முதல் வகுப்பில் வருவது அரிது, மிகச்சிலரே அப்படியுள்ளனர். ஆகையால், உன்னைப் போன்றவர்கள் முன்னேற வேண்டியது மிகமிக இன்றியமையாதது அன்றோ?" என்றுகேட்டு ஊக்கமூட்டினாராம். மேலும் அண்ணாவின் இலவசக் கல்விக்குரிய எல்லா உதவிகளும் புரிவதாக வாக்களித்தாராம்.

கருணையுள்ள அக்கல்லூரி முதல்வரால் அண்ணாவின் கல்விப்பயணம் கல்லூரியில் தொடர்ந்து நடந்தது.

கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் பாடப் புத்தகங்களில் மட்டுமே தம்மைப் புதைத்துக் கொள்ளும் 'புத்தகப் புழு' வாக அண்ணா அடைபட்டுக் கிடக்கவில்லை, மிதமிஞ்சிய அறிவுத் தாகங்கொண்டு 'நூல் நிலையங்கள் எங்கே! எங்கே!' என்று அலையாய் அலைந்திருக்கிறார். சென்னையில்

உள்ள தங்கசாலைத் தெருவில் பண்டிட் ஆனந்தம் என்பவர் அந்த நாளிலேயே தனிப்பட்ட முறையில் நூல் நிலையம் ஒன்றை நடத்தி வந்தார். அண்ணாவின் அறிவுத் தாகத்தைத் தீர்க்கும் தண்ணீர்ப் பந்தலாக அது விளங்கிற்று. சென்னைப் பல்கலைக்கழக நூலகத்துக்கும் அண்ணா அடிக்கடி செல்வது வழக்கம்.

'கன்னிமாரா நூல் நிலையத்தையே கரைத்துக் குடித்தவர்' என்ற ஒரு வழக்காறே ஏற்பட்டுத் தமிழகத்தில் உலவி வருவதை யாவரும் அறிவர்.

ஒரு சமயம் கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் மாணவர்களுக் குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு,ஒரு குறிப்பிட்ட பொருள்பற்றிக் கட்டுரை எழுதிவருமாறு கட்டளையிட்டார்.

பின்னர், கட்டுரைகளைத் திருத்த முற்பட்ட அவர் அண்ணாவின் கட்டுரையைக் கண்ணுற்றதும் திகைப்பில் ஆழ்ந் தார். அவருடைய புதுமை மணக்கும் கருத்துகளும், பொருத்த மான விளக்கங்களும் பேராசிரியரை வியப்பு வெள்ளத்தில் ஆழ்த்தியது.

அடுத்த நாள் கல்லூரி வகுப்பறையினுள் நுழைந்ததும் அண்ணாவைத் தம்மிடம் அழைத்தார் பேராசிரியர்; தம்முன்னே நிற்கும் அந்தச் சாதாரண மாணவரை நோக்கி,

"உன் கட்டுரைகளுக்கு வேண்டிய கருத்துகளை எந்தப் புத்தகத்திலிருந்து எடுத்து எழுதினாய்?" என்று வினவினார்.

"என் கட்டுரையில் காணப்படும் கருத்துகள் யாவும் என் சொந்தச் சிந்தனையில் தோன்றியவையே! அவற்றை எந்தப் புத்தகத்திலிருந்தோ, பத்திரிகையிலிருந்தோ நான் எடுத்து எழுதவில்லை," என்று அடக்கமாக விடையிறுத்தார் அண்ணா. அவருடைய அறிவுக் கூர்மையைக் கண்டு பேராசிரியரின் வியப்புக் கடல் மேலும் பன்மடங்காக விரிந்தது.

இவ்வாறு அண்ணா எழுதிய ஆங்கிலக் கட்டுரைகள் பல கல்லூரிப் பேராசிரியர்கள் பலரும் மூக்கின்மேல் விரல் வைக்கும் படியான மொழி அழகுடனும், எழில் நடையுடனும் கற்கண்டாய் இனித்தன. அவற்றுள் எல்லாராலும் ஒருமனதான பெரும் பாராட்டுப் பெற்றது 'மாஸ்கோ அணிவகுக்கலாம்' (Moscow may parade) என்னும் கட்டுரையாகும்.

மேற்கூறியவற்றால், அவர் பிற்காலத்தில் எழுத்துத் துறையில் எழுஞாயிறாக ஏற்றம் பெறப்போகிறார் என்பதற்கு ஒளியின் சாயல், அண்ணாவின் கல்லூரி வாழ்விலேயே காணப் பட்டது என்பதை அறியலாம்.

கல்லூரி மாணவப் பருவத்தில் எழுத்தில் புலியாகத் திகழ்ந்தது போன்றே பேச்சிலும் அரிமாவாக விளங்கினார் அண்ணா. அவைக் கூச்சமோ நடுக்கமோ அவரிடம் அணுவளவும் இல்லை. எந்தப் பொருள் என்றாலும் அவர் கேட்பவரின் சிந்தை மகிழத் தேன்மழைபோல் பேசத் தொடங்கிவிடுவார்.

அதுவும் பட்டிமன்றங்களில் பங்கு பெறுவதென்றால் அண்ணாவுக்கு அளவு கடந்த ஆசை. பயிலும் பருவத்திலேயே 'சொற்போர் அறிவை வளர்க்கும்' என்பதை ஒரு கொள்கை யாகவே அவர் கொண்டிருந்தார்; கூறி வந்தார். கல்லூரியில் எந்தச் சொற்போர் (Debate) நிகழ்ந்தாலும் அதில் தவறாமல் கலந்துகொள்வார்.

"அண்ணா கல்லூரியில் படித்த காலத்தில், அவர் கலந்து கொள்ளாத சொற்போர் அரங்கு எதுவும் பச்சையப்பன் கல்லூரியில் நடந்ததே இல்லை," என்று அவருடைய நண்பர்கள் பெருமிதத்தோடு கூறுகின்றனர்.

குறிப்பாக ஒய். எம். சி. ஏ. பேச்சு அரங்கில் அறிவியல் துறையில் பங்கு கொண்டு அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் மாணவர்கள் உள்ளத்தில் மயக்கமூட்டும் மதுவாகவே இருந் திருக்கின்றன. அந்த நாளிலேயே மேடைப்பேச்சிலே தென்றலின் குளிர்ச்சியையும், தேனின் இனிமையையும் கலந்து பொலிவையும் ஒளியையும் புகுத்திய பெருமை அண்ணாவுக்கு உண்டு.

பிற்றை நாளிலே பேச்சுக் கலையிலே கிரேக்க நாட்டு மார்க்கஸ் ஆண்டனியைப் பிரதிபலிப்பவராக அண்ணா பீடுநடை போடுவதற்கான அடிக்கல் அவரது கல்லூரி நாள்களிலேயே நாட்டப்பட்டுவிட்டது என்பதில் ஐயமே இல்லை.

இவ்வாறாக, எழுத்து, பேச்சு ஆகியவற்றால், பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் மனத்தில் மட்டுமன்று, பேராசிரியர்கள் கூட்டத்திலும் பேரிடம் பிடித்துக்கொண்டுவிட்ட அண்ணா — அறிவொளியைப்பரப்பிக் கொண்டிருந்த அண்ணா— அக்கல்லூரி யைவிட்டு 1934 ஆம் ஆண்டு வெளியேறினார். சாதாரண இளைஞராகவா? அல்லர்; முதுகலைப் (எம். ஏ.) பட்டம் பெற்ற

எழில் மகனாக! தமிழகத்தின் தலைமகனாக உயரப்போகும் தளபதியாக!

கல்விச் செல்வராம் அண்ணா அவர்கள் கல்வியைப்பற்றிச் சிந்தியுள்ள கருத்துமணிகள் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியன; அறிவுக்கு மெருகைத் தருவன:

"படிப்பே இல்லாமல் திறமை பெறமுடியாது. அப்படி யாராவது இருந்தால் விதி விலக்காக ஒரிருவர் இருக்கலாம். ஆனால், 'படித்ததனால் திறமை போய்விட்டது' என்று எவரும் சொல்லமாட்டார்கள்."

"கட்டடத்திற்குச் செங்கல்போல் வாழ்க்கை முன்னேற்றத் திற்குப் படிப்புத் தேவை; திறமை தேவை; எழுச்சி தேவை."

"வளருகின்ற சமுதாயத்துக்கு ஏற்பக் கல்விமுறை அமைய வேண்டும் என்பது மறுக்க முடியாதது".

"சமுதாயம் அனைத்தும் மகிழ்ச்சியாக இருக்கச் செய்ய வேண்டும்; அமைதியாக இருக்கச் செய்ய வேண்டும்; நிறைவாக இருக்கச் செய்யவேண்டும். மக்கள் நிம்மதியாக வாழ்கின்றார்கள்; அவர்களின் பிற்கால சந்ததியினரும் வாழ வழி செய்து வாழ்கின்றார்கள் என்ற நிலையை ஏற்படுத்தத்தான் கல்வி பெறுகின்றார்கள்."

"சமுதாயத்தை உயர்த்துவதற்குத்தான் கல்வி என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்."

"மாணவர்கள் வைரங்களாக இருக்க வேண்டும்; வைரத் திற்கு அதிக மதிப்பு இருப்பதற்குக் காரணம் பூமியின் மிக்க ஆழத்தில் இருப்பதே ஆகும்."

அருஞ்சொற்பொருள்

கணித்துவிட்டார் — பின்னர் நேரப்போவதை அளவிட்டுக் கூறினார், விழைந்தவராய் — விரும்பியவராய், கூற்றை — பேச்சை, எண்கள் — மதிப்பெண்கள் (Marks), மிதமிஞ்சிய — அளவு கடந்த, கண்ணுற்றதும் — பார்த்ததும், ஞாயிறு — சூரியன், பட்டிமன்றம் — ஒரு பொருள்பற்றி இருசாரார் சொற் போர் நடத்தும் அரங்கம், பொலிவு — அழகு.

பயிற்சி

I. விடை எழுதுக:

(1) அண்ணாவைப்பற்றிப் பேராசிரியர் சின்னத்தம்பி அவர்களின் கணிப்பு யாது ?

(2) கல்லூரியில் பயிலும்பொழுது அண்ணா அவர்கள் தம் அறிவை எவ்வாறு வளர்த்துக்கொண்டார் ?

(3) அண்ணாவின் கட்டுரையைப் படித்த பேராசிரியர் பாராட்டக் காரணம் என்ன ?

(4) பட்டிமன்ற நிகழ்ச்சிகளில் அண்ணா அவர்கள் எவ்வாறு புகழ் பெற்றார் ?

II. பின்வரும் வினாக்களுக்குக்குரிய விடைகளைப் பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விளக்கி எழுதுக:

(1) பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் கல்லூரிக் கல்வியில் அண்ணா அவர்களுக்கு அளித்த ஆதரவு

(2) அண்ணாவின் பேச்சுத்திறன்

(3) கல்விபற்றிய அண்ணாவின் சிந்தனைகள்.

III. (அ) பிரித்து எழுதுக:

தேர்ச்சியுற்று,	கல்விக்குரிய,
பின்னணி,	வகுப்பறை,
பிற்காலம்,	மட்டுமன்று,

(ஆ) சேர்த்து எழுதுக:

மனத்தில் + கொண்டு =	எழுத்து + துறை =
எடுத்து + சொல்லி =	சொல் + போர் =
இலவசம் + கல்வி, =	மேடை + பேச்சு =

(இ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

புத்தகப்புழு,	அளவுகடந்த,
மூழ்பட்ட,	பிற்றைநாளில்,

IV. (அ) 'உன்னைப் போன்றவர்கள் முன்னேறவேண்டியது மிக மிக இன்றியமையாதது'

(1) இவ்வாறு கூறியவர் யார் ?
(2) யாரிடம் கூறினார் ?
(3) இவ்வாறு கூறக் காரணம் என்ன ?

(ஆ) 'உன் கட்டுரைகளுக்கு வேண்டிய கருத்துகளை எந்தப் புத்தகத்திலிருந்து எடுத்து எழுதினாய் ?'

(1) இவ்வாறு வினவியவர் யார் ?
(2) யாரைப் பார்த்து வினவினார் ?
(3) அதற்கு அவர் கூறிய விடை யாது ?

3. நல்ல மரமும் நச்சு மரமும்

(டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை)

ஒரு நாள் அரசிளங்குமரன் ஒருவன் தன் தோழனைத் துணைக்கொண்டு கானகத்தில் வேட்டையாடச் சென்றான். அங்கு அவன் விரும்பியவாறு வேட்டையாட வேங்கையும் வேழமும் அகப்படாமையால், எங்கும் அலைந்து திரிந்து அலக்கணுற்றான். பசியால் மெலிந்து, வெயிலால் உலர்ந்து, இருவரும் தளர்ந்து சோர்ந்தனர். அப்போது நெடுந்தூரத்தில் ஒரு சிற்றூர் தோன்றக் கண்டு, அவ்வூரை நோக்கி இருவரும் மெல்ல நடந்து செல்லலாயினர். கதிரவன் வெம்மையால் அரசிளங்குமரன் தலை நோயுற்றுத் தன் தோழனது தோளைப் பற்றிக்கொண்டு வழி நடந்தான். அவ்வூரின் அருகே வந்தபோது இருவரும் மெய் சோர்ந்து, நா வறண்டு, அடி எடுத்து வைத்து நடப்பதற்கும் வலியற்றவராயினர்.

அந்நிலையில் இருவரையும் இன்முகம் கொண்டு எதிர் சென்று அழைப்பதுபோல, இளந்தென்றல் எழுந்து வந்தது. அம்மெல்லிய பூங்காற்றின் இனிமையால் புத்துயிர் பெற்ற நண்பர்கள், அகமும் முகமும் மலர்ந்து, தென்றல் எழுந்து வந்த திசை நோக்கிச் சென்றார்கள். அவ்வழியில், இளந்திரைகளோடு இலங்கிய நன்னீர்ப் பொய்கையொன்று அமைந்திருந்தது. அப் பொய்கையில் விளங்கிய செந்தாமரையில் அன்னங்கள் அமர்ந்து துயின்ற அழகு கண்ணைக் கவர்ந்தது. நற்றாமரைக் கயத்தில் துயின்ற நல்லன்னத்தைக் கண்ட இளவரசன், துணைவனை நோக்கி,

> "தோயும் திரைகள் அலைப்பத் தோடார் கமலப் பள்ளி
> மேய வகையில் துஞ்சும் வெள்ளை யன்னம் காணாய்!"

என்று தான் பெற்ற இன்பத்தை இனிது எடுத்துரைத்தான்.

அப்பொய்கையில் இலங்கிய அழகிய மலர்கள் முகமலர்ந்து இருவரையும் அருகே அழைப்பனபோல அசைந்தன. அவ்வாவியின் தண்மையும் செம்மையும் கண்ட இருவரும், 'தாய் முகம் கண்ட சேய்போல' மனம் களித்து, அதன் நன்னீரைப் பருகி மகிழ்ந்தனர். அருந்தாகத்தால் வருந்திய இருவருக்கும் தண்ணீரை எடுத்து வழங்கும் தன்மைபோல அடுக்கடுக்காய் அலைகள் கரையருகே வந்து சேர்ந்தன. தாகம் தணிந்து, மனமும் மெய்யும் குளிர்ந்த பின்னர் இருவரும் அக்குளத்தின் ஈரக்கரையில் அமர்ந்து

அங்கு வீசிய இளங்காற்றை நுகர்ந்து இன்புற்றனர். அப்போது அவ்வாவியின் அருகே கொத்துக்கொத்தாய்ப் பொன்னிறக் கனிகளைத் தாங்கிக் குளிர்நிழல் விரித்து நின்ற மரமொன்றைக் கண்டனர். அதன் நிழலில் தங்கி இளைப்பாற எண்ணி இருவரும் அங்குச் சென்றனர்.

கதிரவன் வெம்மையைத் தடுப்பதற்கு ஓங்கிய பாசிலைப் பந்தர் வேய்ந்தாற் போன்று விளங்கிய அம்மரத்தின் நிழலில் இருவரும் அயர்ந்த உறக்கத்தில் ஆழ்ந்தனர். சில நாழிகை சென்ற பின்னர், தோழன் துயிலொழிந்து எழுந்தான். எங்கும் பசுமை நிறமும், பறவையின் ஒலியும், பழத்தின் மணமும் நிறைந்திருப்பினும், பசியின் கொடுமையைப் பொறுத்தலாற்றாது வருந்தினான்; கற்பகத் தருவெனக் கவின் பெற்று விளங்கிய மரக்கொம்புகளை நயந்து நோக்கினான். அவற்றில் பொன்னிறமான பழங்கள் கொத்துக்கொத்தாய் எம்மருங்கும் இலங்கக் கண்டான்; அப்பொழுதே அம்மரக்கிளைகள் வழியாக மேலே சென்று, இருவரது அரும்பசியையும் தீர்ப்பதற்குப் போதிய கனிகளைக் கொய்து வந்து, துணைவனைத் துயிலினின்றும் எழுப்பினான்.

கனிகளின் நிறத்தைக் கண்டும், நறுமணத்தை நுகர்ந்தும் தீஞ்சுவையைத் துய்த்தும் இருவரும் இன்புற்றனர். பின்னும் சிறிது பொழுது அம்மரத்தின் நிழலில் அமர்ந்திருக்கையில் அரசகுமாரனது தலைநோய் மிகுந்தது. அதனைத் தீர்க்கும் வகையறியாது தோழன் திகைத்து, 'எவரேனும் இவ்வழி வாராரோ!' என்று எதிர்நோக்கியிருந்தான்.

இவ்வாறு இருக்கையில் அவ்விடத்தை நோக்கி முதியவன் ஒருவன் வந்து சேர்ந்தான். "தலைக்குத்துத் தீர்க்கும் மருந்து உங்களிடம் உண்டோ?" என்று தோழன் அவனை வினவினான். அப்பொழுது முதியோன் புன்னகை பூத்து, "கையில் வெண்ணெய் இருக்க நெய் தேடி அலையும் வெள்ளியரும் உண்டென்பதை இன்று நேரில் அறிந்தேன்! இம்மரத்தின் பட்டையிற் சிறிது செதுக்கி, அதன் சாற்றைத் தலையிற் பிழிந்தால், எவ்வகைத் தலைக்குத்தும் தீர்ந்துவிடுமே!" என்று சொல்லி அப்பாற் சென்றான். அதை அறிந்த தோழன் அளவிலா மகிழ்வடைந்து அம்மரப் பட்டையின் சாற்றை மன்னன் மைந்தனது தலையிற் பிழிந்தான். சிறிதுநேரத்தில் அரசிளங்குமரனது தலைக்குத்துஅறவேஒழிந்தது.

அந்நிலையில், தோழன் தலைநோய் தீர்ந்த இளவரசனை நோக்கி, "ஐய, நாம் கானகம் வந்ததுமுதல் இதுவரையும்

நிகழ்ந்த செயல்களைப் பார்த்தாயா? நாம் பசியாலும் வெயிலாலும் நலிந்து மெய்தளர்ந்து வருந்தும் நிலையில் இப்பொய்கை நம்மை அன்புடன் அழைத்து இன்முகம் காட்டித் தாகம் தணித்துத் தளர்வை மாற்றியது. அப்பால் இம்மரம் நாம் தங்கியிருக்கக் குளிர்நிழல் தந்து பசியாறப் பழங்களை அளித்துத் தலைநோய் தீர்க்கவும் தனி மருந்தாய் அமைந்தது. இத்தன்மையை நோக்குங்கால், நல்லார் கைப்பட்ட செல்வத்தின் தன்மை நன்கு விளங்குமன்றோ ?

"வறுமையால் வருந்தி வந்தவரை இனிய முகத்தோடு ஏற்று, அவரது குறையை நிறைசெய்வதே அறிவுடைச் செல்வர் செயலாகும். ஆற்று வழியாகவும் ஊற்று வழியாகவும் நன்னீரைத் தன் அகத்தே நிரப்பிக்கொள்ளும் இப்பொய்கை போல அறிவுடையவர்கள், நல்வழியில் ஈட்டிய பெரும்பொருள் நிறைந்த பண்ணைகளாய் விளங்குவார்கள். நீர் நிறைந்த பொய்கை எப்பொழுதும் தண்மை வாய்ந்து விளங்குதல் போல அறிவுடைய செல்வரும் ஈரம் வாய்ந்த நெஞ்சினராய் இலங்குவர் தாகத்தால் வருந்தி வருவோருக்குத் தடையின்றி நீர் வழங்கும் தடாகம்போலக் கல்வியும் செல்வமும் பூத்த மேலோர், வறிஞர்க்கு வரையாது பொருள் வழங்கும் வள்ளல்களாய் விளங்குவர் இன்றும் தமக்கென வாழாது பிறர்க்குரியாளராய் வாழும் பெரியோர்பால் அமைந்த செல்வம், ஊருணியின் நீர்போல ஊரார்க்கே முழுவதும் பயன்படுவதாகும். இதனாலேயே,

'ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு'

என்று திருவள்ளுவர் அருளிப்போந்தார். இன்னும் பழுதறு பழங்களைத் தாங்கி நிற்கும் இப்பயன் மரம், தன் இனிய பழங்களால் பசி நோய் அகற்றி, குளிர் நிழலால் களைப்பை மாற்றி பட்டையால் பிணியைப் போக்கிப் பல வகைகளில் பயன்படுதல் போல, அறிஞரிடம் அமைந்த செல்வம் வறியர்க்குப் பல வகையில் பயன்படுதலாலேயே,

'பயன்மரன் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின்,'

'மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்,'

என்று நாயனார் பொருளுரை எழுந்தது. ஆகவே, தண்மை வாய்ந்த தடாகம்போலவும், பழங்கள் நிறைந்த பயன்மரம்

போலவும் வாழ்வதே பண்புடைமையாகும் என்று இனிதாக எடுத்துரைத்தான். அரசிளங்குமரனும் அதன் உண்மையை அறிந்து, தோழன் கூறிய பொருளுரையைப் பொன்போலப் போற்றினான்.

அப்பால், இருவரும் தமது ஊரை நோக்கிச் சென்றனர் செல்லும் வழியில் ஒரு சிற்றூர் குறுக்கிட்டது. அதன் நடுவே இருவரும் முன் கண்டறியாத ஒரு மரத்தினைக் கண்டு வியந்து நின்றனர். அம்மரம் கவையாகிக் கொம்பாகிக் காட்டு மரம் போல ஓங்கி வளர்ந்திருந்தது. அதன் கொம்புகளிலும் கிளை களிலும் கூரிய முள் நிறைந்திருந்தது. இலைகளும் தழைகளும் இல்லாமல் பட்டமரம் போன்று நின்ற அதன் கிளைகளில் செவ்வையாய்ப் பழுத்த பழங்கள் கொத்துக்கொத்தாய் அமைந்து கண்களைக் கவர்ந்தன. அம்மரத்தைக் கண்டு இருவரும் வியந்து நிற்கையில் அவ்வழியே இளைஞன் ஒருவன் வந்துசேர்ந்தான்.

அவன் மரத்தருகே நின்ற இருவரையும் நோக்கி, "ஐயன்மீர் நீவிர் இருவீரும் அயலூரினிர் என்பதை அறிந்தேன். ஏனெனில், இவ்வூரார் எவரும் இப்பாழான பழுமரத்தைக் கண்ணெடுத்தும் பாரார். இம்மரத்தில் எந்நாளும் இலைகளும் தழைகளும் இல்லாமையால், விலங்குகளும் இதனடியில் நில்லாமல் விலகிப் போகும்; கண்களைக் கவரும் வனப்பு வாய்ந்த இக்கனிகளும் நச்சுக் கனிகளாய் இருத்தலின், உண்டாரைக் கொன்றுவிடும். இம்மரத்தின் கொம்புகளை விறகாக வெட்டி எரிப்பதற்கும் இதனிடம் அமைந்த முட்கள் இடையூறாயிருக்கின்றன. இப் பாழ்மரம் கடுங்காற்றில் அகப்பட்டு முரிந்து வேரற்று விழவேண்டு மென்று இவ்வூரார் இறைவனை நாளும் வழிபடுகின்றனர். இம் மரம் என்று விழுமோ அன்றே இவ்வூராருக்கு நன்றாகும்," என்று அதன் தன்மையை விரிவாகக் கூறி முடித்தான்.

அதைக் கேட்ட அரசிளங்குமரன், முன்னே தங்கி இளைப் பாறிய மரத்தின் நலத்தையும், பின்னே கண்ட மரத்தின் கொடுமையையும்ஒப்புநோக்கி, 'நச்சு மரத்தில் அமைந்த நன்னிறக் கனிகள், பேதையர் கைப்பட்ட செல்வம் போலப் பிறர்க்கு இடர் விளைப்பனவாகும்' என்று எண்ணி வருந்தினான்.

'நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று,'

என்னும் பொய்யா மொழியின் பொருளைத் தெளிந்தான்.

இத்தகைய செல்வம் நிறைந்த பேதையர் நிலத்துக்குச் சுமையாயும், உலகத்திற்கு உற்ற வசையாயும் அமைந்திருத்தலால், அன்னார் அழிந்து ஒழிவதே நாட்டுக்கு நன்மை பயப்பதாகும். அறிவுடையசெல்வரைஉலகம் போற்றும்; அறிவுடைய செல்வனது ஆக்கம் கண்டு உலகம் களிக்கும்; அறிவிலாச்செல்வனது அழிவைக் கண்டு உலகம் மகிழும். அறிவுடைய செல்வன், தன் பொருளைத் தக்கவாறு பயன்படுத்தி இம்மையிற் புகழும் மறுமையில் இன்பமும் எய்துவான்; அறிவிலாச் செல்வன், பயன்பட வாழும் பண்பறியாப் பேதையனாய், இம்மையிற் பழியும் மறுமையில் துன்பமும் எய்துவான்.

'நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கட் பட்ட திரு,'

என்பது என்றும் பொய்யா மொழியாகும்.

அருஞ்சொற்பொருள்

வேங்கை— வரிப்புலி, வேழம் —யானை, அலக்கணுற்றான் — துன்பமடைந்தான், மெய் சோர்ந்து — உடல் தளர்ந்து, இளந் திரை — மெல்லிய அலை, இலங்கிய — விளங்கிய, பொய்கை — குளம், கயம் — நீர்நிலை, தோடு — இதழ், கமலப்பள்ளி — தாமரை மலராகிய படுக்கை, வாவி — குளம், கொய்து — பறித்து, வெள்ளியர் — அறிவிலார், தனிமருந்து — ஒப்பற்ற மருந்து, ஊருணி — ஊரார் நீர் பருகும் குளம், பாசிலை — பசுமையான இலை, நச்சு — விடம், நச்சப்படாதவன் —விரும்பப்படாதவன், நயனுடையான் — ஒப்புரவாளன், திரு — செல்வம்.

பயிற்சி

I. சுருக்கமாக விடை எழுதுக:

(1) அரசிளங்குமரனும் அவன் தோழனும் எங்கே சென்றனர்? அவர்கள் எங்ஙனம் துயருற்றனர்?

(2) தோழர் இருவரும் கண்ட பொய்கையின் இயற்கைக் காட்சி எவ்வாறு இருந்தது?

(3) பொய்கைக் கரையில் இருவரும் எவ்வாறு இன்பம் அடைந்தனர்?

(4) பொய்கைக் கரையிலிருந்த மரம் எவ்வாறு சிறப்புற்றிருந்தது?

(5) பழுமர நிழலில் தோழர் இருவரும் எவ்வாறு இன்புற்றிருந்தனர் ?

(6) அரசிளங்குமரனின் தலைக்குத்து எவ்வாறு தீர்ந்தது ?

(7) தோழன், தலைக்குத்து நீங்கிய அரசிளங்குமரனைப் பார்த்துக் கூறியது யாது ?

(8) சிற்றூரின் நடுவே நண்பர் இருவரும் எதனை வியந்து நோக்கினர் ? ஏன் ?

(9) தோழர் இருவரையும் நோக்கி இளைஞன் என்ன கூறினான் ?

(10) அறிவுடைய செல்வருக்கும் அறிவற்ற செல்வருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

II. (அ) "தலைக்குத்துத் தீர்க்கும் மருந்து உங்களிடம் உண்டோ" ?

(1) இவ்வாறு கேட்டவன் யார் ?

(2) யாரைப் பார்த்துக் கேட்டான் ?

(3) அதற்கு அவர் கூறிய பதில் யாது ?

(ஆ) "இம்மரம் என்று விழுமோ, அன்றே இவ்வூராருக்கு நன்றாகும்."

(1) இதனைக் கூறியவன் யார் ?

(2) யாரிடம் கூறினான் ?

(3) மரம் ஏன் விழவேண்டும் ?

III. நல்ல மரத்தாலும் நச்சு மரத்தாலும் தோழர்கள் அறிந்த உண்மைகளைப் பதினைந்து வரிகளில் எழுதுக.

IV. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

புத்துயிர், அகமும் முகமும் மலர்ந்து, தாய் முகம் கண்ட சேய்போல, கொத்துக் கொத்தாய், புன்னகை பூத்து, தடையின்றி.

V. பிரித்து எழுதுக:

முகமலர்ந்து,	பழுத்தற்று,
தடையின்றி,	பாசிலை,
மருந்தாகி,	பண்பறியா.

4. புதுமை கண்டவர்

(திரு. எஸ். எம். சேவியர்)

மனிதனின் சிந்திக்கும் திறனால் உலகில் அன்றாடம் பல புதுமைகள் பூத்தவண்ணம் இருக்கின்றன. அவற்றால் நாம் பல வாழ்க்கை வசதிகள் பெற்று இன்புறுகிறோம். மெய்வருத்தம் பாராமல் — கண்துஞ்சாமல் அறிவியல் அறிஞர் பலர் நம் முந்தையோர் காணாத வியத்தகு சாதனைகளைச்செய்துள்ளனர். அறிவியல் வளர்ச்சிக்கு அடிகோலியவர்களுள் சர் ஐசக் நியூட்டன் என்னும் அறிஞர் குறிப்பிடத்தக்கவர்.

சர் ஐசக் நியூட்டன் ஆங்கில நாட்டில் லிங்கன்ஷயர் என்னுமிடத்தில் கி.பி. 1642 ஆம் ஆண்டில் பிறந்தார். அவருக்கு மூன்று வயது நிரம்புமுன்னரே அவர் தந்தையார் இயற்கை எய்தினார். நியூட்டன் தம் பாட்டியாரிடம் வளர்ந்து வந்தார். நியூட்டன் பள்ளிப் படிப்பில் அவ்வளவாகத் திறமை பெற்றவராக இல்லை. ஆனால், கணக்குப் பாடத்தில்மட்டும் வகுப்பில் முதல்வராக இருந்தார்; கைத்தொழிலிலும் திறமை மிக்கவராக விளங்கினார். விளையும் பயிர் முளையிலே தெரியும்,' என்னும் பொன்மொழிக்கிணங்க, கருவிகளைக் கொண்டு ஏதேனும் ஒன்றைச் செய்த வண்ணம் இருப்பார். ஆழ்ந்த சிந்தனையும் வினைத்திட்பமும் இளமையிலேயே அவரிடம் குடிகொண்டிருந்தன.

நியூட்டன் மெழுகினால் விளக்குகள் செய்து தம் நண்பர்களுக்குக் கொடுத்து இன்புறுவார்; காற்றாடி செய்து அவற்றின் வால்களில் விளக்குக் கூண்டுகளைக் கட்டிப் பறக்கவிடுவார் இரவில் அவை 'பளிச்பளிச்' சென்று மின்னுவதைக் கண்ட மக்கள் அவற்றை வால்மீன்கள் என நம்பி, அவற்றால் தீங்கு ஏதேனும் நேருமோ என அஞ்சினர். தண்ணீர்த் துளிகளைச் சொட்ட வைத்து மணி அறியும் கடிகாரத்தையும், நிழலைக்கொண்டு நேரம் அறியும் கடிகாரத்தையும் செய்து காட்டிய நியூட்டனைப் பலரும் பாராட்டினர்.

ஒரு நாள் அவர் ஆப்பிள் மரத்தின் கீழே அமர்ந்திருந்தார். மரத்திலிருந்து ஆப்பிள் பழமொன்று கீழே விழுந்தது. எதனையும் கூர்ந்து அறியும் நுண்ணறிவு மிக்க நியூட்டன், 'இந்தப் பழம் ஏன் நிலத்தில் வந்து விழவேண்டும்; ஏன் வானத்தை நோக்கி

செல்லக்கூடாது' என்று சிந்திக்கத் தொடங்கினார். அச் சிந்தனையின் பயனாகப் பூமிக்குப் பொருள்களைத் தன்பால் ஈர்க்கும் ஆற்றல் உண்டு என்பதைக் கண்டறிந்தார்.

நியூட்டன் காற்றின் வேகத்தையும் கணக்கிட்டு அளந்து கூறினார். அவர் தமது வீட்டுக்கு அண்மையில் இருந்த காற்றாடி இயந்திரம் ஒன்றைக் கண்டு, அது இயங்கும் விதத்தை ஆராய்ந்தார்; சில நாள்களில் அதுபோலவே ஓர் இயந்திரத்தைச் செய்து முடித்தார். அவரது பேராற்றலைக் கண்ட நண்பர்களும் ஊர் மக்களும் அவரைப் பலவாறு பாராட்டினார்கள்.

புதுமை காண்பதில் புத்துணர்ச்சி கொண்ட நியூட்டன் தம் அன்னையார் விழைந்த வண்ணம் சிறிது காலம் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டார். அத்தொழிலில் அவருக்கு ஆர்வமும் அக்கறையும் இல்லாமையால் மீண்டும் கல்வி பயில விரும்பினார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கணிதமும் வானியற்கலையும் பயின்றார்; வானியல் ஆராய்ச்சி யில் அவரே முதன்மை பெற்று விளங்கினார். ஓர் இருட்டறையில் முப்பட்டைக் கண்ணாடி (Prism) ஒன்றை வைத்து அதன் ஊடே கதிரவன் ஒளியைச் செலுத்தினார். ஊடுருவிச் சென்ற ஒளி வானவில் போன்று பல வண்ணங்களுடன் எதிரே இருந்த சுவரில் பட்டது. இதனால் கதிரவனின் ஒளி வெண்மையாகக் காணப்பட்டாலும் அதில் பல நிறங்கள் அடங்கியுள்ளன என்னும் உண்மை புலப்பட்டது. நிறவொளிக் கதிர்களின் தன்மைகளும் ஆற்றல்களும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவை என்பதையும் விளக்கிக் காட்டினார். இவ்வொளி நிரல் (spectrum) ஒளி ஆராய்ச்சிக்கே அடிப்படையாக விளங்குகிறது.

1668ஆம் ஆண்டில் நியூட்டன் எம்.ஏ. பட்டம் பெற்றார்; கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப் பெற்றார். அடுத்த ஆண்டில் அப்பல்கலைக் கழகத்தின் கணிதப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். 1672ஆம் ஆண்டில் அரசர் கழகத்தின் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

நியூட்டன் பொருள்களை ஆராயும்போது தம்மையே மறந்த நிலையில் இருப்பார். ஒருநாள் அவர் தம் குதிரையின் கடிவாளத்தைப் பற்றிக்கொண்டு சென்றபோது குதிரை நழுவிச் சென்றுவிட்டது. ஆனால்,கையில் கடிவாளத்தைமட்டும் பிடித்துக் கொண்டே சென்றார். மற்றொரு நாள் முட்டை சமைக்க முற்பட்டபோது உலையில் முட்டைக்குப் பதிலாகத் தம் கைக்

கடிகாரத்தையே போட்டுவிட்டார். இங்ஙனம் அவர் இரவா பகலா வெயிலா, மழையா என்று பாராமல் ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டிருந்தார்.

நியூட்டன் தாம் கண்டுபிடித்த உண்மைகளையெல்லாம் திரட்டி எழுதி ஒரு நூலாக வெளியிட எண்ணினார். ஒரு நாள் அவர் வீட்டில் இல்லாத சமயத்தே 'டைமண்டு' என்னும் அவரது நாய் எரியும் மெழுகுவர்த்தியை அவர் எழுதிய தாள்களின்மீது சாய்த்துவிட்டது. தாள்கள் யாவும் தணலுக்கு இரையாயின. நியூட்டன் வீடு திரும்பியதும் நடந்த நிகழ்ச்சியைக் கண்டு ஆறாத் துயரடைந்தார். ஆயினும், தம் ஊமை நண்பனுக்கு ஒரு தீங்கும் செய்யாமல் பொறுத்துக்கொண்டார்; பன்னிரண்டு ஆண்டுகள் மீண்டும் தம் ஆய்வுகளைச் செய்துபார்த்து அந்நூலை அச்சாக்கி வெளியிட்டார். இங்ஙனம் அல்லும் பகலும் அயராது பாடுபட்ட அவர்தம் உடல் நலம் குன்றத் தொடங்கியது.

நியூட்டன் மிகச் சிறந்த அறிவியலறிஞராக விளங்கினாலும் 'கற்றது கைம்மண்ணளவே' என்னும் தன்னடக்கத்துடன் இருந்தார். அவர் என்றும் இறையன்பில் திளைப்பவர்; உலகில் தோன்றும் விந்தைகள் அனைத்தும் இறைவனின் திருவிளையாடலே என நம்பினார். அன்பும் அடக்கமும் அவர்தம் பிறவிக் குணங்களாகவே மிளிர்ந்தன. மெய்வருத்தம் பாராமல் — பசி நோக்காமல் கருமமே கண்ணாக இருந்தார். முதுமைப் பருவத்திலும் அவர் அரசர் கழகத்துக்குச் சென்று ஆராய்ச்சியில் ஈடுபட்டார். 1727 ஆம் ஆண்டு நியூட்டன் தம் எண்பத்தைந்தாம் அகவையில் பொன்னுடல் நீத்துப் புகழுடம்பு எய்தினார்.

அருஞ்சொற்பொருள்

அன்றாடம் — ஒவ்வொரு நாளும், மெய் — உடல், துஞ்சாமல் — தூங்காமல், முந்தையோர் — முன்னோர், அடிகோலியவர் — வழிகாட்டியவர், வினைத்திட்பம் — எடுத்த செயலைச் செம்மையாகச் செய்யும் திறமை, ஈர்க்கும்—இழுக்கும், இயங்கும்—வேலைசெய்யும், விழைந்த — விரும்பிய, தணல் — நெருப்பு இறையன்பு — தெய்வ பக்தி, அகவை — வயது.

பயிற்சி

I. விடை எழுதுக:

(1) 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்னும் பழமொழிக்கு நியூட்டன் எவ்வாறு பொருத்தமாக இருந்தார்?

(2) நியூட்டன் புவியீர்ப்பு ஆற்றலைக் கண்ட நிகழ்ச்சியை விளக்கி எழுதுக.

(3) நியூட்டனின் கல்வித் தேர்ச்சியைக் குறித்து நீவிர் அறிவன யாவை ?

(4) நியூட்டன் பெற்ற சிறப்புகள் யாவை ?

(5) அவர் தம் ஆராய்ச்சியின்போது தம்மையே மறந்திருப்பார் என்பதைச் சான்று கூறி விளக்குக.

(6) நியூட்டன் உயிர்களிடத்தில் அன்புடையவர் என்பதை எதனால் அறியலாம் ?

(7) நியூட்டனின் குணநலன்கள் யாவை ?

II. நியூட்டன் கண்ட ஒளிநிறல் ஆராய்ச்சியைப் பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விளக்கி எழுதுக.

III. (அ) எளிய தமிழில் பொருள் தருக:

துஞ்சாமல், விழைந்த, தணல்,
ஈர்க்கும், முந்தையோர், அகவை.

(ஆ) பிரித்து எழுதுக:

பேராற்றல், மண்ணளவு, புகழுடம்பு,
நிறவொளி, அறிவியல், பொன்னுடல்.

(இ) சேர்த்து எழுதுக:

வினை + திட்பம் = பெருமை + ஆசிரியர் =
நோக்கி + செல்ல = பத்து + இரண்டு =

(ஈ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

கண்துஞ்சாமல், பாராட்டினர், ஆறாத்துயரம்,
சாதனைகள், புலப்பட்டது, அல்லும் பகலும்.

5. ஆங்கிலப் புலவரும் அருந்தமிழ்க் கவிஞரும்

(திரு. வி. கணபதி)

இயற்கையின் பேரெழில் கண்டு மக்கள் அனைவரும் பெருவியப்படைவர். கண்ணுக்கெட்டிய தூரம் மரங்களடர்ந்த மலைத் தொடர்ச்சியின் இனிய காட்சி கண்டு மகிழ்ச்சியடைவர் பலர். காய்கனிகள் நிறைந்து விளங்கும் மரங்களின் நிலையும், கொத்துக் கொத்தாக வண்ண மலர்களைத் தாங்கி நிற்கும் செடி கொடிகளின் தோற்றமும் கண்டு மயங்காதவர் யார்? செவிக்கினிய ஒலியுடன் நீர் நிறைந்து வரும் சிற்றாறுகளைக் கண்டு தம் மெய்ம்மறந்து நிற்பர் சிலர். சிப்பிகளும் சங்குகளும் சிதறுண்டு கிடக்கும் பரந்த மணல் வெளியின்மீது அடுக்கடுக்கான அலைகள் வெண் நுரை ஏந்திவந்து மோதிச் சிதறும் காட்சி கண்டு தம் உள்ளத்தைப் பறிகொடுத்து நிற்பர் பலர். நீலச் சுடர் மணி வானத்தில் காலைக் கதிரவனின் காட்சியினைக் கண்டு நினைவிழந்து நிற்பர் சிலர். இவ்வாறு இயற்கை நலம் கண்டு போற்றும் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கவினுறு காட்சிகள் கணக்கிலடங்கா.

அழகுமிக்க காட்சியில் மனத்தைப் பறிகொடுத்து நிற்கும் மக்கள் ஒன்றும் பேசாது வாளா இருப்பரோ? ஒருபோதும் இரார். "ஆகா! என்ன அழகு! என்ன அழகு!" என்று போற்றுவர் சிலர். "இது போன்ற கவினுறு காட்சியை நான் கண்டதே இல்லை," என்று பாராட்டி நிற்பர் பலர். அறிவிற் சிறந்த சொல்வளம் மிக்க புலவர்களோ இயற்கைக் காட்சியின் அழகில் முழுமையும் ஈடுபடுவர்; சிறந்த உவமை கூறிப் பொருத்தமுற வருணிப்பர்; கற்பனை வளம் பொருந்த, கவிதை நயத்தோடு இலக்கிய ஓவியம் தீட்டுவர்; அதனைப் படிப்பவர் அனைவரையும் எழில்மிகு காட்சியினை எதிரேகாண்பதுபோன்று அகக்கண்ணால் கண்டு இன்ப வெள்ளத்தில் திளைக்கச் செய்வர்.

மாலைக் காலத்தே தோன்றும் மஞ்சள் வெயிலினைக் கண்டு மகிழ்ந்த பாரதியாரின் "தங்கம் உருக்கித் தழல் குறைத்து எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ?" (குயிற்பாட்டு) என்னும் அடிகளைப் படிக்கும்போது மஞ்சள் வெயிலினை நேரே காண்பதைவிட நாம் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம் என்பதில் ஐயம் உண்டோ?

இவ்வாறு இயற்கைக் காட்சிகளை வருணிக்கும் பொழுது தமிழ்ப் புலவர்கள் தனித் தனித் திறனுடன் அழகுபடக் கூறியுள்ளார்கள். மலர்கள் கொத்துக் கொத்தாகப் பூத்திருந்த கவின்பெறு காட்சியினை ஆங்கில மொழிக் கவிஞர் ஒருவரும், தமிழ்ப் புலவர் ஒருவரும் கண்டனர். இருவரும் அவ்வெழில் தோற்றத்தை அழகிய சொல்லோவியமாக எழுதிக் காட்டினர். இரு காட்சிகளையும் பார்ப்போம்.

இயற்கையைப் பாடுவதில் சிறப்பான தன்மை பெற்றிருந் ததால் 'இயற்கைப் புலவர்' என்றே புகழ்ப் பெயருடையவர் வேர்ட்ஸ் வொர்த் என்னும் புலவர். அவர் ஒரு நாள் தம் நாட்டு இயற்கைப் பகுதியினை மனம் விரும்பிய வண்ணம் மகிழ்ச்சியுடன் பார்த்து வந்தார்; ஏரிக்கரையருகே நெடுந் தொலைவுக்கு ஆயிரக் கணக்கில் கொத்துக் கொத்தாகப் பூத்திருந்த மஞ்சள் நிற மலர்க் கூட்டத்தைக் கண்டார்; மனத்தைப் பறிகொடுத்தார்; எழில்மிக்க கவிதை ஓவியம் ஒன்றைத் தீட்டினார்.

தமிழில் முத்தொள்ளாயிரம் என்னும் ஒரு நூல் தனி நூலாகக் கிடைக்கவில்லை — மேற்கோளாகக் காட்டப்பட்ட செய்யுள்களைத் தொகுத்துத் தனி நூலாக வெளியிட்டுள்ளனர். பாடல்கள் மிகப் பழமையானவை. பாடியவர் யாரென்று தெரிய வில்லை. ஆனால், முத்தொள்ளாயிரம் பாடிய புலவர் மிகச் சிறந்த கவிஞர் என்பதைஅவர்தம் பாடல்களால் அறிகின்றோம். சேர நாட்டில் உள்ள ஒரு பொய்கையில் செவ்வல்லி மலர்கள் மிகுதியாக மலர்ந்திருந்தன. அக்காட்சியைக் கண்ட கவிஞர் அப்படியே அதனைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

ஆங்கிலப் புலவரும் மிகுதியான மஞ்சள் நிற மலர்க் கூட்டத் தைப் பார்த்தார். தமிழ்ப் புலவரும் மிகுதியான செந்நிற மலர்க் கூட்டத்தைப் பார்த்தார். இருவரும் எழுதிக் காட்டும் காட்சி யினைக் காண்போம்.

முதன்முதலாக மலர்க் கூட்டத்தைப்பற்றிக் கூறும்பொழுது வேர்ட்ஸ் வொர்த், "மலை முகடுமீதும் மலைச் சாரல்களிலும் அலைந்து திரியும் மேகக் கூட்டங்களைப் போன்று, நான் தனிமையில் அலைந்து திரிந்து வந்தேன். திடீரென ஓரிடத்தில் பொன்மயமான 'டேஃபாடில்ஸ்' (Daffodils) மலர்க் கூட்டத்தைக் கண்டேன். ஏரிக்கரையோரத்திலும் மரங்களினடியிலும் அவை மென்காற்றில் ஆடி அசைந்து நடனமாடும் காட்சியைக்

கண்டேன்[1]" என்னும் கருத்தமையப் பாடினார். மஞ்சள் மலர்கள் என்பதனைப் பொன்மயமான 'டேஃபாடில்ஸ்' என்றமையாவ் பெறவைத்தார்.

"இரவில் வானத்தில் தோன்றும் பால் வீதியின்கண் (Milky Way) ஒளி வீசிப் பளிச்சிடும் விண்மீன்களைப் போன்று தொடராக அமைந்து அவை விரிந்த கரையையொட்டி முடிவில்லா வரி சையில் விளங்கின[2]" என உவமை கூறி வருணித்தார்.

"புக்கத்து ஏரியில் நீரலைகள் நடனமாடின. ஆனால் அம்மலர்களின் நடனம், ஒளி தவழும் நீரலைகளின் நடனத்தைத் தம் மகிழ்ச்சியால் வென்றமை கண்டேன். இத்தகைய இன்பக் காட்சியில் திளைக்கும் கவிஞன் ஒருவன் கழிபேரின்பமடையா திருத்தல் இயலாது"[3] என்று தம் உணர்ச்சியை வெளிப் படுத்தினார்.

"சிந்தனையின்றியோ, சோர்ந்த நிலையிலோ பல வேளை களில் நான் என் படுக்கையில் படுத்திருக்கின்றபோது அகக் கண்ணில் அந்த அழகு காட்சி பளிச்சிடுகின்றது. அது தனித் திருக்கும்போது பெறும் இன்பம் கழிபேரின்பமாகும். அவ்வேளை யில் என் உள்ளம் இன்பத்தால் பொங்கி வழிந்து அம்மலர்களுடன் இணைந்து கூத்தாடுகின்றது"[4] என்று அக்காட்சி அவர்

---

1 I wandered lonely as a cloud
That floats on high o'er vales and hills
When all at once I saw a crowd
A host of golden daffodils.
Beside the lake beneath the trees
Fluttering and dancing in the breeze.

2 Continuous as the stars that shine
And twinkle on the milky way
They stretched in never ending line
Along the margin of a bay.

3 The waves beside them danced, but they
Out—did the sparkling waves in glee,
A poet could not but be gay,
In such a jocund company.

4 For oft when on my couch I lie
In vacant or in pensive mood
They flash upon that inward eye
Which is the bliss of solitude
And then my heart with pleasure fills
And dances with the daffodils.

நெஞ்சத்தில் நிலைத்த இடம் பெற்றமையையும், அவ்வப்போது தோன்றி ஆரா இன்பம் அளித்தமையையும் எழுதிக் காட்டுகின்றார். வேர்ட்ஸ் வொர்த் பாடியுள்ள பல பாடல்களில் மலர்களைப்பற்றிய இப்பாடல்கள் மிகவும் நயம் வாய்ந்தவை ஆகும்.

முத்தொள்ளாயிரப் புலவர் செவ்வல்லி மலர்களைக் கண்டார்; நீர்ப் பொய்கையில் அவை மிகுதியாகப் பூத்திருந்தன மெல்லிய காற்றில் அவை மென்மையாக அசைந்தாடின. அக்காட்சியைக் கண்டு அவர் மகிழ்ந்தார். மலர்களின் செழுமை அவருக்கு நாட்டின் செழுமையை உணர்த்திற்று. எனவே, நாட்டைப்பற்றிப் பாட உள்ளத்தில் கருத்துத் தோன்றியது.

இத்துணை செழுமையாகவுள்ள நாட்டில் மக்கள் எவ்வளவு வளமையாக, எவ்வளவு அமைதியாக வாழ்வார்கள் என்பதனை அவர்தம் அகக்கண்ணால் கண்டார். ஆனால், அதே சமயம் அவர் அங்குக் கேட்ட பேரொலி என்ன? அதோ! அந்நீர்த் தடாகத்திலேயே பறவையினங்கள் ஒலி எழுப்புகின்றன; தத்தம் குஞ்சுகளை அணைத்துக் கொள்கின்றன.

பறவையினங்கள் படபடவெனச் சிறகுகளை அடித்துக் கொண்டு தம் குஞ்சுகளை அருகழைத்து அணைத்துக் கொள்ளும் காட்சியைச் சுட்டிக் காட்டுகிறார். அவை ஏன் அவ்வாறு ஒலி எழுப்புகின்றன? தண்ணென்றிருக்கும் பொய்கையில் வாழும் புள்ளினங்கள் எதனைக் கண்டு அஞ்சுகின்றன?

பறவைகள் நெருப்பு எரிவதைக் கண்டு அஞ்சின எனக் கவிஞர் கூறுகின்றார். மெல்லிய பூங்காற்று வீசுகின்றது. நீர் நிறைந்து நிற்கும் பொய்கையில் மென்மையான இதழ் நிறைந்த செவ்வல்லி மலர்கள் எழில் பெறப் பூத்து நிற்கின்றன. இச்சூழலில் வாழும் புள்ளினங்கள் எங்கே நெருப்பினைக் கண்டன? இதனை விளக்கும்போதுதான் கவிஞர் காட்டும் செறிந்த மலர்க் கூட்டத்தை நாம் காண்கிறோம்.

'பொய்கையில் செவ்வல்லி மலர்கள் ஒன்றுக்கொன்று அண்மையில் அமைந்து மிகப்பலவாக நீர்ப்பகுதியின் மேலே விளங்கின. செம்மை நிற இதழ்கள் விரிந்தன. விரிந்த இதழ்கள் மென் காற்றில் மெல்ல அசைந்தன. செம்மை நிறம் நெருப்பைப் போன்றிருந்தது. இதழ்கள் அசைதல் நெருப்பின் அனல் கொழுந்துவிட்டெரிவது போன்று தோற்றமளித்தது. இதனைக் கண்ட பறவையினங்கள் நீர்மேல் நெருப்புத் தோன்றியதெனு

— இல்லை இல்லை — வெள்ளம் தீப்பட்டதெனஅஞ்சித் தம்குஞ்சுகளை அருகழைக்க ஒலியெழுப்பின' எனக் கவிஞர்கூறுகிறார்.

செவ்வல்லி மலர்கள் நெருக்கமாகப் பூத்துள்ளதையும், விரிந்த மலர்களின் செவ்வண்ணத்தால் ஏற்படும் தீ எரிதல் போன்ற தோற்றத்தினையும் சில சொற்களில் கூறி இயற்கைக் காட்சியினை நேரே நம்மைக் காணச் செய்கின்றார் கவிஞர்.

இக்காட்சியினைக் கண்ட புள்ளினங்கள் ஆரவாரம் செய்தன என்று கூறுவதன்மூலம் ஆறறிவுக்குக் குறைந்த புள்ளினங்களிடையே ஏற்படும் தேவையில்லாத ஆரவாரமே அந்நாட்டிலுள்ளது. மக்கள் அஞ்சியஞ்சி அங்குமிங்கும் ஓடும் ஆரவாரமோ, தம்முள் மாறுபட்டுப் பகைமை உணர்ச்சியுடன் பேசும் பேரொலியோ அங்கில்லைஎன்பதைக் குறிப்பாகப் பெற வைத்தார். மக்கள் அமைதியாகவும் வளமை மிகுந்தும் வாழ்ந்தனர். எங்கும் அமைதி நிலவிற்று என்பதனையும் கவிஞர் பெற வைக்கிறார்.

இவ்வாறு கவிஞர் நயந்தோன்றப் பாடிய செய்யுள் முழுமையையும் படித்துப் பாருங்கள்.

'அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம் தீப்பட்ட தெனவெரீஇப் — புள்ளினந்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை யுடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு.'

ஆங்கிலக் கவிஞரின் அருமையான வருணனையைப் படித்தோம்; அருந்தமிழ்ப் புலவரின் இனிய கவிதையைச் சுவைத்தோம். ஆம்! பூத்துக் குலுங்கும் பொன்னிற மலர்கள் ஆங்கிலக் கவிஞரின் உள்ளத்தை உவகைத் தேனூற்றாய் மாற்றிய காட்சி கண்டோம்; மாற்றவொண்ணா மகிழ்ச்சி கொண்டோம். பொய்கையில் பூத்துச் சிரிக்கும் செந்நிற மலர்கள் செந்தமிழ்க் கவிஞரின் உள்ளத்தைக் கருத்து மணம் கமழும் கலனாய் மாற்றிய மாட்சி கண்டோம்; சிந்தனைத் தேன் விருந்துண்டோம். இயற்கையை வருணிப்பதில் இருபெருங் கவிஞரும் இணையற்றுத் திகழ்கின்றனர் என்பதை அறிய அறிய நம் உள்ளத்தில் பேருவகை தோன்றுகின்றதன்றோ?

அருஞ்சொற்பொருள்

பேரெழில்—மிக்க அழகு, தோற்றம்—காட்சி, கவினுறு—அழகு பொருந்திய, சொல்லோவியம் — சொற்களால் ஓவியம் போல எழுதிக் காட்டுதல், நெடுந்தொலைவு—மிக்க தூரம், பொய்கை—குளம், பொன்மயமான—மஞ்சள் நிறமான, பனிச்சிடு

இன்றது — வெளிப்படையாகத் தெரிகின்றது, ஆரா இன்பம் — மிகுந்த இன்பம், செழுமை — வளப்பம், அனல் — நெருப்பு, புள்ளினம் — பறவைக் கூட்டம், அள்ளல் — சேறு, பழனம் — வயல், அரக்கு ஆம்பல் — செவ்வல்லிமலர், வெரீஇ(வெருவி) — அஞ்சி, பார்ப்பு — பறவைக்குஞ்சுகள், கவ்வை — ஆரவாரம், நச்சிலை வேல் — நஞ்சு பூசப்பட்ட இலை வடிவமான வேல், கோக்கோதை — சேரமன்னன், கலனாய் — இடமாக, இணையற்று — ஒப்பில்லாமல்.

பயிற்சி

I. விடை எழுதுக:

(1) ஆசிரியர் கூறும் சில இயற்கைக் காட்சிகள் யாவை?

(2) அழகுமிக்க காட்சியைக் காணும் மக்கள் அடையும் இன்ப நிலையை விளக்கி எழுதுக.

(3) 'வேர்ட்ஸ் வொர்த்', மஞ்சள்நிறப் பூக்களில் மனத்தைப் பறிகொடுக்கக் காரணம் என்ன?

(4) மஞ்சள் நிற மலர்களுக்குக் கவிஞர் கூறும் உவமையை விளக்குக.

(5) மஞ்சள் நிற மலர்களை நினைக்கும் பொழுதெல்லாம் ஆங்கிலக் கவிஞர் அடைந்த இன்ப நிலையை ஆசிரியர் எங்ஙனம் எடுத்துக் கூறியுள்ளார்?

(6) பொய்கையில் தாய்ப் பறவைகள் தம் குஞ்சுகளை அணைக்கக் காரணம் என்ன?

II. (1) மஞ்சள் நிற மலர்களின் அழகு காட்சிகளை வேர்ட்ஸ் வொர்த் வருணிக்கும் தன்மையைப் பதினைந்து வரிகளுக்கு மேற்படாமல் விளக்கி எழுதுக.

(2) கோக்கோதை நாட்டின் பொய்கைக் காட்சியைப் பதினைந்து வரிகளுக்கு மேற்படாமல் விளக்கி எழுதுக.

III. (அ) பிரித்து எழுதுக:

சிற்றாறு,	அறிவிற்சிறந்த,
கணக்கிலடங்கா,	பூத்திருந்த.

(ஆ) சேர்த்து எழுதுக:

அதனை + படிப்பவர் =	சிந்தனை + இன்றி =
செம்மை + அல்லி =	பூ + காற்று =

(இ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

கண்ணுக்கெட்டிய,	நெடுந்தொலைவு,
எழில்மிகு,	பேரின்பம்.

6. இதுதான் தொலைக்காட்சி நிலையம்

(புலவர் வெ. நல்லதம்பி)

[வள்ளுவன், செல்வி ஆகியோர் தந்தை அன்பரசருடன் தொலைக்காட்சி நிலையத்திற்குள் நுழைகிறார்கள். அங்கு வரவேற்பாளர் அவர்களை வரவேற்கிறார்.]

வரவேற்பாளர்: வணக்கம்! வாருங்கள்! நான் உங்களுக்கு ஏதேனும் உதவி புரிய வேண்டுமா ?

அன்பரசர் : நன்றி! என் பெயர் அன்பரசர். இவர்கள் என் மக்கள். நிலையத்தைச் சுற்றிப் பார்க்க வந்துள்ளோம்.

வரவேற்பாளர்: மகிழ்ச்சி. ஆனால், உங்களுக்கு ஒன்று தெரிவிக்க விரும்புகிறேன். எமது நிலையம் 'ஒரு பாதுகாக்கப் பட்ட இடம்' (Protected Area). முன்னரே எமக்கு எழுதி இயக்குநரின் இசைவு பெற்றால்தான் எவரும் உள்ளே சென்று பார்வையிடலாம். தாங்கள் அவ்வாறு இசைவு பெற்றிருக்கிறீர்களா?

அன்பரசர் : ஓ! இதோ அந்த இசைவுக் கடிதம்.

வரவேற்பாளர்: (கடிதத்தைப் படித்துவிட்டு) மிகவும் நல்லதாயிற்று. குழந்தைகளே, நீங்கள் உங்கள் வீட்டில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டியில் படங்களைக் கண்டு மகிழ்கிறீர்கள். அந்தப் படங்கள் எவ்வாறு ஒளிபரப்பு ஆகின்றன என்று இங்கே பார்க்கலாம். உள்ளே வருகிறீர்களா ?

செல்வி : என் தம்பி வள்ளுவன் பல நாளாகக் காணும் கனவு இது! நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம்.

வள்ளுவன் : (தமக்கையைப் பார்த்து) நீ மட்டும் என்னவாம்! என்னைச் சாக்கிட்டு இன்று இங்கு வந்திருக்கிறாய்! (வரவேற்பாளரைப் பார்த்து) எங்களை இப்போது உள்ளே அழைத்துச் செல்கிறீர்களா, ஐயா ?

வரவேற்பாளர்: ஓ! அதற்கென்ன! இப்போதே உங்களையும் அப்பாவையும் அழைத்துச் செல்கிறேன்! வாருங்கள்! (அனைவரும் அரங்கிற்குள் செல்கின்றனர்.

வள்ளுவன் : ஓ! அறை முழுவதும் குளிர்காற்று வீசுகிறதே! தலைக்குமேல் இரும்பு மரக்கால்கள்போல் சில கருவிகள் தொங்குகின்றனவே!

அன்பரசர் : (விளையாட்டாக) இரும்பு மரக்காலாவது— பட்டணம் படியாவது — அவை இரண்டும் போய் இப்போது 'லிட்டர்' அளவு வந்துவிட்டதே!

வரவேற்பாளர்: தம்பி! இரும்புத் தண்டவ்ாளங்களில் தொங்கும் அவை அனைத்தும் ஒளிதரும் விளக்குகள்; நூறு 'வாட்', ஆயிரம் 'வாட்' ஒளியைப் பரப்புகின்றன. அதனால் உண்டாகும் வெப்பத்தினால் அறையில் உள்ள கருவிகள் விரைவில் பழுதுபட்டு விடாமல் இருக்க,இங்குக் குளிர்காற்றுவீச ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

அன்பரசர் : அரங்கில் நின்று நடிக்கவும், நிகழ்ச்சிகளில் பங்கு பெறவும் வரும் கலைஞர்களுக்கும் அக்காற்று இதமாக இருக்கும் அன்றோ?

வரவேற்பாளர்: ஆம்! வெப்பத்தால் அவர்களுக்கு வியர்த்துக் கொட்டாமல் இருக்கக் குளிர்காற்று உதவுகிறது.

செல்வி : அது சரி! அதோ உயரமான முக்காலி ஒன்றின் மீது உள்ள கருவியை ஒருவர் முன்னும் பின்னும் தள்ளி இயக்குகிறாரே? அதைப்பற்றி நாங்கள் அறியலாமா?

வரவேற்பாளர்: அதுதான் 'காமிரா' என்னும் படம் எடுக்கும் கருவி. அந்த 'எலக்ட்ரானிக்' கருவியில் ஏனைய 'காமிரா'க்களில் உள்ளது போல் படச்சுருள் இல்லை. அதன்மூலம் ஒளி அலைகள், மின் அலைகளாக மாறிக் கம்பிவழியாக ஒளிபரப்புக் கோபுரத்திற்குச் செல்கின்றன. அதுபோலவே அதோ பாருங்கள் — 'மைக்கு'கள் என்னும் ஒளி வாங்கிகள் மூலம் ஒருவரது பேச்சு, இசை ஆகியவை மின் அலையாக மாறி ஒளிபரப்புக் கோபுரத் திற்குச் செல்கின்றன.

வள்ளுவன் : அங்கிருந்து வீடுகளுக்கு எப்படி அந்த ஒளியும் ஒலியும் வந்து சேருகின்றன?

வரவேற்பாளர்: ஒளிக் கோபுரத்தில் உள்ள கருவி அவற்றை மின்காந்த அலைகளாக மாற்றிக் காற்றில் கலக்கின்றது. வீடுகளில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டிகள், காற்றில் வரும் அந்த மின்காந்த அலைகளை மீண்டும் மின் அலைகளாக மாற்றி ஒளியாகவும் ஒலியாகவும் நமக்குத் தருகின்றன.

செல்வி : தொலைக்காட்சி நெடுந்தொலைவில் உள்ளவர்களுக்குத் தெரியாது என்கிறார்களே! அதற்குக் காரணம் யாது ?

அன்பரசர் : ஒளி அலைகள் நேர்கோட்டில்தான் பயணம் செய்யும் என்று படித்திருப்பாயே, அதை மறந்து விட்டாயா?

செல்வி : ஆம் அப்பா! பூமி வட்ட வடிவில் உள்ளது என்றும் படித்திருக்கிறேன்.

வரவேற்பாளர்: ஆகவே, தொலைக்காட்சிக் கோபுரத்தின் நுனியை எங்கெல்லாம் நின்று பார்க்க முடியுமோ, அங்கெல்லாம் நிகழ்ச்சிகள் தெரியும். இடையே உயர்ந்த மலைகள் போன்றவை குறுக்கிட்டால் காட்சி தெரியாது.

அன்பரசர் : நம் வீட்டிலேயே சுவருக்கு அப்பால் உள்ளவர்களையோ பொருள்களையோ பார்க்க முடியாது அன்றோ ? அதற்குக் காரணம் ஒளி அலையைச் சுவர் தடுப்பதேயாகும். ஒலி சுற்றி வளைந்துவரும் தன்மை உடையது. ஆகவேதான் அடுத்த அறையில் உள்ளவர்கள் பேசுவதுமட்டும் கேட்கும்.

வள்ளுவன் : நிலையத்தின் பிற பகுதிகளைச் சுற்றிப்பார்க்கலாமா ?

வரவேற்பாளர்: ஓ! வாருங்கள்! அரங்கை ஒட்டியவாறு மேல் தளத்தில் தயாரிப்புக் கட்டுப்பாட்டு அறை உள்ளது. அங்கு அமர்ந்துதான் தயாரிப்பாளர் நிகழ்ச்சியை நடத்துகிறார். அந்த அறைக்குப் பின்புறம் ஒலிக் கட்டுப்பாட்டு அறையும், முன்புறம் ஒளிக் கட்டுப்பாட்டு அறையும் உள்ளன.

அன்பரசர் : நிகழ்ச்சிகள் நேரடியாக நடைபெறுவதோடு முன்னரே ஒளிப்பதிவு செய்தும் ஒளிபரப்புவதும் உண்டு அன்றோ ?

வரவேற்பாளர்: ஆம்! மேல்தளத்தில் ஒளி நாடாப் பதிவு அறை உள்ளது. அங்குள்ள கருவிமூலம் ஒரே நாடாவில் ஒளியையும் ஒலியையும் ஒரே சமயத்தில் பதிவு செய்ய முடியும்.

வள்ளுவன் : சில வேளைகளில் திரைப்படங்கள் காட்டு கிறீர்களே, எப்படி ?

வரவேற்பாளர்: அருகில் ஓர் அறை உள்ளது! அது 'டெலிசினி' என்னும் தொலைப்பட அறை ஆகும். அங்கு 16 மில்லி மீட்டர், 35 மில்லி மீட்டர் அகலமுள்ள திரைப்படங்களை ஓட்டித் தொலைக்காட்சியில் காட்டலாம்.

செல்வி : தொலைக்காட்சியை வண்ணத்தில் காணமுடியுமா?

அன்பரசர் ; ஏன் முடியாது ? மேல்நாடுகளில் காட்டுகிறார்கள். நம்நாட்டுத் தலைநகரிலிருந்தும் வண்ணப்படங்கள் காட்டி வருகிறார்கள். பிற இடங்களிலும் விரைவில் வண்ணத் தொலைக்காட்சி வரப் போகிறது.

வள்ளுவன் : சிறுவர்களான எங்களுக்குத் தொலைக்காட்சி மிகவும் பிடிக்கிறது.

வரவேற்பாளர்: உங்களுக்கு நிகழ்ச்சிகள் கொடுப்பதால் உங்களுக்குப் பிடிக்கிறது. உங்களுக்காகத் தனித் திரைப் படங்கள், 'கார்ட்டூன்கள்' எனப்படும் கேலிச் சித்திரங்கள் முதலியன தொலைக்காட்சியில் உண்டு. அதுபோலவே உழவர்களுக்கும் உழைப் பவர்களுக்கும் இளைஞர்களுக்கும் பெண்மணி களுக்கும் நிகழ்ச்சிகள் உள்ளன. அறிவியல் நிகழ்ச்சிகள், கல்வி நிகழ்ச்சிகள், விளையாட்டு நிகழ்ச்சிகள் ஆகியனவும் உண்டு.

அன்பரசர் : அவை அனைத்தும் நமக்கு அறிவூட்டும் சுவையான நிகழ்ச்சிகள் ஆகும்.

வரவேற்பாளர்: செய்தி மிகவும் முக்கியமான நிகழ்ச்சி. அதை எல்லாரும் தவறாமல் பார்த்தால் உலக அறிவு நிரம்ப ஏற்படும். பொழுதுபோக்கிற்கு நாடகங் களைப் பார்க்கலாம்.

அன்பரசர் ; இந்தியாவில் தொலைக்காட்சியைத் தேசிய ஒருமைப்பாடு, கல்வி, வேளாண்மை, குடும்ப நலம் ஆகியவற்றை வளர்க்க நமது அரசு கொண்டு வந்துள்ளது அன்றோ?

வரவேற்பாளர்: ஆமாம்! அந்த நோக்கங்களை மேலும் வளர்ப் பதற்காக எதிர்காலத்தில்கூடத் தகவல் செயற்கைக் கோளைப் பயன்படுத்தித் தொலைக் காட்சி செயல்படப் போகிறது. தொலைக் காட்சி மனிதகுலத்துக்குக் கிடைத்துள்ள பயனுள்ள ஒரு கருவி. அதை வைத்து உலகத்தையே ஒன்று படுத்த முடியும். அன்பும் அமைதியும் உலகில் தழைக்கத் தொலைக்காட்சி நிறையத் தொண்டு செய்ய முடியும்.

வள்ளுவன் : சில வேளைகளில் வெளிப்புறம் நடக்கும் காட்சிகளைக் காட்டுகிறீர்களே; எப்படி?

வரவேற்பாளர்: நடமாடும் ஒளிபரப்பு ஊர்தி ஒன்று உள்ளது. அதை வெளியே எடுத்துச் சென்று படம் பிடித்து அஞ்சல் செய்து காட்டுகிறோம்.

அன்பரசர் : அஞ்சல் என்பது வெளியே ஒரு நிகழ்ச்சி குறிப் பிட்டதோர் இடத்தில் நடைபெற்றுக் கொண்டு இருக்கும்போதே, அதை நிலையத்திற்கு அனுப்பி ஒளிபரப்புச் செய்வது ஆகும். இதை 'நேரடி அஞ்சல்' என்றும் சொல்வார்கள்.

வரவேற்பாளர்: சில வேளைகளில் திரைப்படத் துறையில் இருப்பதுபோல், காட்சிகளைப் படம் எடுத்து வருவது உண்டு. அப்படங்களைப் 'பிராசசிங்' என்னும் ரசாயனக் கழுவல்செய்து தேவையில்லாப் பகுதிகளை வெட்டியபின் எஞ்சியதை ஒட்டிச் சேர்த்துக் காட்டுவதும் உண்டு.

அன்பரசர்: ஐயா, தொலைக்காட்சி நிலையத்தைப்பற்றி நீங்கள் இந்த அளவுக்கு எங்களுக்கு எடுத்து விளக் கியதற்கு நன்றி! குழந்தைகளே, புறப்படலாமா

செல்வி, வள்ளுவன்: (வரவேற்பாளரிடம்) பொறுமையாகஎடுத்துச் சொன்ன உங்களுக்கு நன்றி ! புறப்படுகிறோம்.

வரவேற்பாளர்: மகிழ்ச்சி! சென்று வாருங்கள்.

அருஞ்சொற்பொருள்

இசைவு — ஒப்புதல், இதமாக — இன்பமாக, அரங்கு — நிகழ்ச்சிக் கூடம், மேல்நாடு—மேற்கு நாடு, வேளாண்மை—உழவு.

பயிற்சி

I. விடை எழுதுக :

(1) தொலைக்காட்சி அரங்கில் குளிர்காற்று வீசச் செய்வது ஏன் ?

(2) தொலைக்காட்சியில் படம் எடுக்கும் கருவி எவ்வாறு அமைந்துள்ளது ?

(3) தொலைக்காட்சிப் படங்கள் நெடுந் தொலைவில் உள்ளவர்களுக்குத் தெரியாது. — ஏன் ?

(4) தொலைக்காட்சியின் பயன்கள் யாவை ?

II. தொலைக்காட்சி எவ்வாறு இயங்குகிறது என்பதைப் பதினைந்து வரிகளுக்கு மிகாமல் தொகுத்து எழுதுக.

III. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

இசைவு, முன்னும் பின்னும், தலைநகர்,
பழுதுபட்டு, குறுக்கிட்டால், அண்மையில்.

7. விளையாட்டுக் கலை

(திரு. ல. சண்முகசுந்தரம்)

ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் திருமூலர். அவர் ஒரு ஞானவிளக்கு. அம்மாமுனிவர், "மனிதன் அடையவேண்டிய இலட்சியம் என்ன என்பதை நான் உடல் தத்துவத்தின் வாயிலாக அறிந்துகொண்டேன்," என்கிறார்.

"உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்; அதனால் என் உடம்பை நன்முறையில் காக்கத் துணிந்துவிட்டேன். என் உடல் நலம் பெற்றால்தான் உள்ளம் நலம்பெறும்; உள்ளம் நலமடைந் தால்தான் உயிர் நிலைபெறும்; வாழ்க்கை அமைதியடையும்.

"உடம்பை வளர்த்தேன்; உயிர்வளர்த் தேனே," என்றும் கூறியுள்ளார்.

சித்தர் ஒருவர்,

> 'பூட்டைத் திறப்பதும் கையாலே — மன
> வீட்டைத் திறப்பதும் மெய்யாலே,'

எனக் கூறுகிறார். மெய்யால் என்பதற்கு உடல் நலத்தால் என்பது பொருள். நலம்பெற்ற உடம்பின் வாயிலாகவே மனம் என்னும் வீட்டைத திறந்து, அதனுள் இருக்கும் அறியாமையாகிய இருளை விரட்டி, ஞான ஒளியைப் பரப்ப முடியும்என்பது சித்தரின் துணிபு.

நம் முன்னோர்கள் யோக சாதனங்களாலும், பொருந்திய உணவைத் திருந்த உண்ணும் பழக்கவழக்கங்களாலும், விரதம், நோன்பு முதலிய கட்டுப்பாடுகளாலும் உடல்நலத்தைக் கண்ணும் கருத்துமாக ஓம்பினார்கள். உழைப்பும் விளையாட்டும் உடல் நலத்தின் இரு கண்கள் என அவர்கள் நம்பினார்கள். வசதிகள் பல படைத்தவர்கள்கூட உழைப்பிலும் விளையாட்டிலும் ஆர்வம் மிக்கவர்களாகவே இருந்தார்கள்.

ஒருவர் நாள் முழுவதும் உழைத்துக்கொண்டிருக்க இயலாது. அதனால் அவருக்குப் பொழுதுபோக்குத் தேவைப்படுகிறது. ஒவ்வொருவரும் தம் வேலையைவிடப் பொழுதுபோக்கையே பெரிதும் விரும்புவர். பொழுதுபோக்கு உழைப்பால் உண்டான களைப்பைப் போக்கும்; உள்ளக் கிளர்ச்சியை அளிக்கும்; உடலை

வலிவுபடுத்தும். பொழுதுபோக்கும் வழிகளில் விளையாட்டும் ஒன்று விளையாட்டு உடலை வலுப்படுத்துவதுடன், தடைபடாக் குருதி யோட்டத்தையும் சுறுசுறுப்பையும் பிறரிடம் அன்பு பாராட்டும் பண்பையும் வளர்க்கும்.

நம் முன்னோர் விளையாட்டை ஒரு கலையாக மதித்து அதனைச் சிறப்பாகப் பேணி வந்துள்ளார்கள். விளையாட்டின் வாயிலாக நாட்டியக் கலையையும் போர்க் கலையையும் மெரு கூட்டி வளர்த்துள்ளார்கள். கல்வியில் தெளிவும் உறுதியும் ஏற்படப் பழங்காலத்திலிருந்தே கல்வியுடன் விளையாட்டையும் இணைத்துள்ளார்கள்.

குருகுலக் கல்வி பயின்ற ஒவ்வொரு மாணவனும் தான் கற்ற கலைகளோடு வில்வித்தை, வாள்வித்தை, யானை ஏற்றம், குதிரை ஏற்றம் முதலிய துறைகளில் ஒன்றைக் கட்டாயமாகக் கற்று உடற்பயிற்சியைக் கடைப்பிடித்து வந்தான். ஓடுதல், தாண்டுதல் குறி பார்த்து எறிதல், நீந்துதல், பாரம் தூக்குதல் முதலிய பல துறைகளிலும் பயிற்சி பெற்று உடல்நலத்தைப் போற்றினான்.

கிரேக்கப் பேரறிஞர் பிளேட்டோ அவர்கள், "கல்விநிலையம் ஒவ்வொன்றும் மாணவர்களின் மனவளர்ச்சிக்கு எவ்வளவு கலைப் பயிற்சி அளிக்கிறதோ, அவ்வளவிற்கு விளையாட்டுப் பயிற்சியும் அளிக்க வேண்டும்," எனக் கூறியுள்ளார். "ஒவ்வொருவரின் இதய வளமும் உடல் வளமும் சீராக வளர்ந்தால்தான் சமுதாயம் அமைதியாகவும் நிலையாகவும் வாழமுடியும். இன்றேல் மனக் கவலையும் குழப்பமும் தோல்வியுந்தாம் உண்டாகும்," என்றும் அவர் கூறியுள்ளார்.

பழங்காலத்தில் தமிழகத்தில் சிற்றூர்தோறும் இளவட்டக்கல் என்று ஓர் இரும்புக் குண்டோ, கருங்கல் உருண்டையோ இருந்தது. ஒவ்வொரு நாளும் இளைஞர்கள் அதனிடம் வந்து சிறிது சிறிதாக உறவாடுவார்கள்; அவர்கள் அதனைத் தூக்கித் தூக்கிப் பழகு வார்கள். பழகப்பழக அந்தக் குண்டு அவர்களுக்குக் குழைந்து வசியமாகிவிடும். நாளடைவில் அவர்கள் அதனைச் செந்தூக் காகத் தூக்கிப் பின்புறமாக எறியும் பேராற்றலைப் பெறுவார் கள். இந்தப் பளுதூக்கும் கலையில் (Weight lifting) இந்தக் காலத்திலும் இளைஞர் பலர் பயிற்சிபெறுவது பாராட்டத்தக்கது.

முற்காலத்தில் சிற்றூர்களில் இளைஞர்கள் பலர் சடுகுடு, கிளையந்தட்டு, வரகன்தட்டு, சிலம்பம், மற்போர் முதலிய விளை யாட்டுகளிலும் ஒழுங்காக ஈடுபட்டுவந்தார்கள்.

சடுகுடு ஆட்டம் பற்றி,

'சடுகுடு மலையிலே ரெண்டானை;
தவறி விழுந்தது கிழட்டானை'

என்னும் நாட்டுப் பாடல் ஒன்றும் உண்டு.

மற்போரில் வல்லவரின் தோள்கள் உருண்டு திரண்டு பார்க்கப் பார்க்க அழகாக இருக்கும். இலக்குவனின் தோள் வனப்பைக் கம்பர்,

'மல்லினால் செய்த தோளினன்' என்று கூறியிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. கும்பகருணனின் தோளின் தோற்றத்தை அவர்,

'தோளொடு தோள்செலத் தொடர்ந்து நோக்குறின்
நாள்பல கழியுமால்,'

என வியந்து பாடியுள்ளார். அவ்வளவும் மற்போர் என்னும் விளையாட்டுக் கலையால் கிடைத்த பயனாகும்.

'ஏறு தழுவல்' என்பது பண்டைத் தமிழரின் வீர விளையாட்டு. நல்ல வளர்ச்சியடைந்த முரட்டுக் காளைகளை வெட்ட வெளியில் விரட்டிவிடுவார்கள். கூரிய கொம்புகளையுடைய அந்தக் காளைகளை வீர இளைஞர்கள் மடக்கிப் பிடித்து அடக்கிவிடுவார்கள். காளையைத் தழுவி அடக்குவதால் இதற்கு 'ஏறு தழுவல்' என்று பெயர். சில சமயங்களில் தம்மைத் தழுவ வருபவரைக் காளைகள் முட்டிக் குடலைக் கிழிப்பதும் உண்டு. அதனால், இந்த விளையாட்டைக் 'கொல்லேறு தழுவல்' என்றும் கூறுவர். சில சிற்றூர்களில் பொங்கல் விழாவின் போது இன்றும் இவ்விளையாட்டு நடைபெறுவதைக் காணலாம்.

ஆடவரே யன்றிப் பெண்மணிகளும் பழங்காலத்தில் விளையாட்டில் ஈடுபட்டனர். சிற்றில் அமைத்தல், சிறுசோறு சமைத்தல், பொம்மைக் கலியாணம், கழங்காடல், பந்தாடல், ஊஞ்சலாடல், அலவன் ஆட்டல் முதலிய விளையாட்டுகளில் சிறுமியர் பொழுதுபோக்கினர். அம்மானை, கும்மி, கோலாட்டம் முதலியவை பெண்களின் விளையாட்டுகள். நீராட்டு, தாலாட்டு, ஊஞ்சலாட்டு என்னும் துறைகளை வைத்துப் 'பிள்ளைத்தமிழ்' என்னும் சிற்றிலக்கியத்தை நம் முன்னோர் படைத்துள்ளனர்.

பெண்களின் பந்து விளையாட்டைப்பற்றியும் விளையாடும் பெண்களின் உணர்ச்சி, செயல், சொல் ஆகியவைபற்றியும்

வருணித்துப் பாடும் பாடலுக்குக் 'கந்து கவரி' என்று பெயர். இவ்விளையாட்டைப்பற்றிய சிலப்பதிகார வருணனைப் பாடல்கள் படித்துப் படித்து இன்புறத்தக்கவை.

பெண்கள் பந்தை வீசியும் எறிந்தும் விளையாடுகிறார்கள். எதிர்வரிசையில் உள்ள பெண்கள் அப்பந்தைக் கீழே விழாதவாறு பிடித்து வீசி எறிகிறார்கள். இப்படியே இரு திறத்தாரும் பந்து தரையில் விழாதவாறு பிடித்து எறிந்து விளையாடுகிறார்கள். அப்படியானால் பெண்கள் சுற்றிச் சுழன்று ஆடவேண்டியது தானே! முன்னே பாய்ந்தும் பின்னே சென்றும் வலப்புறமும் இடப்புறமும் ஓடி ஆடும் பெண்களின் தோற்றம் வானில் பளிச்சிடும் மின்னல் கொடிகள் ஒன்று கூடி நிலத்தில் வளைந்து நெளிந்து ஆடுவதுபோல இருக்கிறது. 'சரேல் சரேல்' என்று பந்து வானத்தில் பாய்ந்து போவதும் கீழே வருவதுந்தான் தெரிகிறது. பெண்களின் கையில் அப்பந்து அகப்பட்டதாகத் தெரியவில்லை; தரையில் விழுவதும் தெரியவில்லை; விழுந்த அப்பந்து மேலே எழுவதும் தெரியவில்லை. எல்லாம் மின்னல் வேகத்தில் நடைபெறுகின்றன. இந்தக் காட்சியை இளங்கோவடிகள் எவ்வளவு அழகாகச் சித்திரிக்கிறார், பாருங்கள்!

'பின்னும் முன்னும் எங்கணும்
    பெயர்ந்து வந்(து)எ ழுந்துலாய்
மின்னும் மின்இ ளங்கொடி
    வியன்நி லத்(து)இ ழிந்தெனத்
தென்னன்வாழ்க வாழ்க என்று
    சென்று பந்த டித்துமே;
தேவர்ஆர மார்பன் வாழ்க
    என்று பந்த டித்துமே.

துன்னி வந்து கைத்தலத்(து)
    இருந்த தில்லை; நீள்நிலம்
தன்னில் நின்றும் அந்தரத்(து)
    எழுந்த தில்லை தான்எனத்
தென்னன்வாழ்க வாழ்க என்று
    சென்று பந்த டித்துமே;
தேவர்ஆர மார்பன் வாழ்க
    என்று பந்த டித்துமே'

பெண்களின் பந்தாட்டம் வியப்பினை ஊட்டுகிறது. அந்த விடப் பாடல்கள் பெருவியப்பினை ஊட்டுகின்றன. விளையாட்டும்

நாமும் குதித்து விடுவோமோ என்றுகூடத் தோன்றுகிறது. ஆட்டத்தில் உள்ள விரைவும் பொலிவும் துள்ளலும் பாய்ச்சலும் பாடப்பாட நேருக்கு நேராகத் தெரியவரும்.

இங்ஙனம் பழங்காலத்திலிருந்தே பல வகை விளையாட்டு களிலும் ஈடுபட்டு இன்பம் பெற்ற நம் முன்னோர்களைப் போலவே நீங்களும் விளையாட்டுக் கலையைப் போற்றி நாடு போற்றும் நன்மணிகளாக, வீடு போற்றும் கண்மணிகளாக விளங்குவீர்களாக'!

அருஞ்சொற்பொருள்

உறுபொருள் — சிறந்த பொருள், யோக சாதனம்—மூச்சைக் கட்டுப்படுத்தும் பயிற்சி, ஓம்பினார்கள்—காப்பாற்றினார்கள், குருதியோட்டம்—இரத்த ஓட்டம், பேணி—காப்பாற்றி, இதய வளம்—மன வளம், செந்தூக்காக—தலையுச்சி மேலாக, மல்—மற்போர், ஏறு—காளை, கழங்கு ஆடல்—கழற்சிக் காயை வைத்து ஆடும் ஒரு வகை விளையாட்டு, அலவன்—நண்டு, எங்கணும் — எல்லாப் பக்கங்களிலும், உலாய்—உலவி, இழிந்து என—இறங்கி வந்ததுபோல, வியன்—பரந்த, தென்னன்—பாண்டியன், ஆரமார்பன் – மாலையை அணிந்த மார்பை உடையவன், துன்னி—நெருங்கி, நீள் நிலம்—பெரிய பூமி.

பயிற்சி

I. விடை எழுதுக:

(1) உடல் நலத்தின் இன்றியமையாமைபற்றித் திருமூலர் கூறுவது யாது ?

(2) விளையாட்டினால் விளையும் பயன்கள் யாவை?

(3) குருகுலக் கல்வி பயின்ற மாணவர்கள் பங்கு கொண்ட விளையாட்டுகள் யாவை ?

(4) விளையாட்டுப் பயிற்சிபற்றிப் பேரறிஞர் பிளேட்டோ கூறுவது யாது ?

(5) பளுத்தூக்கும் கலையில் பழந்தமிழ் இளைஞர்கள் எவ்வாறு சிறந்து விளங்கினார்கள் ?

(6) ஏறு தழுவல் விளையாட்டு எவ்வாறு நடைபெறும் ?

(7) சிறுமியர் மேற்கொள்ளும் விளையாட்டுகள் யாவை ?

(8) பெண்களுக்குரிய விளையாட்டுகள் யாவை ?

II. பெண்களின் பந்தாட்டம்பற்றிச் சிலப்பதிகாரம் கூறும் வருணனையைப் பதினைந்து வரிகளுக்கு மிகாமல் எழுதுக.

III. (அ) பிரித்து எழுதுக:

அமைதியடையும், உடற்பயிற்சி,
மெருகூட்டி, மற்போர்.

(ஆ) சேர்த்து எழுதுக:

வட்டம்+கல், பழமை+காலம்,
மடக்கி+பிடித்து, சிறுமை+இல்.

(இ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

பொழுதுபோக்கு, சரேல்சரேல் என்று,
நாளடைவில், தோளொடு தோள்.

8. மஞ்சள் மாளிகை

(திரு. மனசை ப. கீரன்)

இயற்கை அழகு கொஞ்சும் பூங்குளத்திலே அந்த ஒரு 'பங்களா' தான் இருந்தது. மற்ற வீடுகள் யாவும் சின்னச் சின்ன குடிசைகளாகவும் ஓட்டு வீடுகளாகவும் இருந்தன. மஞ்சள்வண்ணம் தீட்டப்பட்டுப் பளிச்சென்று தலை நிமிர்ந்து இருந்ததால் அனை வரும் அதனை 'மஞ்சள் மாளிகை' என்றே அழைத்தனர். மஞ்சள் மாளிகையில் வாழ்ந்தவர்கள் மற்றவர்களால் மேட்டுக் குடியினர் என்று அழைக்கப்பட்டார்கள்.

மாளிகையைச் சுற்றிலும் பரந்த வெற்று நிலம்; அங்கே கண்ணைக் கவரும் வண்ண மலர்கள் அசைந்தாடும் பெரிய தோட்டம். அங்கொன்றும் இங்கொன்றுமாக வாழை, மா, கொய்யா முதலிய மரங்கள் இருந்தன. மாளிகையின் தோட்ட வனப்பைக் காணின் முனியனுடைய உழைப்பின் பெருமையை உணரலாம்.

முனியன் அந்தத் தோட்டத்தின் பின்பக்கமாக இருந்த குடிசையில் வாழ்ந்துவந்தான். அஃது இருக்கட்டும்; முதலில் மாளிகைக்கு உள்ளே போகலாம். அப்புறமாக, முனியனின் குடும்பத்தைப் பார்க்கலாம்.

மஞ்சள் மாளிகை செல்வநாயகத்துக்குச் சொந்தமானது. செல்வநாயகத்துக்கும் செண்பகவல்லி அம்மையாருக்கும் ஒரு குலத்துக்கு ஒரு மைந்தனாகப் பிறந்தவன் கண்ணன். ஆகையால், கண்ணனை அவர்கள் எவ்வளவு செல்லமாக வளர்த்திருப்பார்கள் என்பதை நீங்களே எண்ணிப்பாருங்கள். கண்ணன் எதை விரும் பினாலும் கண்ணைமூடித் திறப்பதற்குள் அந்தப் பொருள் அவன் முன்னே வந்து நிற்கும். கோலி வேண்டுமென்று சொல்லி வாயை மூடுவதற்குள்ளாகக் 'கிரிக்கெட்' பந்தையே வாங்கிக் கொடுத்து விடுவார்கள். 'வேடந்தாங்கல், மாமல்லபுரம் முதலிய இடங்களுக் குப் பள்ளியில் இன்பச் சுற்றுலா செல்கிறார்கள்' என்று சொல்லித் தன் ஆசையைத் தெரிவிப்பதற்குள் மதுரை, திருச்செந்தூர், பழனி முதலிய எல்லா இடங்களையும் தனி உந்துவண்டியில் அழைத்துச் சென்று காட்டிவிட்டு வந்துவிடுவார்கள். கண்ணன் அந்த ஊர்ப் பள்ளியிலேயே படித்துவந்தான்.

தோட்டக்கார முனியனுக்கோ நான்கு பிள்ளைகள். அவர் களில் இரண்டாமவன் முருகன். கண்ணனும் முருகனும் ஒரே வகுப்பில் படித்தார்கள். வறியவன் வீட்டுப் பிள்ளையாக இருந் தாலும் முருகன் படிப்பில் மிகவும் அக்கறையும் ஆர்வமும் கொண்டிருந்தான்.

கண்ணன் செல்ல மைந்தனானமையால் படிப்பில் கவனம் செலுத்துவதில்லை. படித்தாலே தலை வலிக்கிறது என்று உட்கார்ந்துவிடுவான். அத்துடன் சரி; படிப்பு அன்றைக்கு அவ்வளவுதான். சிறிது நேரத்தில் விளையாடப் போய்விடுவான்.

கண்ணனின் நிலையை அறிந்த முருகன் அவனோடு பழகிப் படிப்பில் ஆர்வத்தை ஊட்டும் முயற்சியில் ஈடுபட்டான். கண்ணனுக்குப் படிப்பில் ஐயம் நேரும் பாடங்களை விளக்கிச் சொல்லித் தருவான்; ஆசிரியர் தரும் வீட்டு வேலைகளை ஒழுங் காகச் செய்வதற்கு உதவியாக இருப்பான். தன்னுடன் அன்பாகப் பழகும் முருகன் அறிவுரையைக் கேட்ட கண்ணன் படிப்பில் அக்கறை காட்டலானான். காலை நேரத்தில் முருகன் கண்ண னுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க முடிவு செய்தான். இவ்வாறு சில நாள்கள் கழிந்தன.

ஒருநாள் அவர்கள் இருவரும் சேர்ந்து படிப்பதைக் கண்ணனின் தாய் பார்த்துவிட்டாள். வந்தது கோபம்.

"அடே முருகா! இங்கே என்னடா உனக்கு வேலை உங்கள் குடிசைக்கு ஓடிப்போடா!" என்று வைது விரட்டிவிட்டாள்.

முருகன் போனதும் கண்ணனின் தாய் அவனைப் பார்த்து, "கண்ணா, நீ முருகனை நம் வீட்டுக்கு அழைத்து வரக்கூடாது; பழகக்கூடாது. உனக்கு வேண்டுமானால் பள்ளி ஆசிரியர் ஒருவரை நம் வீட்டுக்கே அழைத்துத் தனிப்பாடம் (Tution) சொல்ல ஏற்பாடு செய்கிறேன்," என்று கூறிக் கண்டித்தாள்.

தாயின் கடுமொழிகளைக் கேட்ட கண்ணன் உள்ளம் உருகியது; கண்ணீர் பெருகியது. அவன் தழுதழுத்த குரலில் "அம்மா! நான் முருகனுடன் பழகக்கூடாதா? அவனைத் தொடக் கூடாதா? அவன் என்ன தேளா பாம்பா? அவன் தந்தையார் நட்டு வளர்க்கும் செடி கொடிகளையெல்லாம் தொட்டு மகிழும் நாம் அவர்களைத் தொடக் கூடாதா? அவர்கள் பாடுபடும் தோட்டத்தில் மலர்ந்த வண்ண மலர்களைப் பறித்து இறைவனை வழிபடும் நாம் அவர்களைத் தீண்டுவது தவறா? என்ன அம்மா

இது!" என உருக்கமாகக் கேட்டான். "போதும் வாயை மூடு! அவர்களைப் போன்றவர்களைத் தீண்டுவது பாவம் என்று உன் தந்தையார் அடிக்கடி கூறுவார். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். இனி, நீ முருகனுடன் பேசக்கூடாது; பழகக்கூடாது," என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள்.

அன்றுமுதல் முருகன் கண்ணன் வீட்டுக்கு வருவதில்லை. அவர்கள் வீட்டிலே சந்திப்பதில்லையே தவிரப் பள்ளிக்கூடத்தில் நெருங்கிப் பழகினார்கள். வீட்டிற்கு வந்தால் கண்ணன், 'அவன் யாரோ, தான் யாரோ' என்று உள்ளே ஓடிவிடுவான்.

ஒருநாள் கண்ணனின் பெற்றோர் விடியற்காலையிலே கண் விழித்து, நீராடிக் கோயிலுக்குச் செல்ல விரும்பினர்; செல்வதற்கு முன் கண்ணனை வீட்டிலேயே இருந்து பாடம் படிக்கச் சொல்லிப் புறப்பட்டனர்.

பெற்றோர் வெளியே சென்றதும் கண்ணனின் நினைவு வீட்டுப் பரண்மீது இருந்த இனிப்புச் சாடியின்மீது சென்றது. அதனால், அவன் ஏணியைச் சிரமப்பட்டுத் தூக்கி வந்து போட்டுப் பரண்மீது ஏறினான். ஏறியதும் அவசரத்தில் ஏணி கீழே சாய்ந்து விட்டது. கண்ணன் வெலவெலத்துப் போனான். அவன் சாடியின் பக்கத்திலேதான் இருந்தான். எனினும், அதில் இருக்கும் இனிப்பைப்பற்றி அவனுக்கு நினைவே தோன்றவில்லை. பரண்மீது எலியும் மூஞ்சூறும் பல்லியும் கரப்பானும் ஓடின. ஏணி விழுந்த ஒலியைக் கேட்டுப் பரண்மீதிருந்த பூனை வேறு விழுந்தடித்துப் பாய்ந்தது. கண்ணன் மனம் திகைத்து, குய்யோ முறையோ என்று அலறினான். அது கேட்டுக் குடிசையில் படித்துக் கொண்டிருந்த முருகன் ஓடோடி வந்தான்.

"அஞ்சாதே! அஞ்சாதே! கண்ணா, நான் இருக்கிறேன்" என்று ஏணியைத் தூக்கி நிறுத்தினான். கண்ணா, பத்திரமாக இறங்கிவா. நான் ஏணியைப் பிடித்துக்கொள்கிறேன். அம்மாவுக்குத் தெரியாமல் இப்படிச் செய்யலாமா?" என்று கேட்டான். கண்ணன் கீழே இறங்கினான். அவன் பெற்றோர்கள் அதேசமயத்தில் கோயில் வழிபாடு முடித்துத் திரும்பினார்கள்.

பெற்றோரைக் கண்டதும் கண்ணனுக்கு அழுகை வந்து விட்டது. நடந்ததை நடந்தபடியே கூறினான். தங்கள் செல்லப் பிள்ளைக்கு நல்லுதவி புரிந்த முருகனின் பெருந்தன்மையை அவர்கள் எண்ணி எண்ணி வியந்தார்கள். கண்ணனின் பெற்றோர்க்குப்

புத்தி வந்தது. அவன் தந்தையார், பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை என்பதை உணர்ந்தார்; முருகனை நோக்கி, "தீண்டத்தகாதவர் என்பது வீண் கற்பனையே! எல்லாரும் ஒரு குலமே. நன்மை செய்பவரே உயர்குலத்தவர்; தீமைசெய்பவரே தாழ்ந்த குலத்தவர். முருகா! நீ இனி எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவனே! நீ எங்கள் வீட்டிலேயே எங்கள் பிள்ளைக்குப் பிள்ளையாகக் கண்ணனோடு தங்கிப் படிக்கலாம். நீயும் கண்ணனும் ஒன்றாக உண்டு, உடுத்துப் பள்ளிக்குச் சென்று வரலாம். நீ வேறு; கண்ணன் வேறு இல்லை. இருவரும் எங்கள் பிள்ளைகளே," என்று கூறி அவனை முதுகில் ஆசையாகத் தட்டினார்; கண்ணன் தனக்கு ஒரு தம்பி கிடைத்தது பற்றி எல்லையில்லா இன்பம் அடைந்தான்.

அருஞ்சொற்பொருள்

வண்ண மலர்கள் - அழகிய மலர்கள், வனப்பு—அழகு, இன்பச் சுற்றுலா — உல்லாசப் பயணம் (Excursion), வறியவன் — ஏழை, ஆர்வம் — விருப்பம், இழிகுலம் — தாழ்ந்த குலம், கடுமொழி — கொடுஞ்சொல்.

பயிற்சி

I. விடை எழுதுக:

(1) மஞ்சன் மாளிகையின் சிறப்பு யாது ?

(2) முருகன் கண்ணனுக்குப் படிப்பில் எவ்வாறு உதவியாக இருந்தான் ?

(3) கண்ணனின் தாய் அவனைக் கண்டித்துக்கூறியது யாது ?

(4) முருகன் கண்ணனை எவ்வாறு துன்பத்திலிருந்து காப்பாற்றினான் ?

II. கண்ணனின் தந்தையார் முருகனைப் பாராட்டிக் கூறிய நிகழ்ச்சியைப்பதினைந்து வரிகளுக்கு மிகாமல் தொகுத்து எழுதுக.

III. (அ) பிரித்து எழுதுக:

அங்கொன்று, விடியற்காலை,
வண்ணமலர், சந்திப்பதில்லை.

(ஆ) சேர்த்து எழுதுக:

நன்மை + உதவி = விழுந்து + அடித்து =
வீடு + பரண் = பள்ளி + ஆசிரியர் =

(இ) எதிர்ச்சொல் தருக:

இனிப்பு × கடுஞ்சொல் ×
வலியவன் × நெருங்கி ×

(ஈ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

அங்கொன்றும் இங்கொன்றுமாக, ஈடுபட்டான், தழுதழுத்த குரலில், வெலவெலத்து, விழுந்தடித்து.

IV. (அ) வினைப்பகுதி தருக:

இருந்தன, நிற்கும், செய்கிறேன்,
பாருங்கள், ஈடுபட்டான், கேட்டான்.

(ஆ) தொழிற்பெயர் தருக:

தொடு, ஊட்டு, அழை,
வா, இரு. தீண்டு.

V. 'பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை'

(1) இப்படிக் கூறியவர் யார்?

(2) யாரிடம் கூறினார்?

(3) இவ்வரிகளில் விளக்கப்படும் உண்மை யாது?

9. தொல்காப்பிய அறிவியல்

(திரு. மீ. ப. சோமு)

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் நான் அயர்லாந்தில் பெல்பாஸ்ட் நகரத்துக்குச் சென்றிருந்தேன்; அங்குள்ள அரசினர் தோட்டத்தில் வளம்பெற வளர்ந்த வாழை மரங்களைப் பார்த்தேன்; அந்த வாழைகளுக்குச் சற்று அப்பால் சில தென்னை மரங்களையும் கண்டேன். நமது நாட்டின் தட்பவெப்ப நிலைகளைச் செயற்கைமுறையில் உண்டாக்கித் தோட்டக்காரர் அந்த மரங்களை வளர்த்திருந்தார்.

அந்த அரசினர் தோட்டத்தின் தலைவர் ஒரு பெரிய தாவர அறிவியலறிஞர். மாபெரும் கொட்டகை போன்று கூடாரம் அமைத்து அதில் மின்சார விளக்குகளைப் பொருத்தி அவற்றின்மூலம் வெப்பச் சூழ்நிலையை உண்டாக்கி நம்மூர் மரங்களைப்போலவே அவற்றைக் கண்காணித்து வளர்த்திருந்த அருமைப்பாட்டை அவரிடம் பாராட்டிக் கூறினேன். அப்போது அவர், "எனது தாவர அறிவியல் ஆராய்ச்சியில் ஒரு வியப்பான அனுபவம் உண்டு. மரங்களிலேயே வாழையும் தென்னையும் மிகவும் பண்பாட்டுணர்வு கொண்ட மரங்களாக இருக்கின்றன. வாழைமரம், ஒரு 'செல்லப் பிராணி' என்றால் தென்னைமரம் ஒரு 'வளர்ப்புப் பிள்ளை' என்றே சொல்வேன். ஒரு நாய்க் குட்டியை அல்லது ஒரு குழந்தையை வளர்ப்பதுபோல ஒரு குறிப்பிட்ட காலம்வரை இந்த மரங்களைச் சீராட்டித் தாலாட்டி வளர்த்தேன்," என்று சொன்னார்.

அந்த அறிஞர் கூறிய சொற்களிலே ஒரு தந்தையின் பாச உணர்வு இருந்தது. அவர் மேலும் பேசியபோது, "வாழை மரத்தை, 'ஒரு சிறிய பசு' என்று சொன்னால், தென்னை மரத்தை 'ஒரு சிறிய குழந்தை,' 'ஒரு சிறுபிள்ளை' என்றே அழைப்பேன். அவற்றின் நடத்தையும் போக்கும் அப்படி இருக்கின்றன" என்றார்.

இப்படி அவர் கூறியது என்னைத் தூக்கி வாரிப் போட்டது. "எங்கள் தமிழ்மொழியில் வாழை மரங்களில் சிறியதையும் தென்னை மரங்களில் சிறியதையும் நாங்கள் அழைக்கும் பெயர் நீங்கள் கூறும் நடத்தைக்கும் போக்குக்கும் பொருந்தும் முறையிலே இருக்கின்றன. வாழையை வாழைக் கன்று என்றும்

தென்னையைத் தென்னம் பிள்ளை என்றுமே நாங்கள் எங்கள் மொழியில் பல நூறு ஆண்டுகளாக அழைத்து வருகிறோம்,'' என்றேன்.

இவ்வாறு நான் கூறி, அந்தச் சொற்களின் ஆங்கில மொழி பெயர்ப்பை அவருக்கு உரைத்தபோது அவர் வியப்படைந்தார். நம் மொழி வல்லுநர்களும் சமுதாயமும் தாவர அறிவியல் உணர்வு நிரம்பிய நாகரிகத்துக்கு உரியவர்கள் என்று அவர் வியந்து பேசினார். 'தல விருட்சங்கள்' என்று சில குறிப்பிட்ட மரங்களை வழிபடும் நமது மரபை அவர் கேட்ட போது மிக்க வியப்படைந்தார்.

தென்னையும் வாழையும் பண்பாடு நிரம்பிய மரங்கள் என்றார், அயர்லாந்து அறிவியல் அறிஞர். இதுபோல் கறி வேப்பிலைச் செடியும் உயர்ந்த உணர்வுகள் கொண்ட ஒரு தாவரம். இதையும் 'கன்று' என்றும் 'கண்ணு' என்றுமே சொல்கிறோம். வெறும் செடி என்று சொல்வதில்லை. மாதுளையும் அப்படியே; மாவும் அவ்வாறே.

உணர்வு நிலையிலே துளசிச் செடி மிகமிக நுட்பமானது. அதனை மக்கள் துளசியம்மை, துளசிமாதா, துளசம்ம, துளசி யன்னை என்றெல்லாம் அழைக்கிறார்கள். விலங்குகளிலும் சிலவற்றை நாம் கன்று என்கிறோம்; சிலவற்றைப் பிள்ளை என்கிறோம்; புலிக்குட்டி, நாய்க்குட்டி, கீரிப்பிள்ளை என் கிறோம்; ஆனால், அணிலை அணிற்குஞ்சு அல்லது அணிற் குட்டி என்பதில்லை. அணிற்பிள்ளை என்கிறோம். காக்கை யைக் குஞ்சு என்கிறோம்; ஆனால், கிளியைக் கிளிப் பிள்ளை என்கிறோம். இவையெல்லாம் இலக்கண நெறிக்குப் பொருந்துவனவே. ஆனால், இந்த இலக்கணத்துக்குள் தாவர இயலும் விலங்கியலும் பறவை இயலும் நுட்பமாகப் பொதிந்து கிடக்கின்றன. உயிரினங்களை அவற்றின் மன வளர்ச்சியை ஆராய்ந்து கண்ட ஒரு சமுதாயத்தின் அறிவியல் மேன்மை இந்த மொழியியலுக்குள் அமைந்துள்ளது.

நமது பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் ஒரு பெரிய முனிவரால் இயற்றப்பட்ட அரிய நூலாகும். இது மொழியியலை உள்ளடக்கிய ஓர் இலக்கண நூலேயாயினும், இதில் அமைந்துள்ள அறிவியல் கருத்து எவ்வளவு வியப்

பான்து என்பதை இன்றைய அறிவியல் பார்வையோடு பார்த்தால்தான் நம்மால் நன்கு புரிந்துகொள்ள முடியும்.

தாவரவியல் (Botany), உயிரியல் (Biology), பறவையியல் (Ornithology), விலங்கியல் (Zoology) என்று இன்று தனித் தனியே நாம் பிரித்துக் கூறும் பகுத்தறிவியல் இந்த மொழி இலக்கண நூலின் பல இயல்களிலே விளக்கமாகப் பின்னிக் கிடப்பது ஒரு வியப்பான உண்மை.

தொல்காப்பியர் இத்தனை அறிவியலையும் ஒரே நாளில் ஒரே மனிதராக இருந்து கண்டுபிடித்தாரா? இல்லை. அவருக்கு முன்னரே அவர் இலக்கணம் செய்யப் புகுந்த மொழியிலும் அந்த மொழியைப் பேசும் மக்கள் சமுதாயத்திலும் அத்தனை அறிவியலும் இருந்து, அந்த அறிவியல் அனைத்தும் பேச்சு மொழியிலே ஏறிக் கலைச்சொற்களாக வழங்கின என்பதையே தொல்காப்பியம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

ஜகதீச சந்திரபோஸ் என்னும் அறிவியல் அறிஞர் தாவரங் களுக்குள்ள உணர்ச்சி, அறிவு நிலைகளை அறிவியல் கருவிகள் கொண்டு எடுத்துக்காட்டி மெய்ப்பித்தார் என்பதும் அவருக்குப் பல பரிசுகள் கிடைத்தன என்பதும் உலகறிந்த செய்தியாகும்.

தாவரங்களின் அறிவுபற்றியும் விலங்குகளின் அறிவுபற்றியும் மற்ற உயிரினங்களின் அறிவுபற்றியும் இவற்றின் படிப்படியான நிலைகள்பற்றியும் தொல்காப்பியம் பேசுகிறது.

‘புல்லும் மரனும் ஓரறி வினவே;
நந்தும் முரளும் ஈரறி வினவே;
சிதலும் எறும்பும் மூவறி வினவே;
நண்டும் தும்பியும் நான்கறி வினவே;
மாவும் புள்ளும் ஐயறி வினவே;
மக்கள் தாமே ஆறறி வுயிரே;

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே’

என்னும் தொல்காப்பிய நூற்பா அடிகளைப் படிக்கும்போது இஃது என்ன தாவர இயலா உயிரியலா உடற்கூற்றியலா பறவை இயலா என்று எண்ணத் தோன்றுகிறதன்றோ?

இளம்பூரணர் உரையைப் படிக்கும்போது வியப்பு இன்னும் அதிகமாகிறது. புல் என்பது புற வயிர்ப்பு உடையது. மரம் என்பது அக வயிர்ப்பு உடையது. ஈரறிவுயிராவன சங்கு, நத்தை, சிப்பி, கிளிஞ்சல், ஏரல் என்பன. சிதலும் எறும்பும் மூவறிவின •

இவ்வாறு உயிரினங்களின் அறிவையும் உணர்ச்சி நிலைகளையும் படிப்படியாக வகைப்படுத்தி, இவற்றுக்கான மரபுச் சொற்களையும் கூறிக்கொண்டே செல்கிறது தொல்காப்பியம்.

'பாடனி' என்னும் தாவரவியலை எடுத்துக் கொண்டோமானால் எத்தனை அறிவியல் கலைச்சொற்கள் தமிழ் மொழியில் வழங்குகின்றன என வியப்படைகிறோம். தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு, குலை, இலை, முறி, தளிர், சினை, குழை, பூ, அரும்பு—அப்பப்பா! ஒவ்வோர் உறுப்புக்கும் தனித்தனியான சொற்கள். எத்தனை அறிவியல் அறிவு இருந்தால் இப்படி உறுப்புகளை எல்லாம் வகைப்படுத்தி இவற்றுக்கான கலைச்சொற்களையும் தனித்தனியாக ஒரு சமுதாயம் வழங்கி இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

தொல்காப்பியம் மொழி இலக்கண நூல் மட்டுமன்று; பல நூறு ஆண்டுகளாக வளர்ந்து வந்துள்ள ஒரு சமுதாயத்தின் அறிவியற் செல்வம். அது நமது அரிய செல்வம்.

அருஞ்சொற்பொருள்

தட்பம் — குளிர்ச்சி, வளம்பெற — செழிப்பாக, கண்காணித்து — பார்வையிட்டு, வல்லுநர் — திறமையாளர், இலக்கண நெறி — இலக்கண வழக்கு, பொதிந்து—பொருந்தி, வியப்பான—ஆச்சரியமான, வயிர்ப்பு —வயிரம், பகுத்தறிவு —ஆராய்ந்தறியும் அறிவு, மரன் —மரம், நந்து—நத்தை, முரள் —சிப்பி, சிதல்—செல், கறையான்; மா—விலங்கு, ஏரல்—கிளிஞ்சல்.

பயிற்சி

I. சுருக்கமாக விடை எழுதுக:

(1) பெல்பாஸ்ட் நகரில் நம் நாட்டு மரங்களை எவ்வாறு வளர்க்கிறார்கள்?

(2) வாழை, தென்னை ஆகியவற்றின் அருமையை அயர்லாந்து அறிஞர் எங்ஙனம் எடுத்துக் கூறினார்?

3) வாழையைப்பற்றியும் தென்னையைப் பற்றியும் அயர்லாந்து அறிஞரிடம் ஆசிரியர் கூறியது யாது?

(4) மொழி இயலுக்குள் அறிவியல் மேன்மை அமைந்திருக்கும் தன்மையைச் சான்றுகள் கூறி விளக்குக.

(5) தொல்காப்பியம் நமக்கு எடுத்துக் காட்டும் உண்மை யாது?

II. தொல்காப்பியம் கூறும் அறிவியலைப் பதினைந்து வரிகளுக்கு மேற்படாமல் தொகுத்து எழுதுக.

III. பிரித்து எழுதுக:

தட்பவெப்பம், சிறுபிள்ளை,
பண்பாட்டுணர்வு, வியப்படைந்தார்.

IV. சேர்த்து எழுதுக:

பூனை + குட்டி = கீரி + பிள்ளை =
மொழி + இயல் = ஒன்று + அறிவு =

V. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

மாபெரும், சீராட்டி, பாசவுணர்வு, தனித்தனியாக, உலகறிந்த.

VI. எதிர்ச்சொல் தருக:

வெப்பம் × மெய்ப்பித்தார் ×
மேன்மை × பிரித்து ×

10. வள்ளுவரும் நாமும்

(ஒரு கற்பனை)

(இரசிகமணி திரு. டி. கே. சிதம்பரநாதன்)

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னும் செல்வம் முதலில் சிறிது சிறிதாய்த் திரண்டு சில ஆண்டுகளிற் பெருஞ் செல்வமாகப் பெருகி நிற்கும் நிகழ்ச்சிகள் பலவற்றைக் கண்டு, திருவள்ளுவர் களித்துக்கொண்டும் வியந்துகொண்டும் இருந்தார்.

இதுமட்டுமா? அன்று நாடகம் ஆடுவதைப் பார்ப்பதிலும் பார்ப்பவரைப் பார்ப்பதிலும் நமக்கெல்லாம் இருப்பதைப் போலவே அவருக்கும் ஆர்வம் இருந்தது. நம்மைவிட அவருக்குப் பேரார்வம் இருந்தது என்றே சொல்ல வேண்டும். அக்காலத்திய நாடகங்களுக்குக் கொட்டகை இல்லை. ஊரை ஒட்டியுள்ள வெட்டவெளி அல்லது மந்தைவெளிதான் நாடகம் ஆடும் இடம். மேலும், அந்த நாடகங்களுக்கு நாட்டியம் இன்றியமையாத பகுதியாகும். அரசரோ, அரசியோ, பிள்ளையாரோ — யார் வந்தாலும் புழுதி கிளம்புமாறு ஒரு சுற்று நடனம் ஆடிவிட்டுத் தான் இருக்கையில் அமருவார்.

நாட்டியப் பெண்ணோ குறவன் குறத்தியோ வந்து விட்டால் சொல்ல வேண்டுவதில்லை. இதுபற்றியே நாடகத்துக்குக் 'கூத்தாட்டம்' என்னும் பெயர் வழங்கிவந்தது. இரவு ஒன்பதரை மணிக்கு ஆட்டம் தொடங்கும். நாடகம் நடக்கும் இடத்துக்கு ஒரு நாள் திருவள்ளுவர் எட்டு மணிக்கே வந்து விட்டார். அவ்வமயம் நாலைந்து பேர் அங்கு வந்து தள்ளித் தள்ளி அமர்ந்தனர். எட்டரை மணிக்குள்ளாக ஏறக்குறைய நூறு பேர் வந்து சேர்ந்தனர். ஒன்பது மணிக்குக் கூட்டம் ஆயிரம் பேருக்கு மேற்பட்டுவிட்டது. திரையை அகற்றும் ஒன்பதரை மணி நேரம் வந்ததோ இல்லையோ, பதினாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளம்போல் திரண்டனர்; உள்ளூரிலிருந்து மட்டு மன்று. சுற்றுப் பக்கத்து ஊர்களிலிருந்தும் ஆடவர், பெண்டிர், பிள்ளைகள் எல்லாரும் வந்து விட்டனர். 'எள் விழவும் இடமில்லை' என்று சொல்லும்படி நெருக்கி உட்கார்ந்து கொண்டனர். திருவள்ளுவர் முன்னும் பின்னும் இருபக்கமும் கண்ணுக்கெட்டியவரையிலும் பார்த்தார். நிலவின் ஒளி பட்டுத் தலைக்கடல் ஒரே பரப்பாகத் தோன்றியது. அவ்வளவு பேரும் நாடகம் தொடங்கியவுடன் அதிலேயே வைத்த கண் வாங்காமல்

அசைவற்று இருந்தார்கள். மணி ஒன்று, இரண்டு, மூன்று ஆகிவிட்டது. அனைவரும் ஆணி அடித்து வைத்தாற்போல் சிலையாக இருந்தனர்.

இவற்றையெல்லாம் கண்ட வள்ளுவர் தமக்குள்ளே சொல்லிக் கொண்டார். "என்ன! எட்டு மணிக்கு ஏதோ நாலைந்து பேர் வந்தனர். பின்னர், நூறு, ஆயிரம், இறுதியில் பதினாயிரம் என்று கூடிவிட்டனர். ஐந்து மணி நேரத்துக்கு மேலாகியும் வந்தவர்கள் அப்படியே அசையாமல் அமர்ந்திருக்கிறார்கள். ஆகா! இந்த அவைக் குழாத்தைப் போலத்தான் இருக்கிறது பெருஞ் செல்வம்; சிலரிடத்தில் வந்து தங்குவதும், உண்மை." இவ்வாறாக இரண்டு வேறுபட்ட பொருள்கள் (செல்வமும் கூத்தாட்டத்துக்கு வந்த அவைக் குழாமும்) ஒன்றோடொன்று இணைந்து நிற்கும் உவமான நிலையை மனக்கண்ணால் கண்டு களித்த வண்ணம் இருந்தார். கூத்தாட்டத்தில் அவரது மனம் செல்லவில்லை.

சிறிது நேரத்தில் கிழக்கே வெள்ளி எழுந்தது. கூத்தும் முடிந்தது. கூட்டம் கலைந்து எல்லாரும் தம் இல்லம் நோக்கியும் ஊர்கள் நோக்கியும் போய்விட்டனர்; ஒரு நொடியில் மாயமாய்ப் பறந்து போய்விட்டனர்.

ஆட்டம் ஓய்ந்து ஐந்து மணித்துளிகள்தான் இருக்கும். உவமான உவமேயங்களின் உண்மையில் ஆழ்ந்து மூழ்கியிருந்த வள்ளுவர் மெல்ல மெல்ல வெளி உலகத்துக்கு வந்து சுற்று முற்றும் பார்த்தார், வந்தவர்களுள் ஒருவரைக்கூடக் காண வில்லை வீட்டுக்குத் தன்னந்தனியாகத்தான் போகவேண்டும் என உணர்ந்தார். 'ஆகா! மெல்லமெல்ல வந்ததென்ன! இருந்ததென்ன! மாயமாய்ப் போனதென்ன! சிலரிடத்தில் வளர்ந்தேறிவந்த பெருஞ்செல்வமெல்லாம் ஒரே நாளில் இல்லாது ஒழிந்துபோவதையும் பார்த்திருக்கிறோம். பெருஞ் செல்வம் ஒழிந்துபோவதும் இங்கு இதுவரை கூடியிருந்தவர்கள் தரையைத் துடைத்த வண்ணமாக ஒரேபோக்காகப் போனது போன்றதுதான். விடியும் நேரமாக் இருந்தாலும் இந்த இடமும் நேரமும் ஏதோ ஒரு விதமான அச்சத்தையோ, துக்கத்தையோ உண்டாக்குகிறது.' இப்படியெல்லாம் சிந்தித்துக் கொண்டு பையப் பைய வீடு போய்ச் சேர்ந்தார். பொழுதும் விடிந்துவிட்டது. மனத்தில் இதுகாறும் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் எல்லாம் மெல்ல நெருங்கி நெருங்கி ஒன்றோடொன்று இணைந்து ஒலிவடிவாய் வெளிப்பட்டன.

'கூத்தாட்(டு) அவைக்குழாத்(து)அற்றேபெருஞ் செல்வம்;
போக்கும், அதுவிளிந் தற்று.'

செல்வம் மெல்ல மெல்ல வருவதன் கருத்தை நான்கு சீர்களி லும் கணத்தில் ஒழிந்துபோகும் என்னும் கருத்தை இரண்டு சீர்களி லும் சொல்லித் தீர்த்துவிட்டார். போனது மீளாது என்னும் பொருளைச் சோகம் கலந்த 'விளிதல்' என்னும்சொல் தொனிக்கச் செய்கிறது. அன்றியும், செல்வம் உள்ளபோதே அறங்களைச் செய்து மன அமைதி பெறவேண்டும் என்னும் உட்கருத்தும் புலனாகிறது. செய்யுளை அதன் உள்ளக் கருத்தாகிய உண்மை யோடு ஒட்டி ஆர அமரச் சிந்திப்போமாயின் உண்மையும் நயமும் புதிது புதிதாக நம் உள்ளத்தில் பிறக்கும். 'நவில்தொறும் நூல் நயம் போலும்' என்பதன் பொருள் துலங்கும்.

அருஞ்சொற்பொருள்

திரண்டு — சேர்ந்து, பேரார்வம் — மிகுந்த ஆவல், அவை — சபை, குழாம் — கூட்டம், பையப்பைய — மெல்லமெல்ல, விளிந்தற்று — அழிந்து போவது போன்றது, கணத்தில் — ஒரு நிமிடத்தில், மீளாது திரும்பாது, சோகம் — துயரம், நவில் தொறும் — படிக்கும் போதெல்லாம், துலங்கும் — விளங்கும்.

பயிற்சி

I. விடை எழுதுக:

(1) பண்டைக் கால நாடகங்கள் எவ்வாறு நடை பெற்றன?

(2) சிறியதாக இருந்த கூட்டம் எப்படிப் பெரியதாகத் திரண்டது?

(3) செல்வம் ஒருவரிடம் வந்து தங்குவதற்கு வள்ளுவர் எதனை உவமையாகக் கொண்டார்?

(4) செல்வம் அழிந்துபோவதற்கு வள்ளுவர் கண்ட உவமை யாது?

II. 'கூத்தாட்(டு) அவைக்குழாத்(து) அற்றே பெருஞ்செல்வம் போக்கும் அதுவிளிந் தற்று'.

இக்குறளின் பொருளைக் கூறி, அதனால் உணரப் படும் உட்கருத்தைப் பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விளக்கி எழுதுக.

III. (அ) பிரித்து எழுதுக:

பெருஞ்செல்வம், ஒன்பதரை, பதினாயிரம்.
ஓட்டியுள்ள, நாலைந்து, விளிந்தற்று.

(ஆ) சேர்த்து எழுதுக:

நமக்கு + எல்லாம் = கூத்து + ஆட்டம் =
அவை + குழாம் = வளர்ந்து + ஏறி =

(இ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

சிறிது சிறிதாய், சுற்றுமுற்றும்,
கண்ணுக்கெட்டிய, பையப் பைய.

IV. 'அண்ணே! எட்டு மணிக்கு ஏதோ நாலைந்து பேர் வந்தனர்!'

(1) இவ்வாறு தமக்குள் கூறியவர் யார்?

(2) வந்தவர் யார்?

(3) அவருக்குப் பின்னர் எத்தனை பேர் கூடினர்?

11. தேசிய ஒருமைப்பாடு

(திரு. தா. அழகுவேலனார்)

தேசிய ஒருமைப்பாடு என்பது வீட்டுக்கு வீடு, ஊருக்கு ஊர், நாட்டுக்கு நாடு நல்ல நட்புறவும் ஒத்துழைப்பும் ஒருவருக்கொருவர் உதவியும் கொண்டு வாழ்வதற்கு வேண்டிய ஒற்றுமை மனப்பான்மையை வளர்த்துக்கொள்வதே ஆகும். இத்தேசிய ஒருமைப்பாட்டுணர்வில் நம் பாரத நாடு எந்த நாட்டிற்கும் குறைந்ததன்று. இந்திய நாட்டின் விடுதலை வரலாற்றை ஒருமுறை படித்துப் பார்த்தால் நம் நாட்டினர் எத்தகைய தேசிய ஒருமைப்பாட்டுணர்வு உடையவர்களாக வாழ்ந்தார்கள் என்பது புலனாகும். தேசிய ஒருமைப்பாடு என்னும் உணர்வு சத்தியம், அன்புநெறி, உடன் பிறப்புணர்வு என்பவற்றின் அடிப்படையில் எழுந்த ஒன்றாகும்.

'பாருக்குள்ளே நல்ல நாடு நம் பாரத நாடு.' 'பொன்னாடு' என்று எந்நாடும் போற்றும் பெருமையுடையது நம் பாரதம். இந்நாட்டில் பல சமயங்கள் உண்டு; மொழிகள் உண்டு; இனங்கள் உண்டு. எனினும், பாரத மக்கள் 'பண்பாடு ஒன்றே' என்னும் சீரிய கொள்கையினைக் கொண்டவர்கள்.

> 'எல்லாரும் ஓர்குலம்; எல்லாரும் ஓரினம்;
> எல்லாரும் இந்திய மக்கள்,'

எனப் பெருங்கவிஞர் பாரதியார் இதனைத் தெள்ளத் தெளிய விளக்கிப் பாடியுள்ளார்.

பிற நாட்டவரால் நம் நாட்டுக்குத் தொல்லை நேர்ந்த போதெல்லாம் பாரத மக்கள் தம் இனத்தை மறந்து, சமயத்தை மறந்து ஒன்றுபட்ட உள்ளத்துடன் எதிர்த்து நின்றமையால் பாரதம் மாற்றார்க்குப் பணியாமல் தலைநிமிர்ந்து நின்றது. ஆடவரும் மகளிரும், இளைஞரும் முதியவரும், மாணவ மாணவியர் அத்தனை பேரும் போட்டி போட்டுக்கொண்டு பாதுகாப்பு முயற்சிக்குக் காட்டிய ஒத்துழைப்பு இந்நாட்டு மக்கள் மட்டுமன்றி, வெளிநாட்டினரும் வியந்து பாராட்டும் அளவுக்கு ஓங்கி இருந்தது.

பழங்காலந்தொட்டே பாரத மக்கள் ஒருமைப்பாட்டுணர்வுடன் வாழ்ந்துவருகின்றனர். நம் நாட்டின் வடபகுதியில் வாழும் மக்கள் தென்பகுதியில் உள்ள காஞ்சி, தில்லை, இரா

மேசுவரம், கன்னியாகுமரி, திருப்பதி முதலிய தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபடுகின்றனர். அங்ஙனமே தென் பகுதியில் வாழும் மக்கள் வட பகுதியில் உள்ள காசி, அரித்துவாரம், துவாரகை முதலிய தலங்களைச் சிறந்தனவாகக் கருதி, அங்குச் சென்று இறைவனை வழிபட்டு வருகின்றனர். நம் நாட்டு இலக்கியங்களும் புராணங்களும் இதிகாசங்களும் சமயத்தின் அடிப்படையில் தோன்றிய ஒருமைப்பாட்டுணர்ச்சியை நன்கு எடுத்துக்காட்டுகின்றன. வட இந்தியாவில் தோன்றிய பாரதம், இராமாயணம் முதலியவற்றைத் தென்னிந்திய மக்கள் ஏற்றுக்கொண்டதன்றி, அவற்றைத் தம் மொழியிலும் எழுதிச் சுவைத்தார்கள். அதுபோலவே தென்னிந்தியாவில் தோன்றிய திருக்குறள் வட இந்திய மக்களால் போற்றப்பட்டு அவர்களும் தங்கள் மொழிகளில் மொழிபெயர்த்துக்கொள்ளும் வாய்ப்பினை அளித்தது.

இந்தியாவை ஆண்ட அரசர்களும் ஒருமைப்பாட்டுணர்வுக்கு முன்னோடியாக விளங்கினார்கள். ஒரு நாட்டு மன்னன் மகளை மற்றொரு நாட்டு மன்னன் வேற்றுமை கருதாமல் மணந்தான். அருச்சுனன் பாண்டியன் ஒருவன் மகளை மணந்த செய்தியைப் பாரதம் கூறுகிறது. பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் என்னும் தமிழ் மன்னன் பாரதப் போரில் இருதிறத்துப் படையினருக்கும் உணவு அளித்தான் என்பது அவன் பெயரில் அமைந்த அடைமொழியால் புலப்படுகின்றது.

மிகப் பழங்காலத்திலிருந்தே பாரத நாட்டின் கலைகளிலும் ஒருமைப்பாடு மிளிர்வதைக் காணலாம். கலைத் துறையில் காணப்படும் ஒருமைப்பாடு பிற துறைகளில் காணப்படும் ஒருமைப்பாட்டைவிட வியக்கத்தக்க நிலையில் உள்ளது. தென்னிந்தியச் சிற்பக்கலைகள் வட இந்தியாவிலும் வட இந்தியச் சிற்பக் கலைகள் தென்னிந்தியாவிலும் சிறந்த மதிப்பைப் பெற்றுள்ள செய்தி அனைவரும் அறிந்ததேயாகும். ஓவியக் கலை, இசைக்கலை ஆகியவற்றிலும் நாம் இந்த ஒருமைப்பாட்டைக் கண்டு பெருமிதமடைகிறோம்.

தேசிய கவிஞர் பாரதியார் நம் தாயகத்தின் ஒருமைப்பாடு விளங்கப் பாடிய பாடல்கள் படித்துச் சுவைப்பதற்குரியனவாம். பாரத நாட்டில் தோன்றிய மக்கள் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்போல் பழகவேண்டும் என்கிறார் பாரதியார். அவர் காலத்தில் பாரத நாட்டின் மக்கள் தொகை முப்பது கோடி. அதனால், பாரத அன்னையின் பெருமையைக் கூறப்புகுந்த கவிஞர்,

முப்பது கோடி முகமுடையாள்; —உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள்; —இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள்; எனில்
சிந்தனை ஒன்றுடையாள்',

எனப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

'முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக் கும்பொது உடைமை
ஒப்பி லாத சமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை,'

என்னும் பாரதிபாடல் பாரதம் முழுமையையும் ஒருங்கிணைத்துக் காட்டும் வியத்தகு சித்திரமாக விளங்குகின்றது.

மேலும், பாரதியார் தமிழகத்தார் கங்கையாற்றங் கரையில் விளையும் கோதுமைக்குப் பண்டமாற்றாகத் தமிழ்நாட்டுக் காவிரிக் கரையில் விளையும் வெற்றிலையைத் தரவேண்டும்; சிங்க மராட்டியரின் கவிதைத் திறனைச் சுவைத்து அவர்களுக்குச் சேர நாட்டுத் தந்தங்களைப் பரிசாக வழங்க வேண்டும்; காசி நகரில் வாழும் புலவர் ஒருவர் பேசினால் அவரது பேச்சைக் காஞ்சியிலே கேட்பதற்குத் தக்கவாறு கருவி ஒன்றைக் காண வேண்டும் என்று கூறியிருப்பது நம் தேசிய ஒருமைப்பாட்டுக்கு உரமூட்டுவதாக அமைகிறது.

பாரத நாட்டு மாணவச் செல்வங்களே, நாம் இன்று உரிமை பெற்ற திருநாட்டில் வாழ்கிறோம். நம் நாடு நாம் வாழும் வீடு என்னும் உணர்வோடு வாழவேண்டும். சாதி வேறுபாடும் சமய வேறுபாடும் கருதுதல் நம் நாட்டு நலத்தை அரிப்பதாகும்; எரிப்பதாகும். எனவே, நம் நாட்டில் உள்ள ஒவ்வொரு மாநிலத்தையும் நம் வீட்டில் உள்ள அறைகளைப் போலக் கருதி, அனைவரிடமும் அன்பு பாராட்டி ஒற்றுமையோடு வாழ்வது நமக்கு உற்ற கடமை ஆகும்.

'கன்னி இமயக் கடலிடை நாடு
கடவுள் நமக்கெனக் கட்டிய வீடு.'

—நாமக்கல் கவிஞர்

அருஞ்சொற் பொருள்

பொன்னாடு — அழகிய நாடு (சிறந்த நாடு), உடன்பிறப் புணர்வு — சகோதரத்துவம், தில்லை — சிதம்பரம், இதிகாசம்— பாரதம், இராமாயணம் போன்ற காவியங்கள், வாய்ப்பு —

சந்தர்ப்பம், முன்னோடி — வழிகாட்டி, மிளிர்வதை — விளங்கு வதை, முகம் உடையாள் — முகம் என்பது இங்கு மக்களைக் குறிக்கும், செப்பும் — பேசும், கன்னி — கன்னியாகுமரி.

பயிற்சி

I. விடை எழுதுக:

(1) பாரத மக்கள் ஒருமைப்பாட்டுணர்வு உடையவர்கள் என்பதைப் பாரதியார் எங்ஙனம் விளக்கியுள்ளார்?

(2) இறை வழிபாட்டில் நம் நாட்டு மக்களின் ஒருமைப் பாட்டை விளக்கி எழுதுக.

(3) நம் நாட்டு அரசர்களுக்குள் ஒருமைப்பாட்டு உணர்ச்சி நிலவி இருந்ததை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக?

(4) நம் நாட்டுக் கலைகளிலும் ஒருமைப்பாடு உண்டு என்பதை விளக்குக.

(5) பாரத அன்னை ஒருமைப்பாட்டின் உருவமாக விளங்கு கிறாள் என்பதைப் பாரதியார் எங்ஙனம் புலப்படுத்தி யுள்ளார்?

II. பாரத ஒருமைப்பாடு பற்றிப் பாரதியார் கூறுவன வற்றைப் பதினைந்து வரிகளில் சுருக்கி வரைக.

III. (அ) எளிய தமிழில் பொருள் தருக:

தில்லை,	செப்பும்,	கன்னி,
முன்னோடி,	வாய்ப்பு,	இதிகாசம்.

(ஆ) பிரித்து எழுதுக:

மனப்பான்மை,	பழங்காலம்,	தென்பகுதி,
பெருங்கவிஞர்,	வடபகுதி,	ஒருங்கிணைத்து.

(இ) சேர்த்து எழுதுக:

முகம் + உடையாள் =	ஒப்பு + இலாத =
பாரதம் + போர் =	உரம் + ஊட்டுவது =
வயிறு + பிள்ளை =	சிற்பம் + கலை =

(ஈ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

அடிப்படை,	தக்கவாறு,	அரிப்பது,
வழிபடு,	உரிமை,	மிளிர்வது.

IV. (அ) பன்மை தருக:

புராணம், பிள்ளை, சிங்கம்,
துறை, மலை, வீடு.

(ஆ) எதிர்ப்பால் தருக:

பெண், ஆடவர், மாணவி.

(இ) வினைப்பகுதி தருக:

விளக்கினார், அளித்தது,
வருகின்றனர், பாடியுள்ளார்.

(ஈ) தொழிற்பெயர் தருக:

மற, காட்டு, கட்டு,
பாடு, பழகு, கூறு.

(உ) எதிர்ச்சொல் தருக:

உண்டு, குறைந்தது, வெளிநாடு,
ஒற்றுமை, மறந்து, புதுமை.

12. தூது நடந்த மூதாட்டி

(நாடகம்)

(திரு. தணிகை உலகநாதன்)

காட்சி — 1

இடம் : தகடூர், அதியமானின் அவைக் களம்

நேரம் : காலை

நாடக உறுப்பினர் : அதியமான், ஔவையார், காவலன் முதலியோர்.

(அதியமான் அரியணையில் அமர்ந்திருக்கிறான். வாயிற் காவலன் வருகிறான்.)

வாயிற்காவலன் : தகடூரை ஆளும் தனிப்பெரு வேந்தே! வாழ்க நும் கொற்றம்! வள்ர்க நும் புகழ்! தண்டமிழ் மூதாட்டியாராம் ஔவைப் பிராட்டியார் தங்களைக் காண வந்திருக்கிறார்.

அதியமான் : ஔவையாரா? மகிழ்ச்சி! உடனே அவரை அழைத்து வருக.

(காவலன் ஔவையாரிடம் சென்று)

காவலன் : அருந்தமிழ்ச் செல்வியாரே, அரசர் தங்களைக் காண ஆவலோடு இருக்கிறார்.

(காவலன் ஔவையாரை அரசவைக்கு அழைத்துச் செல்கிறான். ஔவையாரைக் கண்ட அதியமான் பெருமகிழ்ச்சியோடு இருகை கூப்பி வணங்குகிறான்.)

அதியமான் : தீந்தமிழ் பாடும் தெய்வக் கவிஞரே! வருக! வருக! தங்கள் வருகைக்கு இந்தத் தகடூர் செய்த தவமே தவம்! தங்கள் வருகையால் எங்கள் நாடே இன்பக் கடலில் திளைக்கிறது. இதோ, இந்த இருக்கையில் அமருங்கள்.

(ஔவையார் அருகில் இருக்கும் ஓர் இருக்கையில் அமர்கிறார்.)

ஔவையார் : வெற்றி வேந்தே! வாழ்க நும் அரசு! வளர்க நும் செங்கோல்! நீதி தவறாத நும் அருமை பெருமைகளையும் ஆட்சித் திறனையும் கேட்டு உம்மைக் காண வந்தோம். நலந்தானே?

அதியமான் : தங்கத் தமிழ்க் கவிதை பாடும் தங்களைப் போன்ற புலவர் பெருமக்கள் வாழ்த்தின் வலிமையால் எங்கள் நாட்டில் எத்தகைய குறையும் இல்லை. மக்கள் அனைவரும் அமைதியும் இன்பமும் நிறைந்து வாழ்கிறார்கள்.

ஔவையார் : அரசர் பெருமானே! இங்கு அமைச்சர்களும் தானைத் தலைவர்களும் கூடி இருப்பதைக் காணின், நீங்கள் ஏதோ ஆழ்ந்த ஆலோசனை செய்வதுபோலத் தோன்றுகிறது.

அதியமான் : ஆம், அன்னையே! ஆருயிர் நண்பனாக யான் நம்பியிருந்த காஞ்சி மன்னன் தொண்டைமான் எங்கள் தகடூர் நாட்டின்மீது படையெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறான். இதனை ஒற்றர் வாயிலாகக் கேள்விப்பட்ட நாங்கள் வாளா இருக்க முடியுமா? உடனே அமைச்சர்களையும் தானைத் தலைவர்களையும் கூட்டி, நாட்டைக் காப்பதற்கு வேண்டியவற்றைக் குறித்து ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

ஔவையார் : (மிக்க வியப்புடன்) என்ன! என்ன! அண்டை நாட்டுத் தொண்டைமானா? தகடூர்மீது படையெடுக்கவா போகிறான்? அடா பாவி! நண்பன் என்று நம்பியவர்மீதே பகைமை பாராட்டுவதா?

அதியமான் : ஆம், அன்னையே! நேற்றுவரை கூடிக்குலவிய தொண்டைமான் எனக்குப் பகைவனாக மாறியது விந்தையினும் விந்தையே! ஓ! இது பகைவர்களின் சூழ்ச்சியாக இருக்கலாம். வஞ்சக வலையில் சிக்கிய தொண்டைமான் அவர்தம் கைப்பாவையாக ஆடுகிறான் போலும்!

ஔவையார் : வீரர் பெரும, இதற்கா அஞ்சுகிறாய்?

அதியமான் : அம்மையீர்! நான் போருக்கு அஞ்சும் கோழை யல்லேன். ஆனால், போரால் நாட்டுக்கு விளையும் கொடுமைகளை எண்ணியே என் நெஞ்சம் துணுக்குறுகிறது.

ஔவையார் : என்ன! அதியமானா இப்படிப் பேசுவது! அடிக்கும் கோலுக்கு அஞ்சாமல் சீறிவரும் பாம்பைப் போன்ற அதியமானா இப்படிப் பேசுவது! எதிர்த்தவரை எல்லாம் எமனுக்கு இரையாக்கிய அதியமானா இப்படிப் பேசுவது! நினைப்பதற்கே நாணம் தரும் செய்தியன்றோ இது!

அதியமான் : பெருமாட்டியாரே! சிங்கத்தின்முன் சிறு நரிக் கூட்டம் என்ன செய்யும்? சீறும் பாம்புக் கெதிரில் சிற்றெலிகள் நிற்குமா? 'எப்போது போர் வருமோ ?' என எங்கள் வீரர்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் படைகளுக்கு முன் காஞ்சிப் படைகள் எம் மாத்திரம்! ஆனால், போரினால் நாட்டுக்கு நேரும் நலிவுகளை எண்ணியே வேதனை அடைகிறேன். இருதிறத்தாரும் செய்யும் போரால் எத்தனையோ வீரர் உயிரிழக்கக் கூடும்; கணவரை இழந்த காரிகையர் கண்ணீர் உகுப்பர்; தந்தையரை இழந்த சிறுவர் கதி இழந்து தவிப்பர்; நாடு காடாக மாறுமே என்றுதான் கவல்கிறேன்.

ஔவையார் : வெற்றிச் செல்வரே, உமது நல்லெண்ணத்தைக் கண்டு பாராட்டுகின்றேன். நாட்டு நலத்திலும் குடிமக்களின் நல்வாழ்விலும் நுமக்குள்ள பேரன்பையும் பேரார்வத்தையும் போற்று கிறேன். எனக்கு ஓர் எண்ணம் தோன்றுகிறது.

அதியமான் : என்ன அது ? கூறுங்கள், அன்னையே!

ஔவையார் : வள்ளற்பெருமானே! வருந்த வேண்டா. யான் உடனே காஞ்சி செல்வேன்! தொண்டைமானைக் கண்டு அறிவுரைகள் கூறி, உங்கள் இருவரின் நட்பும் நிலைபெறச் செய்வேன்.

அதியமான் : தமிழ்ச் செல்வியாரே, உங்கள் ஆறுதலுரை எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. உங்கள் அறிவுரை தொண்டைமானின் மனத்தை மாற்றும் என்பதில் ஐயமில்லை. உங்களுக்கு நேரும் தொல்லைக்குப் பொறுத்தருள வேண்டுகின்றேன். சென்று வாருங்கள். நன்றி நவில்கிறேன். வணக்கம்.

ஔவையார் : நன்று மன்னரே! விரைவில் சென்று வெற்றியுடன் திரும்புவேன். வாழ்க, நும் கொற்றம்;

(ஔவையார் காஞ்சிக்குச் செல்கிறார்.)

காட்சி 2

இடம் : காஞ்சி — தொண்டைமான் அரண்மனை

நேரம் : மாலை

நாடக உறுப்பினர் : தொண்டைமான், காவலன், ஔவையார், அவையோர் முதலானோர்.

காவலன் : (தொண்டைமானை வணங்கி) வெற்றிவேந்தே, வாழ்க! அருந்தமிழ்ச் செல்வியார் ஔவை மூதாட்டியார் உங்களைக் காண வந்துள்ளார்.

தொண்டைமான் : ஔவையாரா ? வரட்டும், வரட்டும். உடனே அவரை உள்ளே அழைத்து வா.)

(காவலன் ஔவையாரை அவைக்களத்துக்கு அழைத்து வருகிறான்.)

ஔவையார் : காஞ்சியை ஆளும் காவலரே, வாழ்க!

தொண்டைமான் : வணக்கம், அன்னையீர், வருக! வருக! உங்கள் வரவு நல்வரவாகுக! இதோ! இந்த இருக்கையில் அமருங்கள்.

(ஔவையார் இருக்கையில் அமர்கிறார்.)

ஔவையார் : பழமையும் பெருமையும் மிக்க காஞ்சியின் தலைவரே, அனைவிரும் நலமாக இருக்கிறீர்களா ?

தொண்டைமான் : அன்புக் கடலே! அறிவுச் செல்வமே! தங்கள் நல்வாழ்த்தின் பயனாக யாவரும் நலமாக வே வாழ்கிறோம். தங்கள் நல்வரவால் எங்கள் நாடு பெருமை அடைந்தது. நாங்கள் பெரும் பேறு பெற்றோம். கவிதைக் கொண்டலே! சில நாள் இங்கேயே தங்கியிருந்து தமிழ் விருந்து அளித்து எங்களை மகிழ்விக்க வேண்டு கிறேன். நெடுந்தொலைவு நடந்த களைப்புத் தீர விருந்துண்டு ஓய்வெடுத்துக்கொள்ளுங்கள்.

ஔவையார் : நன்றி, மன்னரே, நீவிர் விரும்பியவாறே செய் வோம். நும்மிடம் பேச வேண்டிய செய்தி உண்டு. நாளைக் காலை சந்திப்போம்.

தொண்டைமான் : நன்று. அன்னையீர், அப்படியே செய்வோம்.

(ஔவையார் உணவு உண்ணச் செல் கிறார். அவை கலைகிறது).

காட்சி—3

இடம் : தொண்டைமான் படைக்கலக் கொட்டில்

நேரம் : காலை

நாடக உறுப்பினர் : தொண்டைமான், ஔவையார்

(தொண்டைமான் தன் படைக்கலக் கொட்டிலைக் காட்டுகிறான்.

தொண்டைமான் : அருந்தமிழ் போற்றும் ஔவைப் பெரு மாட்டியாரே! இதுதான் எங்கள் படைக்கலக் கொட்டில். இங்கே வரிசையாக வைக்கப் பட்டிருக்கும் போர்க் கருவிகளைப் பாருங்கள்! எங்கள் படை வீரர்கள் இவற்றைப் பயன் படுத்த ஆயத்தமாக இருக்கிறார்கள்.

ஔவையார் : ஆற்றல் மிக்க அரசே! ஆகா! என்ன அழகான போர்க்கருவிகள்! இந்தப் படைக்கலக் கொட்டில் போல யாம் வேறு எங்குமே கண்ட தில்லை. இங்குள்ள போர்க் கருவிகள் யாவும் எண்ணெய் தடவி அழகுபடுத்தப்பட்டுள்ளன,

மயிற்பீலிகளும் மலர் மாலைகளும் சூட்டப்பட்டு அணியணியாக நிறுத்தப்பட்டுள்ளன! ஆனால், போர் புரிதலையே பொழுது போக்காகக் கொண்ட எம் அரசன் அதியமானின் படைக்கலங்களோ பகைவருடன் பொருது, பொருது உடைந்தும் மடிந்தும் முரிந்தும் மழுங்கியும் பழுதுபார்க்கக் கொல்லன் உலைக்களத்தில் குவிந்து கிடக்கின்றன.

(ஔவையாரது கூற்றின் உட்கருத்தை உணர்ந்த தொண்டைமான் அதனை வெளிப்படுத்தாமல் புலவரை நோக்கி)

தொண்டைமான் : செந்தமிழ் அன்னையீர், உங்கள் நாட்டில் எம்மோடு போர் புரிதற்கு ஏற்ற வீரரும் உண்டோ?

ஔவையார் : அருந்தமிழ் நாடாளும் மன்னரே, அதியமானைக் கோழை என்று எண்ண வேண்டா. எமனே எதிர்ப்பினும் எதிர் நின்று போர் செய்யும் வீரர் பலர் எங்கள் நாட்டில் உண்டு. ஓரிடத்தில் கட்டித் தொங்கவிடப்பட்ட மத்தளம் காற்றினால் அசைந்து ஓசை உண்டானால், அவ்வோசையே போர் முரசின் ஓசை என எண்ணிப் பூரிப்புக் கொண்டு தோள் தட்டிப்புறப்படுவர் அவ்வீரர். அதியமான் மேற்கொண்ட போர்களில் எல்லாம் வெற்றி மாலையே சூடி வருபவன். மன வலிமை மிக்க அவனை எவராலும் வெல்ல முடியாது. இஃது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

தொண்டைமான் : அறிவுக் கடல் போன்ற ஔவையாரே! அங்ஙனமாயின், அதியமான் என்னைவிட உயர்ந்தவன் என்பது உங்கள் எண்ணம்போலும்!

ஔவையார் : செந்தமிழ்ப் புரலவரே, நான் சொல்வதைக் கேட்பீராக. நீங்கள் இருவீரும் நெருங்கிய நண்பர்கள் என்பதை நான் பல்லாண்டுகளாக அறிவேன். ஒரு காரணமும் இன்றி உங்களுக்குள் பகைமை உண்டாயின், அஃது உங்கள் நாட்டுக்கே பழியைத் தரும் செயலாகும். உங்கள் போக்குப் பகைவரின் நகைப்புக்கு இட

மாகும். அன்றியும், அதியமானோ போருக்குச் சிறிதும் அஞ்சுபவன் அல்லன்; போரினால் நேரும் விளைவுகளுக்கே அஞ்சுகின்றான். நீங்கள் செய்யும் போரினால் ஒரு பாவமும் அறியாத குடிமக்கள் துன்பமடைய வேண்டுமா? நாடு நலிய வேண்டுமா? பெருந்தன்மை வாய்ந்த அதியமான் நும்மிடம் எம்மைத் தூதாக அனுப்பி அமைதி காக்க விழைகிறான். உங்கள் இருவரிடையே மலர்ந்த நட்பு என்றும் அழியாது இருக்க வேண்டும் என்பதாலேயே நான் காடும் மேடும் கல்லும் முள்ளும் கடந்து நும்மை நாடி வந்தேன். உங்கள் நட்பினால் நாடு, நலமும் வளமும் அமைதியும் இன்பமும் நிறைந்து விளங்கும் என்பதில் ஐயமுண்டோ!

தொண்டைமான் : ஐயமில்லை, அம்மையீர்! உங்கள் அறிவுரையால் என் அறியாமை இருள் நீங்கியது; என் உள்ளம் தெளிவடைந்தது. நீங்கள் தூதாக வந்திராவிடின் இரு நாடுகளும் பல துன்பங்களை அடைந்திருக்கும். அமைதி காத்த அம்மையீர், உங்கள் அறிவுரையை என்றும் மறவேன். அதியமானை என்றும் என் ஆருயிர் நண்பனாகவே மதிப்பேன். இதனை அம்மன்னனிடம் தெரிவித்து, எங்கள் சீரிய நட்பு என்றும் சிறந்து விளங்க உதவி புரிய வேண்டுகிறேன்.

ஔவையார் : நன்று, நன்று. தமிழகத்தே நண்பர் இருவர்க்கிடையே நிகழவிருந்த போரை நீக்கிய பெருமையுடன் செல்கிறேன் நுமது மனமாற்றம் கேட்டு அதியமானும் அளவிலா இன்பம் அடைவான். இப்போதே அவனிடம் சென்று இச் செய்தியைக் கூறுவேன். நல்ல நண்பர்களாகிய நீவிர் இருவரும் அன்புற்று வாழ்க! இன்புற்று வாழ்க! நலமுடன் வாழ்க! வளமுடன் வாழ்க! என அகம் குளிர, முகம் மலர வாழ்த்துகின்றேன்.

(ஔவையார் தொண்டைமானிடம் விடை பெற்றுத் தகடூர் செல்கிறார்)

அருஞ்சொற்பொருள்

கொற்றம் — வெற்றி, தானை — படை, ஒற்றர் — இரகசியத்தை அறிந்து கூறுவோர், பாவை — பொம்மை, உகுப்பர் — சிந்துவர், கொண்டல் — மேகம், பீலி — தோகை.

பயிற்சி

I. விடை எழுதுக:

(1) தொண்டைமான் படையெடுப்பதை அறிந்த அதியமான் மனம் வருந்தக் காரணம் யாது?

(2) ஔவையார் யாரிடம் தூது சென்றார்? ஏன்?

(3) தொண்டைமானின் படைக்கலக் கொட்டிலைக் கண்ட ஔவையார் கூறியன யாவை? அவற்றால் அறியும் கருத்து யாது?

(4) அதியமானின் வீரத்தைப்பற்றித் தொண்டைமானிடம் ஔவையார் கூறியன யாவை?

(5) ஔவையார் தொண்டைமானுக்குக் கூறிய அறிவுரையை எழுதுக.

II. ஔவையாரின் அமைதிப் பணியைப் பதினைந்து வரிகளுக்குள் விளக்கி எழுதுக.

III. (அ) பிரித்து எழுதுக:

அரசவை, இரையாக்கி, கதியிழந்து,
கோழையல்லேன், செய்தியன்றோ, விருந்துண்டு.

(ஆ) சேர்த்து எழுதுக:

களைப்பு + தீர =   உள் + கருத்து =
உலை + களம் =   உம்மை + காண =
அறிவு + கடல் =   மனம் + மாற்றம் =

(இ) சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

பெருமகிழ்வோடு, கதியிழந்து, ஆயத்தமாக,
நிலைபெற, அணியணியாக, மனமாற்றம்.

(ஈ) எளிய தமிழில் பொருள் தருக:

தானை, ஒற்றர், கொண்டல்,
கொற்றம், பாவை, பீலி.

IV. (அ) 'நீங்கள் ஏதோ ஆலோசனை செய்வது போலத் தோன்று கிறது'

(1) இவ்வாறு யார் யாரிடம் கூறினார் ?
(2) 'நீங்கள்' என்பது யார் யாரைக் குறிக்கும் ?
(3) அவர்கள் செய்த ஆலோசனை யாது ?

(ஆ) 'சிங்கத்தின் முன் சிறுநரிக் கூட்டம் என்ன செய்யும்' ?

(1) இதனைக் கூறியவன் யார்? யாரிடம் கூறினான்?
(2) சிங்கம், சிறுநரி — இவை யார் யாரைக் குறிக்கும்?
(3) இக்கூற்றினால் உணரும் கருத்து யாது?

(இ) 'இங்குள்ள படைக்கலங்கள் யாவும் எண்ணெய் தடவி அழகு படுத்தப் பட்டுள்ளன'

(1) இதனை யார் யாரிடம் கூறினார்
(2) இங்கு என்பது எவ்விடத்தைக் குறிக்கும்
(3) இவ்வுரையால் அறியும் உட்கருத்து யாது

(ஈ) 'நீங்கள் தூதாக வந்திராவிடில் இரு நாடுகளும் பல துன்பங் களை அடைந்திருக்கும்'

(1) இதனை யார் யாரிடம் கூறினான்
(2) இரு நாடுகள் யாவை
(3) பல துன்பங்கள் யாவை

(உ) 'நண்பர் இருவருக்கிடையே நிகழவிருந்த போரை நீக்கிய பெருமையுடன் செல்கிறேன்.'

(1) இது யார் கூற்று ?
(2) நண்பர் இருவர் யார் ?
(3) போரை நீக்கியதால் உண்டான பயன் யாது ?

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

கற்க கசடற